# உதயன்

32°c
கூடிய வெப்பநிலை 39°c
குறைந்த வெப்பநிலை 26°c
தெளிவான. வரண்ட காலநிலை காணப்படும்.

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 134 வள்ளுவர் ஆண்டு: 2045 | பங்குனி 26, புதன் 09.04.2014



கிருபா லேணர்ஸ்
சாரதி பயிற்சியில் நம்பிக்கையை வென்ற நிறுவனம்



216, கண்டி வீதி ,வவுனியா.
(வசந்தம் திரை)
024 2227777, 0777100444


## பிந்திய செய்தி

### கோபி கைது?

யாழ்ப்பாணம், ஏப். 9
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் ஒருங்கிணைக்க முயற்சிக்கிறார் என்று அரசு கூறும் நபரான கோபி எனப் படும் கஜீபன் என்பவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. எனினும் அதனை அரச அதிகாரிகளிடம் இருந்து

– 21ஆம் பக்கம் பார்க்க

# கூட்டமைப்பின் எம்.பிக்களை பதவி நீக்க நீதிமன்றத்தில் மனு

## தமிழரசுக் கட்சியை பிரிவினைவாதக் கட்சியென பிரகடனப்படுத்துமாறும் கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 9
தமிழரசுக்கட்சியை பிரிவினை கோரும் அமைப்பு என்று பிரகடனப்படுத்துமாறு கேட்டு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பிரகடனப்படுத்தும் பட்சத்தில் அரசமைப்பின் 6 ஆவது திருத்தத்தின் 5ஆவது பிரிவின் கீழ் தமிழரசுக் கட்சிச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டு வென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் பதவி விலக்க உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எச்.கே.டொன் சந்திரசேனா என்ற நபரால் இந்த மனு உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன் தினம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. களனி, பொல்கென என்ற இடத்திலுள்ள தேசிய வீடமைப்புத் திட்ட ஜி-16 முகவரியில் வசிக்கிறார் இவர். சட்டத்தரணி மதுபாஷினி ராஜபக்ஷ இவரது சார்பில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கைக்குள் தனியான அரசு ஒன்றை உருவாக்குவதை நோக்கமாகவும் இலக்காகவும் கொண்டது இலங்கைத் தமிழரசுக் கட்சி என்று பிரகடனப்படுத்துமாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. அரசமைப்பின் 157ஆவது பிரிவின் பகுதி 'ஏ' யின் நான்காம் உப பிரிவில் சொல்லப்பட்டுள்ளதன்படி எந்த ஒரு அரசியல் கட்சியோ அமைப்போ இலங்கை நாட்டுக்குள் தனி அரசு ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சித்தால் அல்லது அந்த நோக்கத்துடன் செயற்பட்டால் அந்தக் கட்சியை தனி அரசை உருவாக்கும் நோக்கத்துடன் உள்ளவை என்று பிரகடனப்படுத்த வேண்டும். அத்துடன் அந்தக் கட்சியின் தலைவர், செயலாளர் மற்றும்

21ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் தொடர்கிறது 'புலி' தேடும் வேட்டை

## நேற்றும் இருவரைப் பிடித்தது பயங்கரவாத தடுப்புப் பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப்.9
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளமைப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன என்று தெரிவித்து அண்மைக்காலமாக வடக்கில் தமது பாதுகாப்புக் கெடுபிடிகளை சீருடைத் தரப்பினர் அதிகரித்துள்ள நிலையில், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் கைது வேட்டையும் தொடர்ந்தவண்ணம் உள்ளது. நேற்று இரு வர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக குடாநாடெங்கும் இராணுவக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன, விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தேடப்படுகின்றார்கள் என்ற அறிவிப்புகளோடே இந்தப் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக தேடப்படுபவர்கள் என்ற அறிவிப்போடு சிலரது புகைப்படங்கள் அடங்கிய சுவரொட்டிகள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் ஒட்டப்பட்டதோடு, அவர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகின்

21ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை அரசின் தடைக்கு காரணங்கள் என்ன?

## விளக்க வேண்டும் என்று கோருகின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

லண்டன், ஏப்.9
பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பண உதவி செய்கிறவர்கள் என்ற குற்றச்சாட்டில் வெளிநாட்டில் செயற்படும் 16 தமிழ் அமைப்புகளைப் பட்டியல் இட்டிருக்கும் இலங்கை அரசின் செயற்பாடானது மிக விரிவானதாக இருப்பது ஒருபுறமிருக்க நாட்டில் உள்ள தமிழ் சிறுபான்மையினரின் அமைதியான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டதாகவும் உள்ளது. அவ்வாறு சட்டத்துக்கு மாறாக செயற்படுவதற்கான குறிக்கப்பட்ட அமைப்புகளின் அல்லது ஆள்களின் செயற்பாடுகளுக்கான ஆதாரங்களைஅரசுமுன்வைக்கவேண்டும். இல்லையெனில் அந்தப் பட்டியலில் இருந்து அந்தப் பெயர்களை நீக்கிவிட வேண்டும்.- இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் ஆலோசனையின் பேரில் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்ட அறிக்கையொன்றில் 2009 ஆம் ஆண்டு ராணுவ ரீதியில்

21ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணத்துக்கு வருகின்றார் வெள்ளை மாளிகை விருதுக்காரர்



யாழ்ப்பாணம், ஏப்.9
அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் உயர்விருது பெற்ற தமிழ் விஞ்ஞானியும் பௌதிகவியல் பேராசிரியருமாகிய சிவலிங்கம் சிவானந்தன் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள 'சாதனையாளர் சிறப்புரை' நிகழ்வில் கலந்துகொள்ளும் முகமாகவே அவர் இங்கு வரவுள்ளார். இந்தநிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில்பிற்பகல்3.30மணிக்கு நடைபெறவுள்ளது. (ற-5)

# பளையில் மீட்கப்பட்ட உடல் தென்னிலங்கை வாசியுடையது?

யாழ்ப்பாணம், ஏப்.9
பரந்தன் ரயில் நிலையத்திற்கு அருகிலிருந்து கடந்த மாதம் மீட்கப்பட்ட சடலத்திற்குரியவர் தென்னிலங்கையைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று பொலிஸாரின் முதல்

— 21ஆம் பக்கம் பார்க்க

அசாதாரண அறிகுறிகளுடன் மாங்கோலிஸ நிலைமை



பக்கம் 13

# மன்னாரில் எங்கே மனிதப் புதைகுழி? கண்டுபிடிக்கப்பட்டது இடுகாடேதான்

## தான்பிடித்த முயலுக்கு மூன்றுகால் தான் என்கிறார் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம்



யாழ்ப்பாணம், ஏப்.9
மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டது மனிதப் புதை குழியே அல்ல. அது இடுகாடேதான் என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார் தொல்பொருள்திணைக்களப் பணிப்பாளர் நாயகம்.

கடந்த டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி குடி தண்ணீர் குழாய்களை புதைப்பதற்காக குழி தோண்டிய போது மன்னார் மாந்தைப் பகுதியில் மனித உடல் எச்சங்கள்

21ஆம் பக்கம் பார்க்க


'உதயன்' பத்திரிகையை முகநூல் வழியாகவும், டுவிற்றர் மூலமாகவும் வாசகர்கள் பின்தொடர முடியும். உங்கள் கருத்துக்களை அங்கு பகிர்ந்து கொள்ளவும் முடியும்.
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவீற்றர் https://twitter.com/UthayanPrint


# அந்நியோன்னியமாகவே தமிழரும், சிங்களவரும்

## அதை வாசுதான் குழப்புகின்றாரென குற்றஞ்சாட்டுகிறார் குணதாஸ

கொழும்பு, ஏப்.9
தமிழர்களும் சிங்களவர்களும் அன்னியோன்யமாக வாழ்கின்றனர். ஆனால் மீண்டும் நாட்டுக்குப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்திருக்கின்றது அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஐக்கிய மாநாடு பேச்சு" - இவ்வாறு குற்றஞ் சுமத்தியுள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மாநாட்டில் உரையாற்றி இருந்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இலங்கையில் தமிழ் சிங்கள ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வை வழங்கியே ஆக வேண்டும் என்று கூறியிருந்தார். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே குணதாஸ அமரசேகர இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது, "வாசுதேவ மாநாட்டில்' பேசியது முழுவதும் தவறானதொரு கருத்தாகும். தற்போதும் நாட்டில் தமிழ்- சிங்கள மக்கள் ஒற்றுமையுடனும், ஐக்கியத்துடனுமே வாழ்ந்து வருகின்றனர்.

21ஆம் பக்கம் பார்க்க

# நெடியவன் குழுவுடைய முக்கிய தலைவர் கைது

## புலிகளின் மீளுருவாக்கம் குறித்து அவரிடமும் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 9
தமிமீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நெடியவன் குழு என்று கூறப்படும் குழுவின் இரண்டாம் நிலைத் தலைவர் என்று அறியப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். அவரிடம் தற்போது வெளிநாடுகளிலிருந்து புலிகள் அமைப்பை மீளுருவாக்கம்

21ஆம் பக்கம் பார்க்க

# வவுனியாவில் இளம்பெண் உயிரை மாய்க்க முயற்சி

## பேஸ்புக் விவகாரம் காரணமா?

வவுனியா, ஏப்.9
வவுனியாவில் இளம் பெண் ஒருவர் உயிரை மாய்த்துக் கொள்ள எத்தனித்துள்ளார். அவர் தற்போது ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது. 29 வயதுடைய குறித்த பெண் நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தற்போது தீவிர மருத்துவக் கண்காணிப்பின் கீழ் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணை

21ஆம் பக்கம் பார்க்க

# தமிழர்கள் நாடு திரும்பாமைக்கு அரசின் நடவடிக்கையே காரணம்

## தகவல் வெளியிட்டது விக்கி லீக்ஸ்

கொழும்பு,ஏப்.9

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் நாடு திரும்ப விரும்பாதமைக்கு இலங்கை அரசின் செயற்பாடுகளே காரணம் என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதர் பெற்றீசியா ஏ புட்டினிஸ் அரசிடம்தெரிவித்திருந்ததாக, விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தினால் வொஷிங்டன் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய கடிதம் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புட்டினிஸ் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி, உதவி .ராஜாங்கச் செயலர் ரொபர்ட் ஓ பிளேக்கின் வலியுறுத்தலுக்கு அமைவாக இலங்கையின் வெளிவிவ கார அமைச்சராக இருந்த ரோஹித்த போகொல்லாகமவைச் சந்தித்துள்ளார்.

இதன்போது சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமை, எம்.ரி.வி வலையமைப்பின் மீதான தாக்குதல் மற்றும் அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க செயலர் ஹிலரி கிளின்டன் இலங்கைக்கு எதிரான பொருளாதார தடையை விதிக்க முற்படுவதாக கூறிய, பாலித்த கோஹன்னவை மேற்கோள் காட்டி பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த அறிக்கை போன்ற விடயங்களுக்கு கண்டனம் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான அரசின் முறையற்ற செயற்பாடுகள் வெளிநாடுகளுக்கு பிழையான சமிக்ஞைகளை அனுப்புகின்றன.

அதனாலேயே புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் இலங்கைக்கு வந்து, அபிவிருத்திகளுக்கு ஒத்துழைக்க மறுக்கின்றனர் என்று புட்டினிஸ் சுட்டிக்காட்டியிருந்தார். எனினும் இந்த விட யங்கள் தொடர்பில் அவதா னம் செலுத்துவதாக போகொல் லாகம உறுதியளித்திருந்ததாகக் கூறப்படுகிறது. (ச)

# புலிகளைத் தோற்கடித்த ஜனாதிபதிக்கு பாராட்டு

கொழும்பு, ஏப். 9

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தமைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரி, வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களையும் மெச்சியுள்ளார்.

இலங்கைக்கு ஐந்து நாள் பயணமாக வந்துள்ள பாகிஸ்தான் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் ரஷ்ஜுச் மஹ்மூத் தலைமையிலான குழுவினர் நேற்று மாலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினர்.

அந்தச் சந்திப்பில் கருத்துரைத்த மஹ்மூத், "மூன்று தசாப்தங்களாக நீடித்த போரை முடிவுக்கு கொண்டு வந்ததன் மூலம் இலங்கை இந்தப் பிராந்தியத்தில் மிகப்பெரியதொரு சாதனையைப் படைத்துள்ளது. இதற்காக இலங்கை புரிந்துள்ள தியாகங்களை பாகிஸ்தானைத் தவிர வேறு எந்த நாட்டாலும் சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியாது. இலங்கையின் வெற்றியானது பரந்தளவிலான விளைவுகளை உண்டு பண்ணியுள்ளது. உலகம், இலங்கையிடமிருந்து நிறைய கற்க வேண்டும் என்பதை இது உணர்த்துகின்றது. மேலும் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் சிறப்பாக இருக்கின்றன"- என்று தெரிவித்துள்ளார். (ந-5)


# சடலத்தை இனங்காட்ட கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.9

கிளிநொச்சி பரந்தன் ரயில் பாதைக்கு அருகில் கடந்த மாதம் 13 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கிளிநொச்சி பொது வைத்திய சால்ல பொறுப்பு வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

கடந்த மாதம் 13 ஆம் திகதி பிற்பகல் 5.45 மணிக்கு கிளிநொச்சி பரந்தன் ரயில் பாதைக்கு அருகில் குறித்த சடலம் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. குறித்த சடலம் இதுவரை இனங்காணப்படவிலை.

எனவே சடலத்தை இனங்காண உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-55)



வியட்நாம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழுவினர் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் இரு தரப்பு உறவுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

# இரும்பு திருடிய குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.9

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2 பிள்ளைகளின் தந்தையான ஊர்காவற்றுறை அயித்தான் புலத்தைச் சேர்ந்த அந்தோனிசாமி வசந்தரூபன் (வயது 29) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

காரைநகரில் பல இடங்களில் பழைய இரும்புகளைத் திருடிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. குறித்த நபர் ஊர்காவற்றுறையில் இரும்புக் கடை நடத்திவருகிறார். அவரது கடையில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-4)

# விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.9

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்ற வடக்கின் போர் துடுப்பாட்டத்தில் இரசிகர்களுக்கிடையே இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து இடம்பெற்ற கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 8 பேரில் 5 பேர் கடந்த தவணையின் போது சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த 15 ஆம் திகதி வட்டு யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே பொன் அணிகளின் போர் எனப் [illegible] துடுப்பாட்டப் போட்டி இடம்பெற்றது. அதன்போது குருநகரைச் சேர்ந்த தர்சன் அமலன் (வயது 23) என்பவரே அடித்துக் கொலை செய்யப்பட்டார். (ந-4)

# ஹைஏஸ் வானில் ஆயுதங்கள்; கைதானவர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஏப்.9

மண்டைதீவுச் சந்தியில் ஹைஏஸ் வாகனத்தில் யுவதி ஒருவருடன் வாள்கள் மற்றும் இரும்புக் கம்பிகள் சகிதம் பயணித்த போது கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விள்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றுஉத்தரவிட்டுள்ளது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வாகனத்தில் வாள் மற்றும் இரும்புக் கம்பிகளுடன் மண்டைதீவுக்குச் சென்று அங்கு குறித்த யுவதி ஒருவரை வாகனத்தில் ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய போதே மண்டைதீவுச் சந்தியில வைத்து பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் வாகன பரிசோதனையின் போதே வாகனத்தின் ஆசனங்களின் கீழ் ஆயுதங்களை மறைத்து வைத்துக் கொண்டு சென்றமையும், அவர்களுடன் சென்ற யுவதி சந்தேகநபர்களில் ஒருவரை காதலித்துள்ளார் என்றும் தெரியவந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

# பிழையான தலைமையின் கீழ் மக்கள் சேவையாற்ற முடியாது

## ஐ.ம.முன்னணியில் இருந்து நீக்கப்பட்ட குமரகுருபரன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஏப். 9

மனோ கணேசன் விடும் பிழைகளைச் சுட்டிக்காட்டுவது அவருக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் அவர் கட்சியிலிருந்து என்னை நீக்குகின்றார். அவர் நீக்குவதற்காக எடுக்கும் முயற்சிகளை சட்டரீதியாக கேள்விக்குட்படுத்தி என்னால் வெற்றி பெற முடியும். இருப்பினும் இவ்வாறான தலைமைத்துவத்துடனிருந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்ற முடியாது. அதனால் ஜனநாயக மக்கள் முன்னணியில் தொடர்வது ஏற்றதல்ல என்றே நான் கருதுகின்றேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார் நல்லையா குமரகுருபரன்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவராகப் பதவி வகித்த நல்லையா குமரகுருபரன் கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளார் என்று அறிவித்திருந்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன். அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே நல்லையா குமரகுருபரன் நீண்ட ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

"என்னை இடைநிறுத்தம் செய்வதும், பிரதித் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சட்டரீதியாக தவறானவை. அவ்வாறு நீக்கப்படுவது தொடர்பிலான பிரேரணை நிகழ்சி நிரலில் உள்ளடக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு அதன் பின்னரே அது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்ற முடியும். அதை விடுத்து அவசர அவசரமாக கூட்டம் கூடி முடிவெடுக்க முடியாது. அத்துடன் குறித்த கூட்டம் தொடர்பில் எனக்கும் அறிவித்தல்வழங்கப்படவில்லை. இவ்வாறான சட்டரீதியான பிழைகளைச் சுட்டிக்காட்டி என்னால் நீதிமன்றத்தில் இதனை முறியடிக்க முடியும். ஆனாலும், இவ்வாறு பிழையான வழியில் செல்லுகின்ற தலைவர்களுடன் இணைந்து என்னால் அரசியலை முன்னெடுக்க முடியாது. நான் ஒரு போதும் அரசுடன் சேர மாட்டேன். தொடர்ந்தும் தலைநகரத் தமிழர்களுக்காக சேவையாற்றுவேன்"- என்று தெரிவித்துள்ளார். (ந-5)

விரிவான அறிக்கையைப் பார்வையிட உதயன் முகநூல் பக்கத்துடன் இணைந்திருங்கள்.
- facebook.com/pages/Uthayan-Print/626660117412053

# அபிவிருத்தி முன்னேற்றம் குறித்து உலக வங்கிக் குழு நேரில் ஆராய்வு

## மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில்

மன்னார், ஏப்.9

உலக வங்கியின் நிதி உதவியுடன் நெல்சிப்திட்டத்தின் கீழ் மன்னார் நகர சபை பிரிவுக்குட் பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உலக வங்கியின் விசேட பிரதிநிதிகள் நேற்று விரிவாக ஆராய்ந்தனர்.

இந்த குழுவில் உலக வங்கியின் திட்ட ஆலோசகர் எஸ். மனோகரன், ஆஸ்திரேலிய தூதரகத்தின் முதல் நிலை செயலாளர் எஸ்.ஸ்ரிபன், அவரது உதவியாளர் திருமதி எஸ். டில்காரா ஆகியோர் இடம்பெற்று இருந்தனர்.



உலக வங்கி பிரதிநிதிகளுடன் மன்னார் நகரசபையினர்

குறித்த குழுவினர் நேற்று காலை 9.30 மணியளவில் மன்னார் நகர சபையில் விசேட கலந்துரையாடல்ஒன்றில்கலந்து கொண்டனர். இதன் போது உலக வங்கியின் நிதி உதவியுடன் நெல்சிப் திட்டத்தினூடாக மன்னார் நகர சபைக்கென வழங்கப்பட்ட 96 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அங்கு நடைபெறும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

அத்துடன் மன்னார் நகர சபையின் எதிர் கால நடவடிக்கை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், செயலாளர் லெனாட் பிரிட்டோ லெம்பேட்,உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ்,நகர சபை உறுப்பினர்கள்,மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.துரம் மற்றும் மன்னார் நகர சபையின் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-56)

### வாழ்வின் எழுச்சி விற்பனைச் சந்தை

சங்கானை, ஏப்.9
வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் வாழ்வின் எழுச்சி விற்பனைச் சந்தை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வட்டு இந்துக் கல்லூரியில் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறுகின்றது.
பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரஞ்சிதமலர் மோகனேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மாவட்ட செயலக சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரனும் கலந்து கொள்கின்றனர். (ஒ-9)

# இணைந்த சேவைகள் அலுவலர்களின் வருடாந்த இடமாற்றம் நிறுத்தப்பட்டது

## ஆளுநரின் உத்தரவின் பேரில்

**வருடாந்த இட மாற்றம் மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதம செயலாளர் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.**


தென்மராட்சி,ஏப்.9
வடமாகாண பிரதம செயலாளர் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதம செயலாளர் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப் படுமென அறிவிக்கப்பட்டிருந்த இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மாகாண பிரதம செயலாளர் ஆர். எஸ்.துரைராஜா அறிவித்துள்ளார்.
அத்துடன் இனிவரும் காலங்களில் இரு திணைக்களங்களுக்கு இடையேயான இடமாற்றங்களில் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் ஒத்திசைவோடு மட்டும் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும். வெவ்வேறு மாவட்டங்களுக்கு இடையேயான இடமாற்றங்கள் ஒத்திசைவோடு பெற்றுக் கொள்ள விரும்பும் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் பிரத்தியேகமாக கருத்தில் கொள்ளப்படும்.
வெளி மாவட்டங்களுக்கான இடமாற்றங்கள் பெற விரும்பும் உத்தியோகத்தர்கள் மட்டும் தனிப்பட்ட தமது ஒப்புதல் மூலம் மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (வ-9)

# திருநெல்வேலி சந்தைப்பகுதியில் துர்நாற்றம் வீசும் கழிவுகள்



வீசப்பட்ட கழிவுப் பொருள்கள் தேங்கிய நிலையில்


யாழ்ப்பாணம், ஏப். 9
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட திருநெல்வேலி சந்தைப் பகுதியில் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாது தேங்கிக் கிடப்பதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு வியாபாரிகளும் மற்றும் பொதுமக்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேச சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் வெளிக்களப் பணிப்புறக்கணிப்பு தொடர்ச்சியாக இடம்பெறுவ தால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.
பிரதான சந்தையாக விளங்கும் திருநெல்வேலி சந்தை மற்றும் அதனை அண்டிய சுற்றாடல் பகுதி கடந்த ஒரு வார காலமாக துப்புரவு செய்யப்படாது கழிவுகள் தேங்கிக் காணப்படுகிறது. இதனால் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டுள்ளது.
சந்தையின் உட்பகுதி மற்றும் கீழ்மாடித் தொகுதிகளில் அழுகிய மரக்கறிகள் மற்றும் கழிவுகள் கொட்டப்பட்டு தேங்கிக் காணப்படுகின்றன.
இந்த கழிவுகளில் இருந்து இலையான்களின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன் இந்தக் கழிவுகளை கால்நடைகள் தமது உணவுக்குப் பயன்படுத்துவதோடு பறவைகள் அதை எடுத்துச் சென்று வேறு இடங்களில் போட்டுவிட்டுச் செல்கின்றன. இது குறித்து நல்லூர்ப் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்த குமாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:
பொது சுகாதார பரிசோதகர்களின் வெளிக்களப் பணிப் புறக்கணிப்பால் சந்தை, சுற்றாடல் போன்றவற்றை துப்புரவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இது தொடர்பாக முறைப்பாடுகள் தனக்குக் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.
அத்துடன் பிரதேச சபைகளின் கொல்களத்தில் கால் நடைகளை இறைச்சிக்காக வெட்டும் பணிகளும் பாதிக்கபட்டுள்ளன. இதனால் நுகர்வோர் இறைச்சிக்காக சிரமப்படுவதோடு இறைச்சிக்கடை உரிமையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். (வ-17)



சுமார் 24 வருடங்கள் ஆளரவம் இன்றிக் காணப்பட்ட தெல்லிப்பழை ரயில் நிலையத்தைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. ரயில் நிலைய வீதியை மூடியிருந்த பற்றைகள் வெட்டி அகற்றப்பட்டுள்ளன. தொடர்ந்து திருத்தப் பணிகள் நடைபெறுகின்றன. ரயில் நிலைய பழைய மேடை நேற்று கனரக வாகனம் மூலம் அகற்றப்பட்டது. (ஒ-36)

# சங்கானை மருத்துவமனையை பார்வையிட்ட வரணி பிரதேச நோயாளர் நலன்புரி சங்கத்தினர்

வரணி,ஏப்.9
வரணி பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் சங்கானை பிரதேச மருத்துவமனைக்கு நல்லெண்ணப் பயணம் ஒன்றை சனிக்கிழமை மேற்கொண்டு அங்கு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்களை நேரடியாகப் பார்வையிட்டனர்.
குறித்த மருத்துவமனையில் நலன்புரி சங்கத்தினர் மற்றும் கொடையாளிகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட நிதி உதவிமூலம் மருத்துவமனையின் பௌதிக வளங்கள் பல அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையில் அவற்றின் செயற்பாடுகளை நேரில் கண்டு அதன்மூலம் தாமும் தமது மருத்துவமனையில் செய்யப்பட வேண்டிய விடயங்களை செயற்படுத்தும் முகமாகவே இந்த நல்லெண்ண விடயத்தை மேற்கொண்டிருந்தனர்.
மருத்துவமனை சென்றடைந்த நலன்புரி சங்கத்தை பொறுப்பு வைத்திய அதிகாரி த.பிரகாசன் வரவேற்று மருத்துவமனையின் சகல பிரிவுகளுக்கும் கூட்டிச் சென்று காட்டியதுடன் உரிய விளக்கத்தையும் கொடுத்தார். மருத்துவ மனையில் மேற்கொள்ளப்படும் சிகிச்சை வசதிகள் குறித்தும் விளக்கமளித்தார்.



சங்கானை மருத்துவமனையைப் பார்வையிடும்வரணி நலன்புரி சங்கத்தினர்

முடிவில் குழுவினருடன் கலந்துரையாடலிலும் மருத்துவர் த.பிரகாசன் ஈடுபட்டார்.
இதன்போது அவர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.கேதீஸ்வரனின் வழிகாட்டலில் எமது வைத்தியசாலையின் உத்தி யோகத்தர்களுக்கும் ஊழியர் களுக்கும் ஜப்பானிய 5S நடைமுறை தொடர்பில் பயிற்சியளிக்கப் பட்டது. இதன்பின் எமது மருத்துவமனையிலும் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அவாவுடன் அவர்கள் முன்வந்தனர்.
இதன் ஆரம்ப வேலைகளுக்கு எமது மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இணைந்து தமது சொந்தப் பணத்தில் அன் பளிப்பாக ரூபா 150, 000ஐ அன்பளிப் பாக வழங்கியது டன் இரவு பகல் என்று பாராமல் தமது பங்களிப்பையும்வழங்கியிருந்தனர். அவர்களுடன் இணைந்து நோயாளர் நலன்புரி சங்கமும், நன்கொடைகளைப் பெற்றுத் தருவதில் முனைப்பாக செயற்பட்டது. வங்கிகள், நிறுவனங்கள், தனி நபர்களின் நிதிப் பங்களிப்பின் மூலம் குறித்த மருத்துவமனை புனரமைக்கப்பட் டதுடன் குறிப்பாக 'வேள்ட் விஷன்' நிறுவனத்தின் உதவியுடன் மகப் பேற்று மருத்துவமனையும் மிக நவீன முறையில் சிறுவர் விடுதியும் நிறுவப்பட்டது" -என்றார். இன்று பலர் பிற மருத்துவமனைகளில் இருந்துவந்து பார் வையிட்டுச் செல்லுமளவுக்கு எமது மருத்துவமனை முன்னோடியாக விளங்குகின்றது.
கடந்த வாரம் கூட அநுராதபுரம் பகுதியில் இருந்து 65க்கும் மேற்பட்டோர் வருகை தந்து எமது மருத்துவ மனையைப் பார்வையிட்டுச் சென்றனர். இதன்போது குறித்த மருத்துவமனையின் நோயாளர் நலன்புரி சங்கச் செயலாளர் கு.குணசிறீ தமது சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் நீண்ட விளக்கம் அளித்தார்.
வரணி மருத்துவமனை நலன்புரி சங்கத்தினர் மருத்துவ மனை பணியாளர் உட்பட 13 பேர் இந்த மருத்துவ மனைக்கு பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ-122)



# நவக்கிரியில் அதிசய ஆட்டுக்குட்டி

*நீர்வேலி,ஏப்.9*
*புத்தூர், நவக்கிரிப் பகுதியிலுள்ள ஒருவரின் ஆடுகளில் ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிசயிக்கத் தக்க ஆட்டுக்குட்டியொன்றை ஈன்றுள்ளது.*
*அந்த ஆட்டுக்குட்டிக்கு எட்டுக் கால்கள், நான்கு செவிகள் என்ற வகையில் இரண்டு குட்டிகள் இணைந்து உருவானது எனக்கொள்ளப்படும் விதத்தில் இந்தக் குட்டி காணப்படுகின்ற போதும், அதற்கு ஒரேயொரு தலைதான் இருந்தது.*
*உயிருடன் பிறந்த இந்த ஆட்டுக்குட்டி சில நிமிடங்களில் இறந்து விட்டது. இந்த அதிசயம் குறித்து அறிந்த கிராம மக்கள் அங்கு கூடினர். அதனைப் பார்த்து வியந்தனர். ஆட்டின் உரிமையாளர் து.பாலையா.* (ஒ-36)

# சீனி உற்பத்தி மூலம் பெரியளவில் இலாபம்

### *சீனி உற்பத்தி அபிவிருத்தித்துறை அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.9

செவனகல மற்றும் பலவத்த சீனித் தொழிற்சாலைகளின் ஊடாக கடந்த இரண்டு வருட காலப் பகுதியினுள், 134 கோடி ரூபா நிகரலாபமாக பெறப்பட்டுள்ளதாக சீனி உற்பத்தி அபிவிருத்தித்துறை அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நிகரலாபமாகப் பெறப்பட்டுள்ள இந்த தொகையில் 20 சதவீதத்தை, சீனி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் தொழிற்சாலை ஊழியர்களுக்கு இடையே பகிர்ந்தளிக்க அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இதுதொடர்பான நிகழ்வொன்று நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அந்த நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 20 சதவீத இலாபத்தை விவசாயிகளுக்கும் ஊழியர்களுக்கும் வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முதன்முறை யாக வழங்கப்படும் இந்தத் திட்டத்தின் ஊடாக சம்பந்தப் பட்டவர்களின் குடும்ப வாழ் வாதாரம் மேம்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (வ)

**முதன் முறையாக வழங்கப்படும் இந்தத் திட்டத்தின் ஊடாக சம்பந்தப் பட்டவர்களின் குடும்ப வாழ் வாதாரம் மேம்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.**

# தமிழீழம் உருவாக்கப்படுவதில் பா.ஜ.கவுக்கு உடன்பாடில்லை

### *வைகோ கூறுகிறார்*

சென்னை, ஏப்.9

தமிழ் ஈழம் உருவாவது குறித்து பா.ஜ.கவுக்கு உடன்பாடு இல்லை என்று வைகோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

பல்வேறு கொள்கைகளைக் கொண்ட கட்சிகள், ஒரு தேர்தலைச் சந்திப்பதற்காக கூட்டணி அமைக்கின்றன. அதற்காக அவர்கள் தங்களுடைய கொள்கைகளை விட்டுக் கொடுப்பது இல்லை. இந்த தேர்தலில் நாம் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்து இருக்கின்றோம். தமிழீழம் உருவாகுவது குறித்து பா.ஜ.க.வுக்கு உடன்பாடு இல்லை; அவர்களுடைய பொது சிவில் சட்டம் என்ற கோட்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

2002 ஆம் ஆண்டு, நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்த, பொது சிவில் சட்டம் என்ற பிரேரணை அறிமுக நிலையிலேயே நாம் எதிர்த்தோம். பனத்வாலா எதிர்த்தார். எனவே, பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அப்போது அமைச்சர் பிரமோத் மகாஜன் என்னிடம் வந்தார்.

"வைகோ இந்த பிரச்சினையில் உங்கள் கொள்கை என்ன என்பது எங்களுக்கு தெரியும். நீங்கள் பிரேரணையை எதிர்த்து வாக்கு அளிக்க வேண்டாம்; ஆதரித்தும் வாக்கு அளிக்க வேண்டாம். வாக்கெடுப்பு நிகழ்கின்ற வேளையில், அவையில் இருந்து வெளியேறி விடுங்கள்" - என்றார்.



வைகோ

"மன்னிக்க வேண்டும். நாம் இந்தப் பிரேரணையை எதிர்த்து வாக்கு அளிப்போம்" என்று நான் கூறினேன். அதன்படியே எதிர்த்து வாக்கு அளித்தோம். பனத்வாலா எனக்கு நன்றி தெரிவித்ததோடு மட்டும் அல்ல, கவிக்கோ அப்துல் ரகுமானிடமும் இதைக்கூறி, வைகோ கொள்கையில் உறுதியானவர் என்று பாராட்டி இருக்கின்றார்.

ஆனால், அப்போது அதே கூட்டணியில் இருந்த தி.மு.க., அந்த மசோதாவை ஆதரித்து, பொது சிவில் சட்டத்துக்கு ஆதரவாக வாக்கு அளித்தது. பா.ஜ.க.வோடு கூட்டணி சேர்ந்ததற்காக எங்களைக் குறை கூறும் காங்கிரஸ் கட்சியினர் எந்த அடிப் படையில் தி.மு.க.வோடு கூட்டணி வைத்திருந்தார்கள் என்று கூறியுள்ளார். (வ)

# இறுதிப்போரில் இலங்கைக்கு உதவிய இந்திய அதிகாரிகள்; மீதான விசாரணை நடத்த புலனாய்வுக்குழு அமைக்க கோரிக்கை

### *புதுடில்லி உச்ச நீதிமன்றில் பொதுநல வழக்கு தாக்கல்*

சென்னை, ஏப்.9

இலங்கையில் தமிழர்கள் மீது கொடூரத் தாக்குதல் புரிந்த இலங்கை அரசு மற்றும் இராணுவத்துக்கு உடந்தையாக இருந்த இந்திய அரசு அதிகாரிகள் மீது விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வு குழுவை அமைக்க வேண்டும் என்று புதுடில்லி உச்ச நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 2008-2009 ஆம் ஆண்டு களில் நடைபெற்ற இறுதிகட்ட போரின்போது ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்துக்கு இந்திய அதிகாரிகளும் துணைபோனதாகக் கூறி, அவர்கள் மீது சிறப்பு விசாரணை நடத்த வசதியாக புலனாய்வுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று, டில்லி மேல்நீதிமன்றில் தமிழ் சட்டவாளர் சங்கச் செயலாளர். ராம்சங்கர் பொது நலவழக்குதாக்கல்செய்துள்ளார்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது:-

இலங்கையில் கடந்த 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் மீது அந்நாட்டு அரசு மிகவும் கொடுமையான இன ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டது. இந்த கொடுமையான சம்பவத்தில் இலங்கை இராணுவத்தினரால் சுமார் 40,000 தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப் பட்டனர். தமிழர்கள் தங்கள் வீடுகளை, குடும்பங்களை இழந்து பல நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நா. செயலாளர் நியமித்த சர்வதேச நிபுணர் குழுவின் அறிக்கையில், இலங்கையின் குடிமக்களுக்கு எதிரான போரில் இலங் கைக்கு இந்திய இராணுவமும் ஒத்துழைப்பு நல்கியது என்று கூறப் பட்டுள்ளது. மேலும் இலங்கைக்கு உதவியாக இந்திய இராணுவம் பயன்படுத்தப்பட்டதை, இந்திய தூதர் 09-09-2008 அன்று பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்கு கொடுத்த பேட்டியில் உறுதி செய்துள்ளார்.

இவ்வாறு இந்திய அரசின் இரகசியமான ஒத்துழைப்புடன் இனஒழிப்பு செயல்களில் இலங்கை ஈடுபட்டுள்ளது. இந்திய அரசியல் சட்டப் பிரிவு 53 (2) இன்படி, இந்திய நாட்டின் பாதுகாப்புக்காக அந்நிய நாட்டின் மீது படையெடுப்பதற்கு இந்திய ஜனாதிபதியின் ஒப்புதல் பெற வேண்டும். ஏனென்றால் இந்திய ஜனாதிபதி இந்திய இராணுவத்தின் தலைவரும் ஆவார். அதே போல, இந்தியாவின் பாதுகாப்பு தவிர வேறு எந்தப் பணிக்கும் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இன்றி இந்திய இராணுவத்தை பயன்படுத்த முடியாது. ஆனால் இலங்கையின் உள்நாட்டு பிரச்சினைகளில் உதவி புரிவதற்கு நாடாளுமன்ற ஒப்புதலை இந்திய இராணுவம் பெறவில்லை. எனவே இந்திய இராணுவத்தின் இந்த செயல் சட்டவிரோதமானது. இந்தப் பிரச்சினையில் உச்ச நீதி மன்றம் தலையிட்டு, இந்திய இராணுவத்தின் சட்டமீறல்கள் குறித்து சுதந் திரமான விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வுக்குழு ஒன்றை அமைக்க உத்தரவிட வேண்டும்.

மேலும் சட்டத்துக்கு புறம்பாக நடந்து கொண்ட அதிகாரிகளுக்கு சட்டத்தின் அடிப்படையில் உரிய தண்டனைகள் வழங்கப்படவேண்டும். இந்தப்போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் வழிவகை செய்ய வேண்டும்"- என்றுள்ளது. (வ)

**இந்தியாவின் பாதுகாப்பு தவிர வேறு எந்தப் பணிக்கும் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இன்றி இந்திய இராணுவத்தை பயன்படுத்த முடியாது. ஆனால் இலங்கை யின் உள்நாட்டு பிரச்சினை களில் உதவி புரிவதற்கு நாடாளுமன்ற ஒப்புதலை இந்திய இராணுவம் பெறவில்லை.**

## போலி நாணயத் தாள்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.9 .

போலி ஆயிரம் ரூபா நாணய தாள்களுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை - வீரகெட்டிய கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்ற ஒருவர், போலிஆயிரம்ரூபாவை கொடுத்து எரிபொருள் நிரப்ப முயன்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், அந்த நாணயத்தாள் குறித்து சந்தேகம் கொண்டு, அது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையிலேயே அது போலி நாணயத் தாள் என்று கண்டுபிடிக்கப்பட்டதாகபொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் வலஸ்முல்ல நீதிமன்றில் முன்னிலை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## பாடசாலை கட்டடத்திற்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஏப்.9

உடுவில் மகளிர் கல்லூரி யின் 190 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நிறுவுனர் பிறந்த தின நிகழ்வும், கௌரவிப்பும் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கல்லூரியின் நிறுவனர் கரியந் இன்சிலோவின் இறந்த தின நினைவு கூறல் நிகழ்வும் புதிய கட்டத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.



## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் டினோஜன் (பவன்)



யாழ்ப்பாணம் கிடாய்விழுந்தானை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் டினோஜன் (பவன்) என்பவர் நேற்று (08.04.2014) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2014)வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் 48/9, பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கை எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**48/9, பருத்தித்துறை வீதி,**
**1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# இலங்கையில் தமிழரைக் காக்கத் தவறிய தி.மு.க.

### *ஜெயலலிதா குற்றச்சாட்டு*



சென்னை, ஏப்.9

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்ட போது அதை தடுக்க தி.மு.க. தவறிவிட்டது என்று ஜெயலலிதா குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரக்கோணம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டி யிடும் வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா பரப்புரை மேற்கொண்டார். இதன் போது அவர் மேலும் பேசுகையில்;

"சாமானிய மக்களுக்கு எதி ராக காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சி நடத்தியது. அவர்களின் ஆட்சியில் மக்கள் எண்ணற்ற பிரச்சினை களைச் சந்தித்துள்ளனர். காங்கிரஸ் தலைமையிலான மக்கள் விரோத ஆட்சியில் சில மாதங்களுக்கு முன்பு வரை தி.மு.கவும் அங்கம் வகித்தது.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்ட போது அதை தி.மு.க. தடுக்கத் தவறி விட்டது. அதேபோல் காவிரி, முல்லை பெரியாறு விவகா ரத்தில் தி.மு.க. மௌனம் காத்து தமிழர்களுக்கு துரோ கம் இழைத்து விட்டது.

இருப்பினும் தமிழக மக்க ளுக்கு பல்வேறு நலத்திட்டங் களை தமிழக அரசு செயற்படுத்தி வருகிறது. சிறுபான்மையினருக்கான இட ஒதுக்கீட்டுக்காகத் தொடர்ந்து போராடி வரும் ஒரே இயக்கம் அ.தி.மு.க. தான். எனவே இந்த நலத் திட்டங்கள் தொடர அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள்"- என்றார். (வ)

## மத்தியஸ்தம் தொடர்பான செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாணத்தில் நாளை நடைபெறவிருந்த மத்தியஸ்தம் தொடர்பான நீதியமைச்சின் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மத்தியஸ்தர் சபை உத்தியோகத்தர் சனாதன சர்மா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் நீதிபதிகள் மற்றும் பொலிஸாருக்கு மத்தியஸ்தம் தொடர்பிலான செயலமர்வு நாளை வியாழக்கிழமை, யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்தது. இருப்பினும் தவிர்க்க முடியாத காரணங்களினால் அது தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ற-5)

# கட்டட வேலைகள் முடிவுற்றதும் கொடுப்பனவை வழங்காமல் 'கம்பி நீட்டும்' ஒப்பந்தகாரர்கள்

## உடன்படிக்கை, ஆவணங்கள் இல்லாததால் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை என்கிறார் பிரதித் தொழில் ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஏப்.9
தென் பகுதியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரர்கள் வடக்கில் உள்ள ஒப்பந்த காரர்களைக் கொண்டு பல்வேறுபட்ட உப பணிகளை மேற்கொண்டு விட்டு அவர்களின் வேலைக்குரிய கொடுப்பனவை வழங்காது தலைமறைவாகி விடும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான மோசடிகள் குறித்து தொழில் ஆணையாளர் அலுவலகத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன என்று பிரதி தொழில் ஆணையாளர் கே.கன கேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தென்பகுதி கட்டட ஒப்பந்தகாரர்கள் இங்குள்ள ஒப்பந்தகாரர்களைக் கொண்டு அநேகமான கட்டடங்களுக்கான உப தொழில்பணிகளைமேற்கொண்டுள்ளனர். பணிகள் முடிந்தவுடன் அதற்குரிய கொடுப்பனவுகளை வழங் காது அவர்கள் தலைமறைவாகி விடுகின்றனர்.

> ஒப்பந்தகாரர்களிடம் இங் குள்ள உப ஒப்பந்தகாரர்கள் எழுத்து மூலமாகவோ அல் லது ஏதாவது உடன்படிக் கைக்கு அமைவாகவோ அதற்கான தொழிலை மேற் கொண்டதற்கான ஆவணங் கள் எவையும் இல்லை.

இவ்வாறு ஏமாற்றப்பட்ட பலர் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப்பாடுகளை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு தொழில் திணைக்களம் சிரமப்பட்டு வருகிறது.

ஒப்பந்தகாரர்களிடம் இங்குள்ள உப ஒப்பந்தகாரர்கள் எழுத்து மூலமாகவோ அல்லது ஏதாவது உடன்படிக்கைக்கு அமைவாகவோ அதற்கான தொழிலை மேற்கொண்டதற்கான ஆவணங்கள் எவையும் இல்லை. அதனால் இந்த முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்க முடியாத நிலை உள்ளது.

அதனால் ஒப்பந்தகாரர்கள் மற்றும் கட்டடத் தொழிலாளர்கள் எழுத்து மூலமான உடன்படிக்கை அல்லது ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு இனி வரும் காலத்தில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுமாறு பிரதி தொழில் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். (ஓ-17)

## கடைகள் உடைத்து பொருள்கள் திருட்டு

வரணி, ஏப்.9
வரணி பிரதேசத்தில் மாசேரி கிராம அலுவலர் பிரிவில் கடந்த சனிக்கிழமை இரவு இரண்டு வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

குறித்த வியாபார நிலையங்கள் இரண்டும் சிறிய தூர இடைவெளியில் அமைந்துள்ளன. இவற்றில் ஒரு வியாபார நிலையம் முன்னரும் இரண்டு முறைகள் களவு இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. மற்றைய வியாபார நிலையத்திலும் முன்பு ஒரு தடவை களவு இடம்பெற்றிருந்தது.

இது தொடர்பில் கொடி காமம் பொலிஸாருக்கு அறி விக்கப்பட்டதையடுத்து பொலிஸார் அந்த இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-122)

## வலி.தென்மேற்கு பிரதேச சபையில் உறுப்பினரிடையே கடும் வாக்குவாதம்

வலி.தென்மேற்கு, ஏப்.9
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவருக்கும் எதிரணி உறுப்பினர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட சொற்போர் உச்சக் கட்டத்தையடைந்த போது அமைதியை நிலைநாட்ட முடியாத நிலையில் சிறப்புக் கூட்டத்தை ஒத்தி வைத்துவிட்டு சபை மண்டபத்தை விட்டு வெளியேறினார் பதில் தவிசாளர்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ள ஐந்து வீதிகளுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு சபைக்குக் கிடைத்த போதிலும் ஒப்பந்தகாரர்களுக்கு அந்த நிதியை வழங்காமல் காலம் கடத்தி வருவது குறித்து ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிரணி உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினர். அவ்வேளையிலேயே தர்க்கம் ஏற்பட்டது.

முரண்பாடு தணிந்ததைத் தொடர்ந்து பதில் தவிசாளர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. (ஓ-115)




கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்துக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக் கட்டடம் ஞாயிறன்று திறந்து வைக்கப்பட்டது. (வ-17)

## பன்றித்தலைச்சி அம்மன் ஆலய உற்சவத்தில் திருடர் கைவரிசை

தென்மராட்சி, ஏப்.9
மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவமான நேற்று முன் தினம் மூன்று தங்க ஆபரணங்கள் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினரால் தெரிவிக்கப் பட்டது.

இந்த முறை நான்கு திங்கட் கிழமைகளிலும் பெருமளவு அடியார்கள் வருகை தந்திருந்த போதிலும், நான்காம் திங்களான நேற்று முன்தினம் தான் திருட்டுக்கள் இடம்பெற் றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

> மூன்று தங்க ஆபர ணங்கள் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசி கள் திருடப்பட் டுள்ளன.

மேலும், இந்த வருடம் பெருமளவு பொலிஸார் சிவிலிலும் சீருடையுடனும் கடமையாற்றியதாகவும் அவர்களுடன் கிளிநொச்சி, வடமராட்சி , தென்மராட்சி பிரதேச பாடசாலைகளின் சாரணர்களும் முதலுதவிச் சங்கத்தினரும் அடியார்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## யாழ். - ஊர்காவற்றுறை வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.9
யாழ். - ஊர்காவற்றுறை வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

பண்ணைப் பாலத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டு வரும் குறித்த வீதி, அங்கிருந்து ஊர்காவற்றுறை வரை தார் வீதியாக அமைக்கப்படவிருக்கும் நிலையில் பல இடங்களில் பள்ளம் திட்டியாகக் காணப்படுகிறது.

மேலும் இவ்வீதியின் அருகில் பல இடங்களில் வீதி குறுகியதாகவும் காணப்படுகின்றது. எனவே அந்த இடங்கள் அகலப்படுத்தப்பட்டுக் கற்கள் நிரவப்பட்டு புனரமைப்புப் பணிகள் தற்போது துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. (வ-51)



*ஒரு கிலோ மீற்றர் வரை காப்பெற் வீதியாக புனரமைக்கப்படும் வீதி...*

## வலி.தென்மேற்கில் 5 வீதிகள் புனரமைப்புக்கு இரண்டாம் கட்ட நிதி வழங்க நடவடிக்கை

### சபையின் ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்களின் முயற்சியின் பயனாக

வலி.தென்மேற்கு, ஏப்.9
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ள 5 வீதிகளுக்கான காலம் கடத் தப்பட்டுவந்தநிலையில்இரண்டாம் கட்டக் கொடுப்பனவை வழங்க ஆளும் கட்சி மற்றும் எதிரணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து அதற்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் சிறப்புக் கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் நெல்சிப் திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ள ஐந்து வீதிகளுக்குமான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு சபைக்குக் கிடைத்த போதிலும் சபை, அந்த நிதியை வழங்காமல் காலம் கடத்தி வந்ததை அடுத்து இதற்குரிய காரணத்தை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காக சிறப்புக் கூட்டத்தை கூட்டுமாறு எதிரணியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களும் இணைந்து கடிதம் மூலம் பதில் தவிசாளரைக் கோரியிருந்தனர்.

அதையடுத்து சிறப்புக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பதில் தவிசாளர் எஸ். சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கொடுப்பனவு வழங்குவது குறித்தும், அது தாமதிக்கப்படுவது குறித்தும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிரணி உறுப்பினர்களும் விரிவாக தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினர்.

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட ஐந்து வீதிகளுக்குமான இரண்டாம் கட்ட வேலைக்குரிய நிதி சபைக்குக் கிடைத்துள்ளதாலும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அந்த நிதியை ஒப்பந்தக்காரருக்கு வழங்கலாம் என்று அறிவித்துள்ளமையாலும், வீதி வேலைகளைச் செய்து முடித்த ஒப்பந்தக்காரர் நிதி நெருக்கடியிலிருப்பதாலும், அவர்களுக்குரிய நிதியைக் காலம் தாழ்த்தாமல் வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ள எதிரணித் தலைவர் அன்ரன் ஜோன்சன் மூன்றாம் கட்ட கொடுப்பனவும் பிடிப்பணமும் வழங்க வேண்டியிருப்பதால் மேற்படி வேலைகளில் குறைபாடுகள் இருப்பின் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்றும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலைகள் நிறைவடைந்துள்ளமையால் இரண்டாம் கட்டக் கொடுப்பனவை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்குமாறும் கோரினார்.

இந்த நிலையில் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட வேலைகளில் குறைபாடுகள் உள்ளதாக பொதுமக்கள் முறைப்பாடுகள் செய்துள்ளமையாலும், மழை காலங்களில் வெள்ளம் வடிந்தோட முடியாத நிலை உருவாகலாம் என்றும் தெரிவித்துள்ள ஆளும் கட்சி உறுப்பினர் கே.கௌரிகாந் தன் பணம் விரயமாவதைத் தடுக்கும் வகையில் வீதியிலுள்ள குறைபாடுகளைத் திருத் தும் வரை கொடுப்பனவை வழங்கக் கூடாது என்று வாதிட்டார்.

அதை அடுத்து இந்த விடயம் பதில் தவிசாளரால் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஆளும் கட்சி எதிரணியைச் சேர்ந்த 8 உறுப்பினர்கள் இரண்டாம் கட்ட கொடுப்பனவை வழங்க வேண்டும் என்றும் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் கொடுப்பனவை வழங்கக் கூடாது என்றும் வாக்களித்தனர்.

இதற்கான தீர்மானம் மூன்று அதிக பட்ச வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆளும் கட்சி உறுப்பினர் ஆ.சி. கணேசவேல் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-115)

# இரு வேட்பு மனுக்கள் தமிழகத்தில் நிராகரிப்பு

சென்னை,ஏப்.9
தமிழகத்தில் தேர்தல் களம் சூடுபிடித்து வரும் நிலையில், முக்கிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த இரண்டு வேட்பாளர்களின் மனுக்கள்தேர்தல்ஆணையத்தால்நிராகரிக்கப்பட்டுள்ளன.

நீலகிரித் தொகுதியில் பா.ஜ.க சார்பில் மனு தாக்கல் செய்திருந்த குருமூர்த்தி மற்றும் சிதம்பரம் தொகுதியில் பா.ம.க வேட்பாளாராக நிறுத்தப்பட்டிருந்த மணிரத்தினம் ஆகியோரது வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

குருமூர்த்தி தாக்கல் செய்த வேட்பு மனுவுடன் இணைக்கபடவேண்டிய கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளர் என்கிற படிவம் தாமதமாக அளிக்கப்பட்டது என்று கூறி அவரது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிதம்பரம் தொகுதியில் போட்டியிட மனு செய்திருந்த மணிரத்தினத்தின் மனுவைப் பத்து பேருக்கும் குறைவானவர்கள் முன்மொழிந்துள்ளதால் அவரது மனு தள்ளுபடி செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சிதம்பரம் தொகுதியில் மாற்று வேட்பாளராக மனு செய்திருந்த அவரது மனைவியின் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல்களுடன் நடைபெறும் ஆலந்தூர் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிட தே.மு.தி.க. வேட்பாளர் காமராஜ் தாக்கல் செய்திருந்த மனுவின் பரிசீலனை முடிவடைந்து முடிவு நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது.

அத்தொகுதியில் ஆம் ஆத்மி கட்சி சார்பாகப் போட்டியிடும் ஞானி, காமராஜின் மனைவி பெயரிலுள்ள சொத்துக்கள் குறித்து தவறான தகவல்கள் அளிக்கப்பட்டதாகத் தெரிவித்து ஆட்சேபித்ததை அடுத்தே வேட்புமனுவை ஏற்பது குறித்து முடிவு எடுப்பது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து இந்திய நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

ஆலந்தூர் சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிடவும் பலர் மனுத்தாக்கல் செய்துள்ளனர் மனுக்களின் பரிசீலனை திங்கட்கிழமை முடிவடைந்தது. வேட்புமனுக்களை எதிர்வரும் புதன்கிழமைவரை திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும். தமிழகத்தில் ஏப்ரல் 24 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. (த)



இந்தியாவில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளன. பிரசாரத்துக்காக வேட்பாளர்கள் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இப்போது கட்சிகளின் சின்னங்கள் பொறித்த குடைகளின் விற்பனை பல இடங்களில் அமோகமாக நடக்கிறது. (த)

# காங்கிரஸ் அரசினால் விவசாயிகள் அச்சம்

*சோனியா குடும்பத்தினர் மீது மோடி தாக்கு*

புதுடில்லி,ஏப் 9
காங்கிரஸ் அரசு தங்கள் நிலங்களை அபகரித்துவிடுமோ என விவசாயிகள் அச்சமடைந்துள்ளதாக பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி குற்றஞ்சாட்டியுள்ளார்.



ஹரியாணா மாநிலம் ஜாஜரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய மோடி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மருமகன் றொபேர்ட் வதேரா மீதான நிலபேர விவகாரத்தைச் சுட்டிக் காட்டினார்.

அவர் அங்கு பேசியதாவது:-
ஹரியானாவில் தந்தை- மகன் கூட்டணி (காங்கிரஸ் முதல்வர் பூபிந்தர் சிங் ஹூடா, அவரது மகன் திபேந்தர் சிங் ஹூடா) வணிகம் நடத்திக் கொண்டிருக்கிறது. டில்லியில் தாய்- மகன் (சோனியா- ராகுல்) கூட்டணி வணிகம் நடத்துகிறது. இது போதாதென்று மருமகனும் (றொபேர்ட் வதேரா) களத்தில் குதித்துள்ளார்.

ஹரியானாவைச் சேர்ந்த விவசாயிகள் மாநில அரசு எப்போது தங்களது நிலங்களை அபகரிக்குமோ என்ற அச்சத்தில் உள்ளனர். இந்த மாநில அரசு விவசாயிகளிடமிருந்து நிலங்களைப் பறித்து மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறது. இதற்கு காரணம் உங்கள் (ராகுல்) சகோதரியின் கணவர்தான். ஒரு பைசாகூட முதலீடு இல்லாமற் 3 மாதங்களில் ரூ.50 கோடி சம்பாதிக்க முடியுமா? இந்த வித்தை இளவரசரின் (ராகுல்) குடும்பத்துக்குத் தெரியும்-என்றார்நரேந்திரமோடி (த)

# 250 தொகுதிகளில் வெல்லும் பா.ஜ.க.

*வெங்கய்யா நாயுடு திட்டவட்டம்*

புதுடில்லி,ஏப்.9
மக்களவைத்தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி தனிப் பெரும்பான்மையுடன் மத்தியில் அடுத்த அரசை அமைக்கும் என்று பா.ஜ.க. மூத்த தலைவர் வெங்கய்யாநாயுடு அடித்துக்கூறினார். இது குறித்து அவர் புவனேஸ்வரத்தில் கூறியதாவது:-



பாரதிய ஜனதா கட்சிக்கு மாற்று கிடையாது என மக்கள் உணர்ந்துள்ளனர். நாடு முழுவதும் பா.ஜ.க. கூட்டணிக்குச் சாதகமான அலை வீசுகிறது. மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. மட்டும் சுமார் 250 தொகுதிகளைக் கைப்பற்றும்.

கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து சுமார் 300 இடங்களைக் கைப்பற்றுவோம். மாநிலக் கட்சிகள் மத்தியில் மாற்று அரசை ஒரு போதும் அமைக்க முடியாது. கடந்த காலத்தில் இதுபோன்ற சோதனை முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளன. மூன்றாவது அணி என்பது ஒரு கானல் நீர் என்பதைமக்கள்நன்குஉணர்ந்துள்ளனர். மத்தியில் நிலையான மற்றும் உறுதியான அரசு அமைக்க பா.ஜ.க. போன்ற வலுவான தேசியக் கட்சி நாட்டுக்குத் தேவைப்படுகிறது. பிஜு ஜனதா தளம் 14 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த போதும், குடிதண்ணீர், கல்வி, வேலை வாய்ப்பு, மின்சாரம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது- என்றார். (த)

### ஆம் ஆத்மி வேட்பாளர் விலகல்

உத்தரப் பிரதேசம் மாநிலம் ரே பரேலி தொகுதி ஆம் ஆத்மி வேட்பாளர் பக்ருதீன் தேர்தலில் போடியிடப்போவதில்லை என அறிவித்துள்ளார்.

ரே பரேலி தொகுதியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை எதிர்த்து ஆம் ஆத்மி கட்சி சார்பில் மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் மாநில உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி பக்ருதீன் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பக்ருதீன் மக்களவை தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார். இத்தகவலை ஆம் ஆத்மி கட்சி உத்தரப் பிரதேசம் மாநில செய்தி தொடர்பாளர் வைபவ் மகேஸ்வரி உறுதிப்படுத்தியுள்ளார்.

பக்ருதீனுக்குப் பதிலாக சமூக ஆர்வலர் அர்ச்சனா ஸ்ரீவஸ்தவாவைக் களமிறக்க ஆம் ஆத்மி தயாராகி வருவதாக தெரிகிறது. (த)

## மேற்கு வங்கத்தில் தேர்தல் ரத்தாகும்

*தேர்தல் ஆணையம் எச்சரிக்கை*

டில்லி,ஏப்.9
மேற்கு வங்கம் மாநிலத்தில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகளை இடமாற்றம் செய்ய மறுக்கும் பட்சத்தில், அங்கு மக்களவைத் தேர்தலை ரத்து செய்ய வேண்டி வரும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

மேற்கு வங்கம் உள்ளிட்ட பல மாநிலங்களில் ஐ.ஏ.எஸ்., மற்றும் ஐ.பி.எஸ்., அதிகாரிகளைத் தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவின்படி, அதிகாரிகளை இடமாற்றம் செய்ய முடியாது என மேற்கு வங்க முதல்வர் மம்தா அறிவித்தார். இந்நிலையில், உத்தரவுப்படி அதிகாரிகளை இடமாற்றம் செய்யாவிட்டால், தேர்தலை ரத்துச் செய்ய முடிவெடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## மீரா குமாருக்கு ஆதரவாக லாலு பிரசாத் பிரசாரத்தில்

பிஹார்,ஏப்.9
பிஹாரில் காங்கிரஸுடனான கூட்டணியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில், மக்களவைத் தலைவர் மீரா குமாருக்கு ஆதரவாக ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சித் தலைவர் லாலு பிரசாத் யாதவ் பிரசாரம் மேற்கொண்டார்.



மக்களவைத் தேர்தலில் காங்கிரஸும் ராஷ்ட்ரிய ஜனதா தளமும் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. இந் நிலையில், பிஹாரில் சோனியா காந்தியும் ராகுல் காந்தியும் கடந்த வாரம் பிரசாரம் மேற்கொண்டனர். இதற்கு லாலு வுக்கு அழைப்பு விடுக்கவில்லை. மேலும், பிஹாரில் இடைத் தேர்தல் நடைபெறும் 5 சட்டசபைத் தொகுதிகளில் காங்கிரஸுடன் கூட்டணி இல்லை என லாலு அறிவித்துள்ளார்.

இதனால் இரு கட்சிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியானது. இந்த நிலையில்தான், சாசாராம் மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் மீரா குமாருக்கு ஆதரவாக லாலு ஞாயிற்றுக்கிழமை பிரசாரம் மேற்கொண்டார்.

மதச்சார்பற்ற இரு கட்சிகளும் இணைந்து செயற்பட்டால் தான் மதவாத சக்திகள் ஆட்சிக்கு வருவதைத் தடுக்க முடியும் எனப் பிரசாரத்தின் போது லாலு வலியுறுத்தினார். கடந்த தேர்தலின்போது ரத யாத்திரை மேற்கொண்ட அத்வானியைத் தடுத்து நிறுத்தியது போல, இந்த முறை மோடி பிரதமராவதையும் தடுத்து நிறுத்துவேன் என்றும் அவர் தெரிவித்தார்.

மீரா குமாரை எதிர்த்து களம் இறங்கிய அவரது உறவினர் மேதவி கிரியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. இந் நிலையில், ஐக்கிய ஜனதாதள வேட்பாளர் கே.பி. ராமய்யாவுக்கு ஆதரவாக மேதவி பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். (த)

# என்னைத் தாக்குவதற்கு விரும்புபவர்கள் இடம்,நேரம் சொன்னால் நானே வருவேன்

*அரவிந்த் கெஜ்ரிவால் கூறுகிறார்*

புதுடில்லி,ஏப்.9
என்னைத் தாக்குவதற்கு விரும்புபவர்கள் இடம்,நேரம் சொன்னால் நானே வருவேன் என ஆம் ஆத்மி கட்சி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.



தனது ருவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-
என்னையே ஏன் தொடர்ந்து தாக்க வேண்டும்? இதற்குப் பின்னணியில் உள்ளவர்கள் யார், யார்? அவர்களுக்கு என்ன கிடைத்துவிட்டது? இந்தத் தாக்குதல் மூலம் அவர்கள் என்ன சாதித்துவிட்டனர் ?நாட்டின் பிரச்சினைகளுக்கு இது போன்ற வன்முறை பதிலாகுமா?
என்னைத் தாக்க விரும்புவர்கள் இடம் மற்றும் நேரத்தை தெரிவித்தால் நான் அங்கு வருகிறேன். அப்பொழுது அவர்கள் அடிக்கட்டும் என்று ருவிட்டரில் கூறியுள்ளார்.

கடந்த 5 நாள்களுக்குள் 2ஆவது முறையாக கெஜ்ரிவால் தாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# விமானத்திலிருந்து சமிக்ஞை இல்லை


பேர்த்,ஏப் 9

காணாமல்போன மலேசியன் எயார்லைன்ஸ் விமானத்தை தேட நடந்துவரும் சர்வதேச முயற்சிகளை ஒருங்கிணைத்து வரும் ஆஸ்திரேலிய அதிகாரிகள், கடந்த இரண்டு நாள்களாகக் கடலுக்கு அடியில் இருந்து வந்திருந்த சமிக்ஞைகளை இப்போது கேட்க முடியவில்லை என்று கூறுகின்றனர்.

முதலில் சீனக் கப்பலுக்கும் பின்னர் ஆஸ்திரேலியக் கப்பலுக்கும் கேட்டிருந்த இந்த சமிக்ஞை விமானம் ஒன்றின் கறுப்புப் பெட்டிப் பதிவுக் கருவியில் இருந்து வருவதை ஒத்து இருந்ததால், இது மலேசிய விமானத்தின் பதிவுக் கருவியில் இருந்து வருவதாக இருக்கலாம் என்று கருதப்பட்டது.

சாதாரணமாகக் கறுப்புப் பெட்டியின் மின்சக்தி கலங்கள் ஒரு மாதத்தில் காலாவதியாகிவிடும் என்ற நிலையில் இந்தத் தேடுதல் நடவடிக்கை பாதகமான ஒரு கட்டத்தை எட்டிவிட்டதாக இருக்கலாம் என்று தேடுதல் நடவடிக்கையின் ஒருங்கிணைப்பு அதிகாரி அங்கஸ் ஹூஸ்டன் கூறினார். இனிமேல் சமிக்ஞை வரவில்லை என்றால், கடலுக்கடியில் குறிப்பாக எந்த இடத்தில் கறுப்புப் பெட்டி இருக்கிறது என்று கணிக்க முடியாது.

அந்தச் சூழ்நிலையில் ஏற்கனவே சமிக்ஞை வந்த இடத்தில் ஆளில்லா நீர்மூழ்கி கப்பலை அனுப்பி விமானச் சிதிலங்கள் கிடக்கின்றனவா என்று தேடிப் பார்க்க முடியும் என ஹூஸ்டன் குறிப் பிட்டார். (கு)



காணாமற்போன மலேசிய விமானத்தைத் தேடும் நடவடிக்கையில் ஆஸ்திரேலியக் கடற்படையின் சுழியோடிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (கு)

# ரயிலில் குண்டுத் தாக்குதல் பாகிஸ்தானில் 13 பேர் சாவு

## தீவிரவாதிகள் நேற்றுக் கைவரிசை

கராச்சி,ஏப் 9

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் ரயில் மீது தீவிரவாதிகள் நேற்று மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் குறைந்தது 13 பேர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர் என அந் நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராவல்பிண்டி நோக்கிச் செல்வதற்காகவந்தஜபார்எக்ஸ்பிரஸ் மீது ஷிபி ரயில் நிலையத்தில் வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருந்த குழந்தைகள், பெண்கள் உட்பட அதிகளவானோர் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பெண் ஒருவர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகப் பாகிஸ்தான் ரயில்வே மத்திய அமைச்சர் கவஜா ஷாட் ரபிக் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு தீவிரவாதக் குழுக்களும் இதுவரை உரிமை கோராத நிலையில், இந்த மாகாணத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் ஆதிக்கம் காணப்படுவதால் அவர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாமென வெளிநாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

கடந்த ஒரு மாத காலத்தில் பலுசிஸ்தான் மாகாணத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களில் 30 இற்கும் அதிகமான தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதாக அண்மையில் பாகிஸ்தான் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்ததை தொடர்ந்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (கு)

# அயர்லாந்து ஜனாதிபதி பிரிட்டனுக்குப் பயணம்

லண்டன்,ஏப் 9

அயர்லாந்து ஜனநாயகக் குடியரசு ஜனாதிபதி மைக்கல் டி ஹிக்கின்ஸ் 4 நாள் உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு பிரிட்டனுக்குச் சென்றபோது, அவரை இளவரசர் சாள்ஸ் வரவேற்றுள்ளார்.

அயர்லாந்து ஜனாதிபதி பிரிட்டனுக்குச் சென்றமை இதுவே முதல் தடவை என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் தனது பயணத்தின்போது மகாராணியைச் சந்தித்த பின்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார். இதுவொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும்.



இவர் அங்கு செல்வதற்கு முன்னர்பிரிட்டன்-அயர்லாந்துஉறவு உயர் நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளார். ஆயினும், வட அயர்லாந்தில் சமாதானத்தை அடைவதற்கு இன்னும் நிறைய வேலை செய்ய வேண்டியுள்ளதெனவும் அவர் கூறியுள்ளார். (கு)

## 2 வயதுத் தம்பியின் துப்பாக்கிச் சூட்டில் அக்கா பரிதாபச் சாவு

நியூயோர்க்,ஏப் 9

அமெரிக்காவில் 2 வயதுச் சிறுவன் தவறுதலாகத் துப்பாக்கியால் சுட்டதில் அவனுடைய 11 வயதுச் சகோதரி உயிரிழந்தாள். அமெரிக்காவின் பிலெடெல்பியா பகுதியில் வசிக்கும் பெண்ணுக்கு நான்கு குழந்தைகள் உள்ள னர்.

இந்தப் பெண்ணின் ஆண் நண்பர், தான் எடுத்து வந்த கைத் துப்பாக்கியை இந்த பெண்ணின் வீட்டில் மறந்து வைத்து விட்டுச்சென்றார்.

இந்தத் துப்பாக்கியை, எடுத்து நான்கு குழந்தைகளும் விளையாடியுள்ளனர். அப்போது இந்தக் குழந்தைகளின் தாய் குளியலறையில் இருந்துள்ளார்.

இப்பெண்ணின் 2 வயது மகன் துப்பாக்கி விசையைத் தவறாக அமுத்த, அங்கு விளையாடிகொண்டிருந்த 11 வயதுச் சிறுமியின் மார்பில் குண்டு பாய்ந்தது.

இதில் சிறுவனின் சகோதரி அங்கேயே உயிரிழந்தாள். (கு)

# மகிழ்ச்சியான நேரங்களில் யாரும் சிரிக்கவே கூடாது

## தீவிரவாதிகள் புதிய சட்டம்

பீஜிங்,ஏப் 9

சீனாவில் பாகிஸ்தான் எல்லையில் ஸின்ஜியாங் மாகாணம் உள்ளது. அங்குள்ள உகியார் பகுதியில் முஸ்லிம்கள் அதிக அளவில் உள்ளனர். இந்த நிலையில் அங்குள்ள தீவிரவாதிகள் மற்றும் பிரிவினைவாதிகள் அரசுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

உகியார் பகுதியைப் பிரித்துத் தனி நாடு வழங்க வேண்டும் எனக் கோரி வருகின்றனர். கடந்த ஒக்ரோபரில், பீஜிங்கின் டினாமென் சதுக்கத்தில் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தினார்கள். சமீபத்தில் தெற்கு சீனாவின் குன்மிங் ரயில் நிலையத்தில் பயணிகளைக் கத்தியால் குத்தியதில் 29 பேர் உயிரிழந்தனர்.

இஸ்லாமியத் தீவிரவாதிகளான இவர்கள் உகியாரில் வாழும் முஸ்லிம்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தடை செய்தல், ரேடியோ கேட்பது, பத்திரிகைகள் படிப்பது, பாட்டுப் பாடுவது மற்றும் நடனமாடத் தடை என்பவற்றை அவர்கள் விதித்துள்ளனர்.

அனைத்துக்கும் மேலாக திருமண வீட்டில் மகிழ்ச்சிகரமான தருணங்களில் ஒருவரை ஒருவர் சந்தித்துச் சிரித்து மகிழக்கூடாது. சாவு வீட்டில் துக்கம் தாங்காமல் அழக்கூடாது என்றும் அவர்கள் தடை விதித்துள்ள தாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது குறித்து ஸின்ஜியாங் மாகாண ஆளுநர் சீன அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தியுள்ளார். (கு)

# ருவாண்டா படுகொலை ஐ.நாவுக்கு வெட்கக்கேடு

## பான் கி மூன் தெரிவிப்பு

கீக்காலி,ஏப் 9

இனப்படுகொலையைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் ஐ.நா மீது இன்னும் வெட்கக்கேடு ஒட்டிக்கொண்டிருக்கிறது என ஐ.நா பொதுச் செயலர் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.

ருவாண்டாவில் சுமார் எட்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்ட இனப் படுகொலையின் 20 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி, அந்நாடு ஒருவார கால அரச துக்க காலத்தைத் தொடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் அங்கு நடந்த ஞாபகார்த்த நிகழ்வில் அதிபர் போல் ககாமே மற்றும் ஐ.நா செயலர் பான் கி மூன் ஆகியோர் இணைந்து நினைவுத் தீபத்தை ஏற்றிவைத்தனர்.



இந்தப் படுகொலைகளைத் தடுப்பதற்குத் தவறியமை தொடர்பில் ஐ.நாவின் மீதே இன்னும் வெட்கக்கேடு ஒட்டிக்கொண்டிருக்கிறது என்று பான் கி மூன் இங்கு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சர்வதேசப் பிரபலங்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்விலிருந்து தமது நீதியமைச் சரைப் பிரான்ஸ் மீள அழைத்துக்கொண்டுள்ளது.

ருவாண்டா இனப்படுகொலையில் பிரான்ஸுக்கும் பங்கு இருப்பதாக அதிபர் ககாமே மீண்டும் குற்றச்சாட்டுக்களை அடுக்கியுள்ளமைக்குப் பதிலடியாகவே பிரான்ஸ் இந்த முடிவை எடுத்துள்ளது. (கு)

# குழந்தையின் அழுகையை நிறுத்த பாலுடன் மது கலந்த தந்தை கைது

3 மாதப் பாலகனான மகனின் அழுகையை நிறுத்த அவனுக்குப் புட்டிப்பாலில் மதுபானத்தைக் கலந்து அருந்தக் கொடுத்து அவனைக் கொன்ற குற்றச்சாட்டில் தந்தையொருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் பொலிவியாவில் இடம்பெற்றுள்ளது.

லாபாஸ் நகரில் எல் அல்டோ பிரதேசத்தைச் சேர்ந்த அக்சியோ எஸ்ரேடா, (வயது-37) என்ற தந்தையே தனது 3 மாத மகனான கார்லோவுக்குப் பாலுடன் மதுபானத்தைக் கலந்து வழங்கி அவனது மரணத்துக்குக் காரணமாக இருந்ததாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

சம்பவ தினம் அகாசியோ மதுபானம் அருந்திக் கொண்டிருந்த வேளை குழந்தை தொடர்ந்து அழுது கொண்டிருந்ததால் அவர் கடும் மன அழுத்தத்துக்குள்ளானார்.

இந்நிலையில் குழந்தையின் அழுகையை நிறுத்தும் முகமாக அவர் குழந்தையின் பால் புட்டியில் மதுபானத்தைக் கலந்து வழங்கியுள்ளார்.

சம்பவம் இடம்பெற்றபோது குழந்தையின் தாயாரான சில்வியா வேலைக்குச் சென்றிருந்தார்.

வீடு திரும்பிய சில்வியா தனது குழந்தை மரணமடைந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இந்நிலையில் அவர் குழந்தையின் புட்டிப்பாலைச் சந்தேகத்தில் முகர்ந்து பார்த்தபோது அதில் வித்தியாசமான மணம் வெளிப்படுவதை உணர்ந்து அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்தே அகாசியோ குழந்தைக்குப் பாலில் மதுபானத்தைக் கலந்து வழங்கியுள்ளமை கண்டறியப்பட்டது. தற்போது கைது செய்யப்பட்டுள்ள அகாசியோ சிறைத் தண்டனையை எதிர்நோக்கியுள்ளார்.

மிகக் குறைந்த அளவிலான மதுசாரம் குழந்தையொன்றின் சுவாசம் மற்றும் குருதி குளுக்கோசு மட்டம் என்பவற்றைப் பாதித்து உயிராபத்தை விளைவிக்கக்கூடியது என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். (கு)

# திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய
# புதிய திருமஞ்ச வெள்ளோட்ட விழா சிறப்புமலர் - 09.04.2014





## அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம், திருநெல்வேலி, அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாளுக்கு ஒரு புதிய மஞ்சம் நிர்மாணிக்கப் பெற்று இன்று வெள்ளோட்டம் நிகழ்வது மகிழ்ச்சியைத் தருகின்றது. அழகே உருவான அம்பிகை அழகிய மஞ்சத்தில் திருஉலா வருவதைக் கண்குளிரக்காண வேண்டும் என்ற ஆவல் மீதுரப்பெற்ற அன்பர்கள் ஒன்றிணைந்து புதிய மஞ்சத்தை உருவாக்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

திருநெல்வேலி அரசடியுறையும் அம்பிகைக்கான திருமஞ்சத்தை எமது அன்புக்குரிய ஜீ.ஜெயப்பிரகாஸ் அவர்களது கை வண்ணத்தில் உருவாக்கிக் கொடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. தந்தையின் அடியையொற்றி சிற்ப சாஸ்திர முறைப்படி இவரால் அமைக்கப்பட்டுள்ள திருமஞ்ச வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம். இவரும் இவரைச் சார்ந்தோரும் சேர்ந்து மஞ்சத்தை உருவகித்திருக்கிறார்கள். இவர்களும் ஆலய பரிபாலன சபையினரும் திருநெல்வேலி வாழ் மக்களும் சேர்ந்து திருப்பணி செய்து நிகழும் இன்றைய திருமஞ்சவெள்ளோட்டம் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் திருவருளால் சிறந்து விளங்க வேண்டுமென உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். இக்கைங்கரியம் பூர்வஜென்ம புண்ணியப் பயனால் இன்று நிறைவேறியிருக்கிறது. இதில் ஈடுபட்டுள்ள அத்தனை அன்பர்களும் அம்பாள் திருவருட்கடாட்சத்தால் நலமே வாழ ஆசி வழங்கி வாழ்த்துகின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

-நல்லை ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



தெய்வீகம் நிறைந்த திருவூர் திருநெல்வேலி. இத் திருவூரில் பிறந்த சுவாமி ஞானப்பிரகாசர் சிதம் பரத்தில் வெட்டிய பெருங்குளம் இன்னும் பலபேரை வாழவைப் பதை அவ்வூர் மக்கள் பெருமையோடு எடுத்துரைப்பர். சைவச்சிறுவர்களைக் காக்க எம் மண் ணில் முதல் எழுந்த சைவச்சிறுவர் இல்லம் இவ்வூரி லேயே தோற்றம் பெற்றுள் ளது. இதற்கு எல்லாம் மூலமாக விளங்கும் இவ்வூர் திருக் கோயில்களில் சிவகாம சுந்தரி அம்பாள் ஆலயம் மிகவும் பழமைமிக்க ஆலயம் என்றால் மிகையாகாது. இத்திருக்கோயிலை மிகவும் புனிதமாகப் பாதுகாத்துவரும் அடியார்கள், அறங்காவலர்கள் வாழ்த்துக் குரியவர்கள். இவ்வாண்டு அம்பாளுக்குப் புதிய திருமஞ்சம் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடை கின்றேன். திருநெல்வேலிப் பெருங்கலைஞர் பரம்பரையில் தோன்றிய சிற் பக்கலைஞர் ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஷ் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக் கப்பட்டுள்ள திருமஞ்சம் பெருமைக்குரிய பெருஞ்சொத்தெனலாம். அம்பாளின் பேரருளால் எம்மண்ணில் விடிவு ஏற்பட வேண்டிய வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி ஆறு திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

## வாழ்த்துச் செய்தி



ஈழமண்டலத்தில் வடபாலமைந்த யாழ்.மாவட்ட கிராமங்களிலே திருநெல்வேலி நீண்ட பாரம்பரியங்களையும் சமய மரபுகளையும் கொண்டிருக்கும் தொன்மையான கிராம மாகும். இக் கிராமத்தின் மத்தியிலே கோயில் கொண்டரு ளும் திருவருள்மிகு ஸ்ரீ சிவாகமசுந்தரி அம்பாளுக்குப் புதி தாகத் திருமஞ்சம் அமைக்கப்பட்டு இவ்வாண்டு மகோற்சவ காலத்தில் வெள்ளோட்டம் இடம்பெறுவது பெருமகிழ்ச்சிக் குரியதாகும். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஔவையின் அமுத மொழிக்கேற்பவே ஆலயங்கள் பொலிவுபெறும் போது அக்கிராமமும் கிராம மக்களது வாழ்வும் செம்மைப்படுவது கண்கூடு. இந்தத் திருமஞ்சப் பவனியால் தொல்லைகள் நீங்கி எங்கும் அன் பும் அறமும் பெருக வேண் டும் என எல்லாம் வல்ல சிவகாம சுந்தரித் தாயைப் பிரார்த்திக்கும் அதேவேளை எழில் மிகு திருமஞ்சத்தைக் கலை நயத்தோடு வடிவமைத்த சிற்பக் கலைஞர் ஜீவரட் ணம் ஜெயப்பிரகாஷ் அவர்களை வாழ்த் துவதிலும் பெருமையடைகின்றேன்.

- பா.செந்தில்நந்தனன், பிரதேச செயலர், நல்லூர்.

## ஸ்தபதியின் ஆசியுரை

திருநெல்வேலிப்பதியில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் சிவகாம சுந்தரி அம்பாளுக்குரிய திருமஞ்சத் திருப்பணியை செய்யும்பேறு எனக்குக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வடை கின்றேன்.

அம்பாளின் சித்திரத்தேர் செய்யும் பணியினையும் சில ஆண்டுகளுக்கு முன்னர் அடியேனே மேற்கொண்டேன். திருமஞ்சத்திருப்பணியும் எனக்குக் கிடைத்தது அன்னை யின் அருட்கடாட்சமின்றி வேறில்லை.

எனது தந்தையார் ஆறுமுகம் சிற்பாலயத்தின் ஸ்தாபகர் சிற்பக்கலையரசு ஆ.ஜீவரட்ணம் அவர்களின் வழிகாட்டலுடன் இப்பணிகளைத் திறம்படச் செய்வதற்கு துணையிருப்பது எமது ஆறுமுகம் சிற்பாலயத்தைச் சூழவிருந்து அருளாட்சி செய்துவரும் தெய்வங்களின் திருவருளேயாகும்.

அடியேனாலும் எமது ஆறுமுகம் சிற்பாலயத்தில் பணியாற்றும் குழுவினராலும் சகல அம்சங்களும் பொருந்தியதாக சிறப்புற நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய திருமஞ்சத்தில் சர்வ அலங்கார ரூபியாக அன்னை சிவகாம சுந்தரி அம்பாள் எழுந்தருளி அடியார்களுக்கு தனது இன்னருளை வாரி வழங்க வேண்டுமென்று பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஷ், சிற்பாச்சாரியார்.

## ஆலய வரலாறு

யாழ். குடாநாட்டின் தொன்மை மிக்க கிராமங்களில் திருநெல்வேலியும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இக் கிராமத்தில் சைவமும், தமிழும் செழித்து வளர்ந்து வந்துள்ளது. இக் கிராமத்தின் மக்கள் கடவுள் பக்தியும், கடின உழைப்பும் உடையவர்கள்.

இக் கிராமத்தில் பலர் கல்வியில் சிறந்து விளங்கி புகழ் பெற்றுள்ளனர். ஆறுமுகநாவலரின் தாய்வழி மூதாதையரான ஞானப்பிரகாசமுனிவர் திருநெல் வேலியைச் சேர்ந்தவர்.

திருநெல்வேலி கிராமத்தில் காணப்படும் சைவ ஆலயங்களுள் ஒன்று அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலயம். திருநெல்வேலிச் சந்தியிலிருந்து கல்வியங்காடு செல்லும் ஆடியபாதம் வீதி யில் ஆண்டிப்புலம் என்ற தோம்புப் பெயர் கொண்ட காணியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் தொன்மைக்கு கச்சேரியில் ஆலயங் கள் தொடர்பான பதிவுப் புத்தகத்தில் இரண்டாம் பக்கத்தில் இந்த ஆலயம் பற்றிய குறிப்பு காணப் படுவது சிறப்பாகும்.

1844 ஆம் ஆண்டு பதிவுப்படி ஓடு கொண்டு வேயப்பட்ட கூரையுடையதென்றும், தினமும் ஒரு நேரப் பூஜை இடம்பெறுவதாகவும் குறிப்பிடப் படுகின்றது. இந்த ஆலயத்தின் முகாமையாளராக குமாரவேலு சண்முகம் என்பவரது பெயர் குறிப் பிடப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தில் 1951 ஆம் ஆண்டு தொடக்கம் கொடி ஏற்றப்பட்டு திருவிழா நடைபெற்று வருகின்றது. இந்த ஆலயம் 1969 ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு புதிய திருப்பணி வேலைகள் செய்யப்பட்டன.

1971 ஆம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி பாலஸ்தானம் செய்யப்பட்டது.

அடியார்கள், அரசாங்கத்தின் பன்முகப்படுத் தப் பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் மூலமும் வழங்கப்பட்ட இரண்டு லட்சம் நிதி உதவி யுடன் பரிபாலன சபையினால் இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு 1998 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆம் திகதி கும்பாபிஷேகம் நடை பெற்றது.

## அம்பிகையின் அருள் கிடைக்கட்டும்



சைவமும் தமிழும் தளைத்தோங்க அரும்பாடுபட்ட சான்றோர்கள் பலர் வாழ்ந்த யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பதியினிலே அரசமரமும் வேப்பமரமும் ஒன்றிணைந்த தனிச் சிறப்பு ஸ்தல விருட் சமாகத் திகழும் அரசடி சிவகாம சுந்தரி அம்பாளின் மஹோற்சவத்தின் 10 ஆம் திருவிழாவாகிய இன்று சைவப்பெருந் தகைகளின் தெய்வீகப் பணியால் திருமஞ்சம் நிர்மாணிக்கப்பட்டு வெள்ளோட்டம் இடம்பெற உள்ளது. இத்திருமஞ்ச உருவாக்கத்தில் பங்கு கொண்ட அம்பிகை அடியார்கள் அனைவருக்கும் அன்னை சிவகாமசுந்தரியின் திருவருள் கிடைப்பதாக. அன்னை சிவகாமசுந்தரி தன்னைத் தஞ்சம் என்று வந்தவர்க்கெல்லாம் திருமஞ்சத்தில் திரு உலாவந்து மண்ணில் நல்லவண்ணம் வாழ அருள்புரிவாளாக.

வை.ஜெகதீஸ்வரக்குருக்கள்.
ஆலய பிரதம சிவாச்சாரியார்

## வாழ்த்துரை



தாய்த்தெய்வ வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. அந்த அன்னை வழிபாட்டின் தொடர்ச்சியைக் காட்டும் ஈழத்து அம்மன் ஆலயங்களுள் ஒன்றாக திருநெல்வேலி அருள்மிகு சிவகாமசுந்தரி அம்மன் ஆலயம் விளங்கு கின்றது. வழிபாட்டுச் சிறப்புமிக்க இவ்வாலயத்திற்கு இருபத்தொரு அடி உயரமான அழ கிய புதிய மஞ்சம் ஒன்று அமைக்கப்பட்டு வெள்ளோட்டவிழா சிறப்பாக நடை பெறத் திருவருள் கிடைத்திருப்பது நாம் செய்த பாக்கியமாகும். திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய நிறுவனத்தின் இயக்குநர் ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஷ் அவர்களின் கைவண்ணத்தினால் மிகவும் சிறப்பாக இக்கலைப்படைப்பு உரு வாக்கப்பட்டிருப்பது எம் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ் வாண்டு மகோற்சவத்திருவிழா நடைபெறும் தினத்தில் இம்மஞ்சம் திருவீதியுலா வரவிருப்பது மேலும் சிறப்பைத் தருகின்றது.

இத்தெய்வீகத் திருப் பணிக்கு பல வழிகளிலும் உதவிய ஆலய சிவாச் சாரியார், அறங்காவலர்கள், அன்பர்கள், அனைவரையும் வாழ்த்தி வணங்கி நாட்டிலே நிரந்தரமான அமைதி நிலவ எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளின் பொற்பாதங்களை வேண்டுகின்றோம்.

***"அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"***

பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன் தலைவர்,
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

## பிரார்த்திப்போமாக



திருநெல்வேலி அரசடி அம்மன் கோயில் என அழைக் கப்படும் ஸ்ரீ சிவகாமசுந்தரி ஆலயத்தின் மகோற்சவம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அடியார் களுக்கு வேண்டியதை வேண்டியாங்கருளும் சிவகாம சுந்தரியின் திருவருட்கடாட்சத்தைப் பெற்றவர்களில் அடியேனும் ஒருவன். தெய்வீகச் சூழல் நிறைந்த இந்த ஆலயத்திலே தல விருட்சமாக நிமிர்ந்து நிழல் பரப்பும் அரச மரத்தினோடு இணைந்து வேம்பும் இருக்கிறது. அரசும் வேம்பும் இணைந்திருக்கும் இடத்திலே மும்மூர்த்திகளும் உறைவார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இத்திருத் தலத்திற்கு அழகானதோர் சித் திரத்தேரை நிர்மாணித் தவர்கள் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தினர். இப்பொழுது ஆறுமுகம் சிற்பாலயத்தினரின் கைவண்ணத்திலே சிறப் பானதொரு மஞ்சம் உருவாகியுள்ளது.ஆறுமுகம் சிற்பாலயத்தின் அதிபராக விளங்கிய அமரர் ஜீவரட்ணம் அவர்கள் உலகறிந்த சிறந்த ஸ்தபதியாவார். அவரின் மூத்தபுதல்வன் ஜெயப்பிரகாஸ் வாழையடி வாழையாக இன்று அந்தப் பணியைச் சிறப்புறச் செய்து வருகிறார். அழகியலும் அளவுப்பிரமாணமும் சற்றும் குறையாமல் தேர், மஞ்சம் முதலியன நிர்மாணிப்பதிலே ஜெயப் பிரகாஷ் வல்லவர். பேரன், தந்தை என மூன்று தலைமுறையாகச் சிற்பக் கலையிலே வேர் விட்டு விழுது பரப்பிப்பேரால விருட்சமாகத் திகழும் ஆறுமுகம் சிற்பாலயத்தினரை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். எல்லாம் வல்ல சிவகாமசுந்தரியின் பூரண கிருபாகடாட்சம் திருநெல் வேலிப் பதி வாழ் அம்பாள் அடியார்களுக்குக் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா திருநெல்வேலி.

## எமது வாழ்த்துக்கள்

அருள்மிகு திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேவஸ்தானத்திற்குப் புதிய திருமஞ்சரதம் உருவாகுவதற்கு அம்பாள் அருள் பாலித்துள்ளதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். நீண்ட வரலாறும் பெருமையும் கொண்ட இந்த ஆலயம் அம்பாளின் அருட்கடாட்சத்தால் இன்று திருமஞ்ச வெள்ளோட்டம் காண்கின்றது.

பரிபாலன சபையினராகிய நாம் வெறும் கருவிகளே. திருமஞ்ச திருப்பணியைச் செவ்வனே அலங்கரித்த சிற்பாச்சாரியார் ஜீ.ஜெயப் பிரகாஸ் பாராட்டப்படக்கூடியவர். அவருடைய கைவண்ணத்தில் உருவான அழகிய திருமஞ்சம் சிறப்பாக வெள்ளோட்டம் காண எமது வாழ்த்துக்கள்.

- நிர்வாகம்.

(C/12154)(2.6.3)


**SRI MUTHUMARIAMMAN TRADERS**
342,344, Hospital Road, Jaffna .
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
Authorized Distributor For
Prima Ceylon (Private) Limited
Lanka Milk Food (cwe) PLC
TEL : 021 222 8666
021 567 4110
SMT
FAX : 021 222 8666

**THAS STORES**
KALASALAI ROAD,
THIRUNELVELY.

**SOORIYA HARD WARES**
KALASALAI ROAD,
THIRUNELVELY.

**பிரகாந்த் போட்டோ கொப்பி**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**கந்தவேள் களஞ்சியம்**
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

**ஐங்கரன் களஞ்சியம்**
இல.06, பலாலி வீதி,
திருநெல்வேலி.

**ஹரன் புடவையகம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி.
தொ.பே.இல. 0212222697

**நியூ குறிஞ்சி பார்மசி**
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

**கனகா ரேடேஸ்**
பத்திரிகை விற்பனையாளர்
இல.6, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

# அதிக வெப்பத்தால் மக்கள் பாதிப்பு

வவுனியா, ஏப்.9
வவுனியாவில் பகல் வேளையில் 40 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவாகிறது எனவும், இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடும் வெம்பம் காரணமாக மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாகத் தற்காலிகக் கொட்டகைகளில் வசிக்கும் குடும்பங்கள் வெப்பத் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளன. இந்தக் குடும்பங்களை அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளனர். கடும் வெம்பம் காரணமாக காய்ச்சல் மற்றும் சீதோஷன் வியாதிகள் பரவி வருவதாகவும் அவை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.
இதேவேளை இம் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை சூரியன் உச்சம் கொடுப்பதால் அதிக வெப்பம் நிலவும் என வவுனியா காலநிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் விஜயசேகர தெரிவித்துள்ளார். (ஜ-402)

# எமது இளம் சமுதாயத்தை சீர்ப்படுத்த மாணவரை வழிப்படுத்த வேண்டும்

*மாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் கோரிக்கை*

வவுனியா, ஏப்.9
மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு பௌதிக வளங்கள் மட்டுமன்றி அதிபர் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் முக்கியமானது. அத்துடன் பெற்றோரின் கண்காணிப்பும் வழி நடத்துதலும் மாணவர்களைச் சரியான வழியில் இட்டுச் செல்கின்றன. இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.
வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
இன்றைய இளைய சமுதாயம் சீர்கெட்டுப் போகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கு நாமே காரணம். மாணவர்கள் பாடசாலைகளில் கற்கும் போது அவர்கள் குறித்து ஆசிரியர்களும் பெற்றோர்களும் சரியாக அக்கறை செலுத்துவதில்லை. இதனால் அவர்கள் தவறான நடத்தைக்கு துணிகின்றனர். பாடசாலைகளில் வளப்பற்றாக்குறை என்று குற்றச்சாட்டை முன்வைத்து, இருக்கும் வளங்களையும் தவற விடுகிறோம். இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதால் அவர்களைத் தவறான நடத்தைக்கு இட்டுச் செல்கிறது.
ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடமாகாணத்தின் கல்வி நிலை வீழ்ச்சி அடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. எனவே அடிப்படையில் இருந்து அவர்களை வளப்படுத்த வேண்டியது அனைவரதும் கடமையாகும் - என்றார். (ஜ-402)

# கலாசாரச் சீரழிவை தடுக்கக் கோரிக்கை

வவுனியா, ஏப்.9
வவுனியா சமணங்குளம் மற்றும் வவுனியா குடியிருப்புக் குளம் ஆகிய பகுதிகளில் பொழுது போக்கு நிமித்தம் ஒன்று கூடுபவர்கள் கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.
குறித்த குளங்கள் இயற்கை எழில் வாய்ந்தவையாகக் காணப்படுவதால் பொழுது போக்கு நிமித்தம் அங்கு தினமும் பலர் கூடுகின்றனர். இவ்வாறு அமைதியாகச் சிலர் பொழுது போக்கினாலும் சிலர் மதுப்பாவனை மற்றும் கலாசாராச் சீர்கேடான நடத்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.
இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் ஆர்வலர்கள் கோரியுள்ளனர். (ஜ-402)

# வீட்டுத் திட்டத்தை அமைக்குமாறு மறவன்குள மக்கள் கோரிக்கை

வவுனியா, ஏப்.9
வவுனியா மறவன்குள் மக்கள் நிரந்தர வீடுகள் கிடைக்காமையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.
அத்துடன் வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருமாறும் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
குறித்த கிராமத்தில் 350 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள இந்தக் குடும்பங்களுக்கு இதுவரை நிரந்தர வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை. இதனால் அந்தக் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.
இந்த நிலையில் தமக்கு நிரந்தர வீடு வழங்கக்கோரி வவுனியா பிரதேச செயலகத்தில் கூடிய மக்கள் பிரதேச செயலரிடம் முறையிட்டனர். இது குறித்து பதில் அளித்த பிரதேச செயலர், உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (ஜ-402)


## திருட்டு அதிகரிப்பு


கோப்புப்படம்

வவுனியா, ஏப்.9
வவுனியாவில் கிராமப் புறங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரவு வேளைகளில் கிராமப்புறங்களில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் திருடர்கள் இவ்வாறு கைவரிசை காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே இவ்வாறான திருட்டு நடவடிக்கைகளைத் தடுக்க சிவில் பாதுகாப்புக் குழுக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-421)

# அரச காணியை மீட்குமாறு அமைப்புக்கள் கோரிக்கை

மன்னார், ஏப். 9
மன்னார் உப்புக்குளம் தெற்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பஸ் நிலையத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ள அரச காணியை பொதுத்தேவைகளுக்கு வழங்குமாறு உப்புக்குளம் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கம் மன்னார் நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பாகக் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கைக் கடிதம் ஒன்றை மன்னார் நகர சபையிடம் சமர்ப்பித்துள்ளது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
அரச காணியை தனி நபர்கள் சிலர் அபகரிக்க முயற்சித்து வருகின்றனர்.
தற்போது குறித்த காணியை சிலர் அடாத்தாகப் பிடித்து சுற்று வேலி அமைத்து வருகின்றனர்.
இந்த நடவடிக்கைக்குக் கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.
எனவே குறித்த காணியை மீட்டு கிராமத்தின் பொதுத் தேவைகளுக்குப் பயன்படுத்த மன்னார் நகரசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (ஜ - 56)


போரினால் சேதமடைந்து புனரமைக்கப்படாத நிலையில் காணப்படும் வன்னோரிக்குளம் யோகர் சுவாமிகள் முதியோர் இல்லம். (க-18)

# கிளிநொச்சி செயலகத்தில் சனியன்று மஹா பொல

கிளிநொச்சி, ஏப்.9
2011/2012 கல்வியாண்டின் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.
மாணவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் குடும்ப உறுப்பினர்களில் ஒருவரை அழைத்து வரலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
மாணவர்களின் பெயர்ப் பட்டியலை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பார்வையிடலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# வவுனியாவில் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்க விசேட நடவடிக்கைகள்

வவுனியா மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித் துறையை வளர்த்தெடுப்பதற்கென நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட நன்னீர் மீன்பிடி விரிவாக்கல் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
குறிப்பாக பாவற்குளம், சூடுவெந்தபுலவு, யூனிட் மூன்று பகுதி, புதுக்குளம், சமகி, கலபோவஸ்வெல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தலா 10 மீனவர்களுக்கும், மாமடு பகுதியில் 3 பேருக்கும், புளியங்குளத்தில் ஒருவருக்கும் சிப்பிக்குளம் பகுதியில் ஒருவருக்கும் வவுனியாக்குளத்தில் 6 பேருக்கும் கனகராயன் குளத்தில் 6 பேருக்கும் அண்மையில் மீன்பிடிப் படகுகள் வழங்கப்பட்டன. அத்துடன் குறித்த குளங்களில் மீன்குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன.
கடும் வறட்சி நிலவுவதால் சில குளங்கள் முற்றாக வற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நன்னீர் மீன்பிடி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்த மழைக் காலத்தில் குறித்த குளங் களில் மீன்குஞ்சுகளை விட்டுப் பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-402)

# போக்குவரத்து இடர்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி, ஏப். 9
கிளிநொச்சி மாவட்டத்தில் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பல கிராமங்களுக்கு குறித்த வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.
கிளிநொச்சி மாவட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிநிதிகள் மற்றும் தனியார் பஸ் சேவை உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு பஸ் சேவைகளை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்தனர்.
குறித்த கலந்துரையாடலின் அடிப்படையில் சிவநகர், பன்னங்கண்டி, மலையாளபுரம், பொன்னகர், வன்னோரிக்குளம், ஜெயபுரம், யூனியன்குளம் மற்றும் கல்மடுநகர் ஆகிய இடங்களுக்கு பஸ் சேவைகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.
கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வட மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், இலங்கைப் போக்குரத்துச் சபையின் கிளிநொச்சி முகாமையாளர் கேதீஸ்வரன், பிராந்திய கணக்காய்வாளர் எஸ்.கே. செவ்வந்திராஜா, தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் எஸ்.ஜெகதீஸ்வரன் மற்றும் தனியார் பஸ் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஜ-18)

# யானையால் துரத்தப்பட்ட கிராம அலுவலர்

***மயிரிழையில் உயிர் பிழைத்துக் கொண்டார்***

துணுக்காய், ஏப்.9
துணுக்காய் பழைய முறிகண்டி கிராம அலுவலரை யானையொன்று துரத்தியுள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த 6 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது. கிராம அலுவலர் பழைய முறிகண்டியிலிருந்து கோட்டை கட்டிய குளம் கிராமத்துக்குச் செல்லும் போது இடை வழியில் யானையொன்று துரத்தியது. இதனால் அச்சமடைந்த அவர் சைக்கிளை வேகமாகச் செலுத்திச் சென்றதன் காரணமாக உயிர் ஆபத்திலிருந்து தப்பிக் கொண்டார்.
இதேவேளை நேற்று முன்தினம் 7 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் புத்துவெட்டுவான் கிராமத்திலிருந்து பழைய முறிகண்டிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரையும் யானையொன்று துரத்திச் சென்றது. அந்த நபர் மோட்டார் சைக்கிளை நிலத்தில் வீழ்த்தி விட்டு காட்டுக்குள் ஓடியதால் யானையின் தாக்குதலில் இருந்து உயிர்பிழைத்துக் கொண்டார். பழைய முறிகண்டியைச் சேர்ந்த சந்திரலிங்கம் ஆரூரான் (வயது-28) என்ற நபரே யானையின் தாக்குதலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.
இந்தப் பகுதியில் காணப்படும் யானைகளின் தொல்லை தொடர்பாகத் துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் கருத்து தெரிவிக்கும் போது; முல்லைத்தீவு அரச அதிபருக்கு இது தொடர்பாக கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.
துணுக்காயின் பழைய முறிகண்டி, புத்து வெட்டுவான், கோட்டை கட்டியகுளம் கிராமங்களில் பகலில் யானைகளின் நடமாட்டம் தற்போது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# திருமலை வைத்தியசாலை மத்திய அரசின் கீழ்

## அதற்கான கோவைகள் சுகாதார அமைச்சரிடம் கையளிப்பு

திருகோணமலை.ஏப்.9
உலக சுகாதார தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கி வந்த திருகோணமலை பொது வைத்தியசாலை மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கான கோவைகளை நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்கியுள்ளார்.

திருகோணமலை பொது வைத்தியசாலை முன்றலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, பௌத்தசாசன பிரதி அமைச்சர் எம் .கே .ஏ.டீ. குணவர்தன, சுகாதார அமைச்சின் செயலர் மகிபால ஹேரத், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், கிழக்கு மாகாண தவிசாளர் ஆரியவத்தி கலப்பத்தி, கிழக்கு சுகாதார அமைச்சர் எம் .ஐ. மன்சூர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகள் எதனையும் அரசு பாரமெடுப்பதில்லை என்ற தீர்மானம் இருந்த போதும், இந்த வைத்தியசாலையை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற உத்தரவை ஜனாதிபதி விடுத்தமையாலேயே வைத்தியசாலை கையளிக்கப்படுகின்றது என்று கிழக்கு மாகாணச் சுகாதார அமைச்சர் கூறினார். (ச)



திருகோணமலை பொது வைத்தியசாலை மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கான கோவைகளை கிழக்கு மாகாண ஆளுநர், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார்.

# காத்தான்குடியில் இதுவரை 22 டெங்கு நோயாளர்கள்

காத்தான்குடி.ஏப்.9
காத்தான்குடி நகரசபை பிரிவில் கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரைக்கும் 22 பேருக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று காத்தான்குடி நகரசபைத் தலைவர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார்.

காத்தான்குடி, முதலாம் குறிச்சி மற்றும் புதிய காத்தான்குடி பகுதிகளிலேயே டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

டெங்கு நுளம்பை ஒழிப்பதன் மூலம் டெங்கு பரவுவதைத் தடுக்க முடியும். அதற்காக வீடுகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல், வெற்றுக்காணிகள், வீட்டுக் கிணறுகள் ஆகியவற்றைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச)

> "ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரைக்கும் 22 பேருக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளது.

# வெளியேற்றப்படும் மக்களுக்கு விரைவில் மாற்றுக் காணிகள்

## உயர்நீதிமன்றத்தில் உறுதியளித்தது அரசு

அம்பாறை.ஏப்.9
அம்பாறை, ஒலுவில் ,கேசங்கேணி கிராமத்தில் இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்படவுள்ளதால் அங்கிருந்து வெளியேற்றப்படவுள்ள மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு உயர்நீதிமன்றத்துக்கு உறுதிமொழி வழங்கியுள்ளது.

கேசங்கேணி மக்களால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு சம்பந்தமாக அரசு உயர்நீதிமன்றத்துக்கு எழுத்து மூலமாக பதில் வழங்கிய வேளையில் சட்ட மா அதிபர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்படவுள்ளதால் கிராமங்களை விட்டு வெளியேறுமாறு 2011 ஆம் ஆண்டில் தமது கிராமத்துக்கு வந்து இராணுவத்தினர் உத்தரவிட்டதாக மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

அதேவேளை சம்பந்தப்பட்ட இடங்களில் மனுதாரர்கள் சட்ட அனுமதியின்றி வாழ்ந்து வருவதால் அந்த இடங்களைக் கையகப்படுத்த இராணுவத்துக்கு உரிமை உள்ளது என்று அரச தரப்பில் வாதிடப்பட்டிருந்தது.

எனினும் வெளியேற்றப்படும் மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சட்ட மா அதிபர் உறுதி வழ்ங்கியுள்ளார். இவ்வாறு அரசு வழங்குகின்ற மாற்றுக் காணிகளை பெற்றுக் கொள்ள மனுதாரர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு தரப்புப் பதிலை ஆராய்வதற்காக இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது. (ச)

# கல்முனையில் சடலம் மீட்பு

அம்பாறை மாவட்டத்தின் கல்முனையிலுள்ள பழைய ஐஸ்வாடிக்கு அருகில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது என்று கல்முனை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் கூறினர். (ச)

# உரிமைகளைப் பெற முடியாத சிறுபான்மைச் சமூகங்கள்

## ஹரீஸ் எம்.பி.தெரிவிப்பு

அம்பாறை, ஏப்.8
அரசமைப்பில் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை சிறுபான்மை சமூகங்களான தமிழர்களும், முஸ்லிம்களும் சரியாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை இன்றுள்ளது. இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் கூறினார்.

கல்முனைப் பிரதேச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கல்முனை கிறிஸ்தவ இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கல்முனை மாநகரம் நீண்ட வரலாறு கொண்ட பாரம்பரிய நகரமாகும். இந்த மண்ணில் பிறந்ததற்குப் பெருமைப்பட வேண்டும். கல்முனைக்கென தனித்துவ கலாசாரப் பெருமையுமுண்டு.

தேசிய இனப்பிரச்சினையின் வடுக்கள் எமது பிராந்தியத்திலும் தாக்கங்களை ஏற்படுத்தத் தவறவில்லை.

பாரம்பரிய மிக்க இந்த நீண்ட வரலாற்றில் எம்க்குள்ள அடிப்படையான பிரச்சினைகளைப் பற்றி நாம் சரியான முறையில் ஆராய்வதற்கான ஒரு கட்டமைப்பு இல்லாத நிலைமை இருந்து வருகின்றது.

எனினும் கல்முனைப் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அமைப்பே இதற்கு ஆறுதல் தரக்கூடிய ஒற்றுமையின் சின்னமாகத் திகழ்கின்றது.

இரு சமூகத்தவர்களையும், இரு சமூக இளைஞர்களையும் ஒருங்கே கொண்ட அமைப்புக்கள் இல்லாமை வெட்கப்பட வேண்டிய விடயமாகவுள்ளது. இன்று தமிழ், முஸ்லிம் மக்களின் தேசிய அரசியல் பாதையென்பது மிகவலுவாகவும் ஒற்றுமையாகவுமுள்ளது.

குறிப்பாக நாட்டில் ஏதோ ஓர் அடிப்படையில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தங்களுடைய அரசமைப்பில் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலைமையும் அரசியல் உரிமையைச் சரியான முறையில் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையுமுள்ளது.

ஆனாலும் இதனைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் தமிழ்ச் சமூகத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைமைகளும் முஸ்லிம் சமூகத்தின் முஸ்லிம்காங்கிரஸ்தலைமைகளும் ஒரே பாதையிலேயே செல்கின்றன. மிக இறுக்கமாகவுள்ள இந்த நிலைமை இன்று மிக ஆரோக்கியமாகவேயுள்ளது.

தந்தை செல்வா அன்று இவ்விரு சமூகங்களினதும் ஒற்றுமைக்காகப் பாடுபட்டபோது இருந்த ஆரோக்கியமான சூழ்நிலை இன்று தமிழ், முஸ்லிம், சமூகங்களிடையே உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நான் பிரதிநிதித்து வப்படுத்தும் முஸ்லிம் காங்கிரஸ் இன்று மிகப் பொறுப்பு வாய்ந்த நிலைமையில் செயற்படுகின்றது.

நாம் அரசின் பங்காளியாகவிருந்தாலும் குறிப்பாக தமிழ் மக்களின் போராட்டத்தின் மூலம் லட்சக் கணக்கான உயிர்த் தியாகத்தின் மூலம் கிடைத்த மாகாண சபை முறைமையை ஒழிப்பதற்கு பலமான ஒரு கட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கென அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயன்றபோது, எவராலும் அதனைத் தடுக்க முடியாத சூழ்நிலையில் அவசர அவசரமாக வெளிநாட்டிலிருந்து வந்து எமது முஸ்லிம் காங் கிரஸ் தலைமை அதற்குத் தமது கடுமையான எதிர்ப் பைத் தெரிவித்தது. அதனால் தான் இந்த விடயம் சட்ட மூலமாவது தடுக்கப்பட்டு இன்று மாகாண சபைகள் இயங்குகின்றன. அன்றேல் தமிழினப் போராட்டத்தின் அத்தனைதியாகங்களுக்கும் அர்த்தமில்லாமல் போயிருக் கும்.

அவ்வாறு அன்று எமது தலைமை இதனைத் தடுத்தமையால் இனிமேல் அதில் கை வைக்க முடியாதவாறு சர்வதேசம் அழுத்தம் கொடுக்கும்நிலைமையேற்பட்டுள்ளது.

எனவே எமது தலைமைகள் வழியே ஒற்றுமைக்காகப்பாடுபடவும், எழும் சிறு பிரச்சினைகளைப் பூதாகரமாக்காது கூடிப் பேசி திறந்த மனது டன் செயற்படுவோம் - என்றார். (ச-30)






துன்னாலை? குடம்பிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
பரிபாலனசபை வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 04.05.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி அளவில் ஆலய மண்டபத்தில் தலைவர் செ.ஈஸ்வரபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. அடியார்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சிகள்

01.தேவாரம்
02.சிவாச்சாரியார் ஆசி உரை
03.தலைவர் உரை
04.செயலாளர் அறிக்கை
05.பொருளாளர் அறிக்கை
06.பதவிவெற்றிடங்கள் நிரப்புதல்
07.பிரேரணைகள்
08.கடிதங்கள்
09.ஏனைய விடயங்கள்
10.தேவாரம்

குறிப்பு: பிரேரணைகள், ஆலோசனைகள் ஏனைய விடயங்கள் எழுத்துமூலம் பொருளாளர் கு.இராசநாயகத்திடம் அல்லது பரிபாலனசபை நிர்வாக உறுப்பினர் ஒருவரிடம் 24.04.2014 இற்கு முன்னதாக சமர்ப்பிக்கலாம்.

தனிப்பட்ட அழைப்பாக இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.
பரிபாலனசபையினர்.
46493 (3.6.4)

# உணவுத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படாது

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.9

தமிழ் , சிங்களப் புது வருடப் பிறப்பை முன்னிட்டு நுகர்வோருக்கு எந்த வகையிலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாத விதத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உள்ளிட்ட 450 பொருள்களை ஒப்பீட்டளவில் மலிவான விலைக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

இந்தத் தகவலை கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.


இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு முழுவதும் 300 இற்கும் அதிகமான சதொச நிலையங்கள் இரவு, பகலாக உணவுப் பொருள்கள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை, பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கிழங்கு, பருப்பு, அரிசி, மா, சீனி, கோதுமை மா, நெத்தலிக் கருவாடு, காய்ந்த மிளகாய், ரின் மீன், பாசிப்பயறு, கடலை உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் போதுமான அளவு கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலத்தில் பணம் சம்பாதிக்கும் நோக்கில் காலாவதியான, பழுதடைந்த மற்றும் நச்சுப் பொருள்கள் கலந்த உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பண்டிகைக் கால தேடுதல்களுக்கென நாடு முழுவதும் 150 குழுக்கள் சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டுள்ளன.

குறுகிய நோக்கில் பணம் சம்பாதிப்பதற்காக உணவுப் பொருள்களைப் பதுக்கி தட்டுப்பாட்டை ஏற்படுத்த முனையும் வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (ச)



தேசிய ஐக்கியத்துக்கான மாநாடு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுவே நாணயக்கார உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அரசு மீது மக்கள் நம்பிக்கை இழப்பு

## போர் மூலம் பெற்ற வெற்றியை எப்போதும் பயன்படுத்த முடியாது என்கிறது ஐ.தே.க.

கொழும்பு,ஏப்.9

இலங்கை அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அதனால் அண்மையில் நடைபெற்று முடிந்த மேல்,தென் மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன.

போர் வெற்றியை எல்லாக் காலங்களிலும் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.



ஜோசப் மைக்கல் பெரேரா

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலில் அரசு வெற்றியீட்டியுள்ளது என்று எவரேனும் தெரிவித்தால் அது முற்று முழுதான நகைச்சுவையே. ஏனெனில் அரசின் வாக்குகள் அதிகளவில் வீழ்ச்சியடைந்துள்ளன. மொத்தமாக வாக்களித்தவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு வாக்களித்தவர்களின் மொத்த எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டால் இந்த உண்மை வெளிப்படும்.

அரசின் மீது மக்கள் கொண்டுள்ள கடுமையான எதிர்ப்பே இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது, அதிக சந்தர்ப்பங்களில் போர் வெற்றியைப் பயன்படுத்தி அரசு தேர்தல்களில் வெற்றியீட்டியது. எனினும், இந்த வெற்றிகளை ராஜபக்ஷ குடும்பத்தினர் மட்டுமே அனுபவித்தனர். இனியொரு தேர்தல் நடத்தப்பட்டால் அரசு மேலும் பின்னடைவைச் சந்திக்கும். ஏனெனில் அப்போது இருந்த மஹிந்த ராஜபக்ஷவை விடவும் தற்போது உள்ள மஹிந்த மீதான மக்கள் அபிமானம் வீழ்ச்சியடைந்துள்ளது-என்றார். (ச)

# தங்க உருண்டை கடத்த முயன்ற நபர் கைது

கொழும்பு,ஏப்.9.

தங்க உருண்டைகளைச் சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்ல முயன்ற நபர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

257 கிராம் நிறையுடைய 10 தங்க உருண்டைகள் இந்த நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்று சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி ரூபா 12 லட்சத்து 85,000 என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சந்தேகநபர் தங்கக் கட்டிகளைச் சென்னைக்கு கடத்த முயற்சித்துள்ளார்.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று சுங்க ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (ச)

# இலங்கை மக்களிடம் மனிதாபிமானம் இல்லை

## இப்படிக் கூறுகிறார் துமிந்த திஸாநாயக்க

கொழும்பு,ஏப்.9

ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கை மாற்றமடைந்து வருகின்ற போதிலும், நாட்டு மக்கள் மத்தியில் மனிதாபிமானம் இல்லாமல் போயுள்ளது என்று கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமப் பகுதிகளில் வீடுகள் அமைக்கப்படுகின்றன, வீதிகள் செப்பனிடப்படுகின்றன. விமான நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

மக்களைச் சமய வழிபாடுகளில் ஈடுபடச் செய்வது பௌத்த பிக்குகளின் கடமையாகும். மக்களை நல்வழிப்படுத்தும் நடவடிக்கையை வேறு எவராலும் செய்ய முடியாது.

பிள்ளைகளை அறவழியில் நடத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதியோ கல்வி அமைச்சரோ உணர்ந்து பயனில்லை. அதனைப் பெற்றோர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் மத வழிபாட்டுச் சிந்தனைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதனால் நாள்தோறும் கொலை, கொள்ளை போன்ற பல்வேறு குற்றச் செயல்கள் பதிவாகின்றன.

பல பௌத்த பிக்குகள் இன்று மத சிந்தனைகள் பற்றி அறிவுரை வழங்காது, அரசியல் பேசி வருகின்றனர்.

நான் அனைத்துப் பௌத்த பிக்குகளையும் குற்றம் சுமத்தவில்லை. எனினும், ஒரு சில பௌத்த பிக்குகள் மத வழிபாட்டுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை-என்றார். (ச)

# மின்னல் தாக்கம் குறித்து அவதானம் மிக அவசியம்

## 3 மாதங்களில் 7 பேர் உயிரிழப்பு

கொழும்பு.ஏப்.9

நாட்டின் காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் மின்னல் தாக்கம் குறித்து பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி முதல் இதுவரையில் 7 பேர் மின்னல் தாக்கத்தால் உயிரிழந்திருப்பதுடன் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இடைப்பருவப் பெயர்ச்சி மழை தற்போது ஆரம்பமாகியுள்ளது. இந்த மாத இறுதி வரையில் நீடிக்கக்கூடிய இந்தக் காலநிலையில் வழமையிலும் பார்க்க கூடுதலாக மின்னல் தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உண்டு என்று வானிலை அவதான நிலையத்தின் கடமை நேர அதிகாரி அனுஷா வர்ணசூரிய தெரிவித்தார்.

பொதுவாக இடைப் பருவப் பெயர்ச்சியுடனான காலநிலை நிலவும் மார்ச், ஏப்ரல் மற்றும் ஒக்டோபர், நவம்பர் காலப் பகுதிகளிலேயே மின்னல் தாக்கம் கடுமையாக இருப்பதுடன் நாட்டில் மின்னல் தாக்கத்தினால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் வெட்டவெளியில் அல்லது வயல் வெளியில் நின்றிருந்தவர்களே மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் கூறினார். (ச)

# இலங்கை - வியட்நாம் இடையே இரு ஒப்பந்தம்

## கைதிகள் பரிமாற்றம் மற்றும் நாடுகடத்தல் தொடர்பில்

கொழும்பு,ஏப்.9

கைதிகள் பரிமாற்றம் மற்றும் நாடுகடத்தல் தொடர்பில் இலங்கை மற்றும் வியட்நாமுக்கு இடையில் இரு ஒப்பந்தங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இலங்கை வந்துள்ள வியட்நாம் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ட்ரான் டாய் குவான்ங்க், இலங்கை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், சட்டமும் ஒழுங்கும் அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி ஆகியோர் இரு ஒப்பந்தங்களிலும் கையொப்பமிட்டனர். கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் காலை இரு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டதுடன் இரு தரப்பு சந்திப்புக்களும் இடம் பெற்றன.

இரு நாடுகளிலும் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டு சிறைக் கைதிகளாக உள்ளவர்களைப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டுவிட்டு நாட்டிலிருந்து தப்பி வந்து தலைமறைவாக வாழ்பவர்களை மீண்டும் நாடுகடத்தவே இரு ஒப்பந்தங்களும் வழி செய்கின்றன.

கைதிகளைப் பரிமாற்றம் செய்யும் ஒப்பந்தத்தில் வியட்நாம் நாட்டின் அமைச்சருடன் இலங்கையின் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமும், நாடுகடத்தல் தொடர்பான ஒப்பந்தத்தில் சட்டமும் ஒழுங்கும் அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சியும் கைச்சாத்திட்டனர்.

இந்நிகழ்வில் பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்ககோன், சட்டமும் ஒழுங்கும் அமைச்சின் சிரேஸ்ட செயலர்களான டோனல் முரகே, மாலிகா சூரியப்பெரும, உதவிச் செயலர் டி. எம். எம். திஸாநாயக்க உட்பட இரு நாட்டு உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ச)



இருதரப்பு ஒப்பந்தங்களில் வியட் நாம் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ட்ரான் டாய் குவான்ங்க், இலங்கை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கைச்சாத்திடுகின்றனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வாய்ப் பேச்சு மட்டும் போதாது

இலங்கை நாட்டில் சிறுபான்மை மக்கள் என்று எவருமே இருக்க முடியாது என்று நேற்றுமுன்தினம் மீண்டும் ஒருமுறை தெரிவித் திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. 2009இல் போர் முடி வடைந்த பின்னர் அவர் ஆற்றிய முக்கிய உரைகளில் - அதிலும் குறிப்பாக இலங்கையின் சுதந்திர தின உரைகளில் - இந்தக் கருத்தை அவர் திரும்பத் திரும்பக் கூறிவருகிறார்.

இலங்கையில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் சமத்துவமாகவும் சம நீதியுடனும் நடத்தப்படுகிறார்கள்; நடத்தப்படுவார்கள் என்பதைக் குறிக்கும் முகமாக அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்து வருகிறார். ஒருவேளை அப்படிப்பட்ட ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்பவும்கூடும்.

அவரது விருப்பம் நிறைவேறினால், அவர் கூறுவது போன்றே நடந்தால் அப்போது அது குறித்து மகிழ்ச்சி அடைபவர்களாக தமிழர்களைத் தவிர வேறு எவரும் இருக்க மாட்டார்கள் என்று அடித்துக்கூறலாம். ஆனால், யதார்த்தம் மஹிந்த ராஜபக்ஷ கூறுவதற்குப் புறம்பாகவே விரிந்து செல்கிறது.

இந்த நாடு இன்னும் இன்னும் இனப் பிளவுக்குள் உந்தித் தள்ளப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட ரணகளத்தால் உருவான இனக் காயத்தின் வடுவை ஆற்றுவதற்கான நடவடிக்கைகள் முழு வீச்சில் இங்கு மேற்கொள்ளப்படவேயில்லை. ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுகின்ற அதிகாரம் தவிர மீதி எல்லா அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதாக விமர்சிக்கப்படும் அதிகாரங்களைத் தன்னகத்தே வைத்திருக்கும் மஹிந்த ராஜபக்ஷ நினைத்தால் கடந்த ஐந்து ஆண்டுகளில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இதனைச் சாதித்திருக்க முடியாது என்று சொல்வதற்கில்லை.

தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு இதுவரையில் இதய சுத்தியுடனான நடவடிக்கைகள் சிலவாவது எடுக்கப்பட்டிருந்தால், இன்று ஜெனிவாவிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக முன்னின்று உழைத்து மூன்றாவது தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரும் நிலை ஏற்பட்டிருக்கப் போவதில்லை. குறைந்தபட்சம், தான் நியமித்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவாவது மஹிந்த ராஜபக்ஷ தனது முழு அதிகாரங்களையும் பயன்படுத்தி நடவடிக்கை எடுத்திருப்பாரானால், அவர் சொல்வதைப் போன்று இலங்கை நாட்டில் சிறுபான்மையினர் என்று எவருமே இருப்பதற்கு நியாயம் இல்லை என்ற வாதத்தின் மீது தமிழ் முஸ்லிம் மக்களுக்கு நம்பிக்கை வந்திருக்கும்.

நடந்ததோ, அதற்கு நேர்மாறானதாகவே இருந்தது. சர்வதேசத்துக்கு அறிக்கையிடுவதற்கான ஒப்புக்குச் சப்பாணியான நடவடிக்கைகள் மட்டுமே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் மீது மேற்கொள்ளப்பட்டன. இதோ! ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றான மும்மொழிக் கொள்கைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் அண்மையில் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டது. சிங்களமும் ஆங்கிலமும் கற்பிப்பதற்கு பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நல்லதுதான். ஆனால் ஏன் ஐயா, அதேசமயத்தில் அம்பாந்தோட்டையில் தமிழும் ஆங்கிலமும் கற்பிப்பதற்கான நிலையம் திறக்கப்படவில்லை?

ஜனநாயகம் என்பது பற்றி ஒரு கதை உண்டு. ஜனநாயகம் என்பது சின்ன மீனைத் தின்னுவதற்கு பெரிய மீனுக்கு இருக்கும் அனைத்து உரிமைகளும் அந்தப் பெரிய மீனைத் தின்பதற்குச் சிறிய மீனுக்கும் உண்டு என்பதுதான் அந்தக் கதை. ஆனால் யதார்த்தம் சின்ன மீனால் ஒருபோதும் பெரிய மீனைத் தின்ன முடியாது, அதுவாகச் செத்து ஒழியும் வரை.

இதுபோன்றே மும்மொழிக் கொள்கையின் நடைமுறைப்படுத்தலும் அமைந்துவிடுமோ என்கிற அச்சம் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களிடம் ஏற்படுவது நியாயமானதுதானே! தமிழ் பேசும் எல்லா மக்களும் சிங்களமும் ஆங்கிலமும் பேசத் தெரிந்து கொண்ட பின்னர் சிங்கள மக்களுக்கு தமிழும் ஆங்கிலமும் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை என்ன உள்ளது?

இது ஒரு சிறு உதாரணம் மட்டும்தான். இதுபோன்றே ஒவ்வொரு விடயத்திலும் சிறுபான்மை மக்களை அச்சத்துக்குள்ளும் இரண்டாம்தரக் குடிமக்கள் என்ற மனப் பதிவுக்குள்ளும் தள்ளும் வகையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு, இலங்கை நாட்டில் சிறுபான்மை மக்கள் என்று எவரும் இருப்பதற்கு நியாயம் இல்லை என்று கூறுவது எந்த வகையில் நீதியானது?

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உண்மையில் அதனைத் தான் விரும்புபவராக இருந்தால் இப்போதுகூட காலம் கடந்து விடவில்லை. உண்மையான இனநல்லிணக்கத்துக்குத் தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி அவர் முயற்சிக்க வேண்டும். வாய்ப் பேச்சு மட்டும் இங்கே சிறுபான்மை இன மக்களை திருப்திப்படுத்திவிடாது. அதையும் தாண்டிய நேர்மையான தற்துணிபு கொண்ட நடவடிக்கைகள் அவசியம். சிறுபான்மை மக்களின் இதயங்களை வெல்வதற்கான நடவடிக்கை அவசியம்.

இல்லையேல், இன்று போர்க் குற்ற விசாரணைக்கு இலங்கை நாட்டின் ஒரு பகுதி மக்கள் ஆதரவளிப்பதைப் போன்றே நாளை இதனைவிடவும் பாரதூரமான முடிவுகளை ஐ.நா. எடுப்பதற்கும் அவர்கள் உறுதுணையாக நிற்பார்கள். எதுவேண்டும் என்பதை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் இப்போது தீர்மானிக்கவேண்டும். தவறினால், வரலாறு வேறு விதமாகத் தீர்ப்பு எழுதிவிடும்.

# வரப்போகும் ஆபத்து குறித்து சிந்திக்குமா மஹிந்த அரசு?

புதினப் பலகைக்காக
நித்தியபாரதி



உள்நாட்டுப் போரின் இறுதியில் இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக்கோரி ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் செயற்படும் மனித உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம்எனமனிதஉரிமை அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

போரின் இறுதியில் இலங்கை அரச படைகளாலும் தமிழ்ப் புலிகளாலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த வியாழன் அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைக்கு எதிராக மிக அண்மைய ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட மூன்றாவது தீர்மானமாக இது அமைந்துள்ள போதிலும், சுயாதீன விசாரணை கோருகின்ற முதலாவது தீர்மானமாக இது காணப்படுகிறது. இந்தத் தீர்மானமானது ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் செயலகத்தால் முன்வைக்கப்பட்டது. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் ஆதரவுடன் முன்வைக்கப் பட்ட இந்தத் தீர்மானத்துக்கு சபையின் 47 உறுப்புநாடுகளில் 23 நாடுகள் ஆதரவு வழங்கின. இதனை 12 நாடுகள் எதிர்த்ததுடன், 12 நாடுகள் இதற்கான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது புறக்கணித்தன.

இந்தத் தீர்மானத்தை தாம் எதிர்ப்பதாகவும், தேசிய மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்த இது ஒருபோதும் உதவாது எனவும் இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அரச இணையத்தளம் ஒன்றில் தெரிவித்திருந்தார். கற்றுக் கொண்ட பாடங்களுக்கான மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் அமைதியை உண்டுபண்ணுவதற்கான பொறிமுறை ஒன்றை அமைப்பதையே அரசு விரும்புவதாகவும் இதற்கான அழுத்தத்தைத் தொடர்ந்தும் வழங்கவுள்ளதாகவும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

2009 இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட உள்நாட்டு போரின் போது பொதுமக்கள் மீது தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டமை, திட்டமிட்ட படுகொலைகள், பாலியல் வன்புணர்வுகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துகளை அனுப்புவதற்குத் தடைவிதித்தமை போன்ற பல மீறல்களில் இலங்கை அரச படைகள் ஈடுபட்டன. இறுதிக் கட்டப் போரில் 40,000 வரையான தமிழ் மக்கள் படுகொலை செய்யப் பட்டனர் என்று ஐ.நா. அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேபோன்று தமிழ்ப் புலிகளும் பல்வேறு போர் மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். அதாவது சிறுவர்களைப் படையில் இணைத்தமை, போரில் அகப்பட்டுத் தவித்த மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை, போர் வலயத்திலிருந்து தப்பி அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல முயன்றவர்களைக் கொன்றமை போன்ற பல மீறல்களில் தமிழ்ப் புலிகள் ஈடுபட்டனர்.

இலங்கையில் மனித உரிமைகள் அமைப்புக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளில் தலையிடுதல், காணாமற்போதல்கள் மற்றும் சித்திரவதைகள் போன்ற பல்வேறு மீறல் சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

தனக்கெதிராக முன்வைக்கப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் இலங்கை அரசு முற்றாக நிராகரித்துள்ளது. மீண்டும் நாட்டின் வடக்கில் தமிழ்ப் பிரிவினைவாதிகள் செயற்படத் தொடங்கிவிடுவார்களோ என்கின்ற அச்சம் உள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. பிரிட்டன், அமெரிக்கா, கனடா, நோர்வே, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புக்கள் சில பயங்கரவாதத்துக்குத் துணைபோவதாகக் குற்றம் சுமத்தி 15 வரையான அமைப்புக்கள் இந்த வாரம் தடைசெய்யப்பட்டுள்ளன.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் பிரகாரம் அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் தமிழர் அமைப்புக்களுடன் தொடர்பைப் பேணுவதற்கு இச்சட்டம் தடையாக உள்ளதாக ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான அனைத்துலக மன்னிப்புச் சபையின் பிரதிநிதி பீற்றர் ஸ்ப்ளின்ரர் தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்புக்களுடன் தொடர்பைப் பேணும் எவரும் பயங்கரவாதத்துக்கு துணைபோனதாகக் குற்றம் சுமத்தப் பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுவர் என பீற்றர் ஸ்ப்ளின்ரர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை மனித உரிமை அமைப்புக்கள் வரவேற்கின்றன. இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு இது புதிய நம்பிக்கையைத் தருகின்றது. அனைத்துலக விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் அனைத்துலக ரீதியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக இது காணப்படுகிறது என அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆசிய-பசிபிக் பிராந்தியத்துக்கான துணை இயக்குநர் டேவிட் கிறிபிதிஸ் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் முதன்மை மனித உரிமையாளர் றுக்கி பெர்னாண்டோ மற்றும் வணக்கத்துக்குரிய பிரவீன் மகேசன் அடிகளார் ஆகியோர் கைது செய்யப்பட்டமையானது இலங்கையில் பல்வேறு மீறல்கள் இடம்பெறுவதைச் சுட்டிநிற்கின்றது. இதனை இலங்கை அரசு மேற்கொள்கிறது எனப் பிரிட்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கைப் பரப்புரையாளர் பிரெட் கார்வர் தெரிவித்துள்ளார்.

> “பொதுமக்கள் மீது தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்களை மேற் கொண்டமை, திட்டமிட்ட படுகொலைகள், பாலியல் வன்புணர்வுகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துகளை அனுப்புவதற்குத் தடை விதித்தமை போன்ற பல மீறல்களில் இலங்கை அரச படைகள் ஈடுபட்டன. இறுதிக் கட்டப் போரில் 40,000 வரையான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஐ.நா. அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வெளியில் வாழும் மக்கள் உண்மையில் இங்கு என்ன நடந்தது என்பதை அறியாதிருப்பதற்காகவே இவ்வாறான பரப்புரைகளில் ஈடுபடுபவர்களைக் குறிவைத்து தலையீடு செய்தல் மற்றும் அடக்குமுறைக்கு உட்படுத்துதல் போன்றன இடம்பெறுகின்றன. இதன் ஒரு கட்டமாகவே எமது கைது அமைந்துள்ளது என நான் நம்புகிறேன் என கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஊடகங்களிடம் எவ்வித கருத்துக்களும் கூறக்கூடாது என பெர்னாண்டோ மீது அரச தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ள போதிலும் ஐ.நா. தீர்மானத்துக்கு ஆதரவாக உள்ளவர்களுடன் இணைந்து இவர் செயற்பட்டுள்ளார்.

இலங்கை அரசு தன் மீதான அனைத்துலகப் போர் விசாரணைக்கு முகங்கொடுக்கத் தவறின் சிரியா மற்றும் வடகொரியாவில் அந்தந்த நாடுகளின் அரசுகளின் ஈடுபாடு இல்லாது இடம் பெற்றதைப் போன்று விசாரணை ஆணைக்குழு அமைக்க வேண்டியேற்படும் என அனைத்துலக மன்னிப்புச் சபையின் பிரதிநிதி பீற்றர் ஸ்ப்ளீன்ரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அசாதாரண குணங்குறிகளுடன் மங்கோலிஸ நிலைமை



சி.சஸ்ரூபி

பரம்பரை அலகில் ஏற்படும் பிறழ்வான சேர்க்கையால் உடல் உளம் சார்ந்த அசாதாரண குணங்குறிகள் தோற்றுவிக்கப்படுவதே மங்கோலிஸ நிலைமையாகும். இந்த நிலைமையை John London Down என்பவர் விவரித்தார். இது அவரது பெயரால் Down Syndrom எனப்படுகின்றது.

மங்கோலிஸ நிலைமையுடன் உள்ள எவரும் ஏனையோர் போன்று தமக்குரிய மருத்துவத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.


மேலும் மங்கோலிஸ நிலைமையானது ஒருவரைச் சுகவீனமுற்றவராக மாற்றாது. இத்தகைய நிலையில் உள்ள ஒருவர் ஏனையோர் போன்று நோய்களால் அவதிப்படுவர்.

எனவே இவர்களும் சுகாதார சேவைகளைப் பெறுவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்

மங்கோலிஸ நிலைமையுள்ள ஒருவர் பரம்பரை ரீதியான இதய நோய்கள், பார்வை மற்றும் செவிப்புலன் குறைவு ஆகியவற்றால் பாதிக்கப்படும் ஏதுநிலை உள்ளது. இதனைக் கையாள்வதற்குத் தேவையான சரியானதும், ஆதாரத்துடன் கூடியதுமான தகவல்கள் மருத்துவ உலகுக்குத் தேவையாக உள்ளன. மேலும் சுகாதாரத் துறையினர் இவர்களுக்குச் சிகிச்சையளிக்கும் போது அவர்களின் விசேட தேவைகளை அறிந்திருத்தல் அவசியமானதாகும். மேலும் சிகிச்சை வழங்கும்போது இவர்களிடம் பாகுபாடு காட்டுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

மேலும், இந்த நிலையை அறிந்து கொள்ளும் பொருட்டு கர்ப்ப காலத்தில் தாயின் வயிற்றை ஸ்கான் செய்து பார்த்தல் மற்றும் தாயின் வயிற்றினூடு ஊசியைச் செலுத்தி சிசுவைச் சுற்றியுள்ள சடைமுளை மற்றும் பாதுகாப்புக் கவசத்தினுள் உள்ள திரவம் மற்றும் சிசுவின் தொப்புள் கொடியின் இரத்த மாதிரி பெற்றுப் பரிசோதனை செய்து பார்ப்பதுண்டு. சிசுவுக்கு மங்கோலிஸ நிலை ஏற்படும் சாத்தியங்கள் காணப்பட்டால் சில நாடுகளில் அவற்றை அழிக்கக்கூடிய வசதிகள் உள்ளன. ஆனால் இலங்கையில் இவ்வாறு செய்ய முடியாது. இதனால் இத்தகைய பரிசோதனைகள் இங்கு மேற்கொள்ளப்படுவதில்லை. இதனால் குழந்தை பிறந்ததன் பின்னரே இங்கு இதனை உறுதி செய்துகொள்ள முடியும்.

இந்த நிலைமையுடன் பிறக்கும் குழந்தைகளின் தலை சிறியதாகக் காணப்படும். உடலின் நீளமும் குட்டையாகக் காணப்படும். மேலும் வெளிநோக்கிய கண்கள், சாய்வான கண் இமைகள், கண்களின் கருவிழிக்கு அருகில் வெண்ணிறப் பொட்டுக்கள் என்பனவும் காணப்படும். அத்துடன் குட்டையான கழுத்தும், தட்டையான மூக்கும், சற்று இறங்கிய சிறிய காதுகளும், வெளிநோக்கிய நாக்கும், ஐதான தலைமுடிகளும், தனித்த ஆழமான கைரேகை, பாதத்தின் பெருவிரலுக்கும், இரண்டாவது பெருவிரலுக் கும் இடையில் பெரிய இடை வெளி, நலிவானதசைவலிமை என்பன காணப் படும். இவர்களின் விருத்திப் படி முறைகள் மந்த கதியிலேயே இடம் பெறும்.





இவர்களில் சிலர் இரண்டு வயதில் நடக்க ஆரம்பித்தாலும் பெரும்பாலானோர் தமது நான்கு வயதிலேயே நடக்க ஆரம்பிக்கின்றனர்.

ஆனால் இவர்கள் பாடசாலை சென்று கல்வியைத் தொடர்ந்து சமுதாயத்தில் கல்வி கற்ற பிரசையாக மாறுவதென்பது இலகுவானதல்ல.

மேலும், இவர் களின் மன வளர்ச்சியும் குன்றிக் காணப்படுவதுடன் சராசரி விவேகத்திறன் 40-80 ஆக அமைகின்றது.

மேலும் பிறவியிலேயே இதய நோய்கள், கண்புரை நோய், சுவாச நோய்கள், பார்வை, மற்றும் செவிப்புலன் குறைபாடு, தைரொயிட் சுரப்பி குறைபாடு, வலிப்பு நோய் போன்ற பிரச்சினைகளுக்கான வாய்ப்புகளும் உள்ளன.

மங்கோலிஸ நிலைமையுள்ள ஒருவர் பல்வேறு சிகிச்சை முறைகளைப் பெற்றுக் கொண்டாலும் இதனைக் குணப்படுத்த முடியாது. ஆனால் இந்த நிலைமையுடன் தொடர்புபட்ட உடல், உளம் சம்பந்தப்பட்ட நோய்களுக்குச் சிகிச்சையளிப்பது அவசியமானது.

மேலும் இவர்களுக்கு இயன்மருத்துவ சிகிச்சை முறை (தசை வலிமையைப் பேண) பேச்சு வழி சிகிச்சை, உளவள சிகிச்சை போன்ற மேலும் பல சிகிச்சை முறைகள் தேவைப்படுகின்றன.

மொத்தத்தில் இந்த நிலை மையுடன் வாழும் இவர்களையும் ஒரு பொருட்டாக மதித்து அவர்களும் ஏனையோரைப் போல் தமது பணிகள், இலட்சியங்களைச் செய்து முடிக்க கைகொடுத்தல் யாவரினதும் கடமையாகும்.

---

வாசகர் திருமுகம்

## பார்வையாளர்களின் குறைபாடுகள் நீங்குமா?

வடபகுதியில், போராலும் பல்வேறு வகையாலும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விதம் விதமான நோய்களால் பாதிக்கப்பட்டு பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோரும், அவர்களைப் பார்வையிட வரும் பார்வையாளரும் உள் நுழைவு அனுமதிப் பத்திரம் நடைமுறையில் உள்ளதாலும், மாலை நேரம் நடைமுறையில் உள்ள பார்வையிடும் நேரத்தாலும், கொளுத்தும் வெயிலிலும், மழையிலும் ஒதுங்க இடமின்றியும், சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நோயாளரைப் பார்வையிடுவதற்கு இரண்டு பார்வையாளர் உள் நுழைவு அனுமதிப்பத்திரம் மட்டும் வழங்கப்படுவதால், நோயாளரைப் பார்வையிட முடியாது கடும் அவஸ்தைகளையும், பிரச்சினைகளையும், எதிர்கொண்டு விடுதிக் காவலாளிகளுடன் முரண்பட்டு, வாக்குவாதப்பட்டு, அடிதடி நிகழ்வுகளும் அடிக்கடி நிகழ்வதை அனுபவ ரீதியாகவும், பத்திரிகைச் செய்திகள் ஊடாகவும் அறிகின்றோம்.

வன்னிப் பகுதிகள் மற்றும் யாழ். குடாநாட்டின் தூரவிடங்களிலிருந்தும் ஏனைய சகல பகுதிகளிலிருந்தும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வந்து, சிகிச்சை பெறும் நோயாளிகள் உட்பட பார்வையிட வரும் பார்வையாளரும் உள் நுழைவு அனுமதிப்பத்திர நடைமுறையாலும் நேரக் கட்டுப்பாடுகளாலும் தொல்லைகளை அனுபவிக்கின்றனர்.

ஆகவே யாழ்.போதனா வைத்திய சாலை விடுதியில் தங்கியிருக்கும் நோயாளரைப் பார்வையிடுவதற்கு உள் நுழைவு அனுமதிப் பத்திரம் அவசியம் என்ற நடைமுறையை நீக்குமாறும் மாலை நேரம் வட பகுதியின் பல பாகங்களிலிருந்தும் வரும் பார்வையாளரின் நலன் கருதியும் மாலை நேரப் பார்வையிடும் நேரத்தை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 6 மணிவரையும் மாற்றி அமைக்குமாறும் பார்வையாளர் நலன்கரு +தி. வெயில் கொடுமையிலும் மழையில் நனைவதையும் போக்கும் வகையில் விடுதிக்கு வெளியே வாயிலில் நிழற் கொட்டகைகளை அமைக்கவும் கோரிக்கை விடுக்கின்றேன்.

***வ.க. ஜெயபாலன்***
***யாழ்.மாநகரசபை உறுப்பினர்***

---

## தவக்காலச் சிந்தனை

### அமைதியின் கருவிகளாவோம்

ஆன்மிகத்தின் சாராம்சம் அமைதி. அமைதியை வெளியில் எங்கும் தேடிக் கண்டுபிடிக்க முடியாது. அன்பின் பூரணத்துவத்தில் பிறப்பதுதான் அமைதி. இறைவனைச் சார்ந்து வாழும் வாழ்க்கையில்தான் அமைதி மலரும். இறைவனோடும், பிறரோடும் ஒப்புரவு கொள்ளும்போதுதான் எவரும் நிறை அமைதியைச் சுவைக்க முடியும். "அமைதி தூய ஆவியின் கனியாகும்" (கலா 5:22)

இன்று நாட்டிலும், வீட்டிலும் அமைதி மலருமா? நிம்மதியான வாழ்வு தோன்றுமா? என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த அமைதியை பிறர் தரமுடியாது. நாம்தான் உருவாக்க வேண்டும்.

எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் அமைதியின் கருவியாக வேண்டுமெனில் நம்மை வெறுப்பவர்களிடையே அன்பையும், எதிரிக்கு மன்னிப்பையும், துன்புறுத்துவோருக்காக இறைவேண்டலையும், அடக்குமுறைக்கு அகிம்சையையும் வெளிப்படுத்துவோம். உலகுக்கு அமைதியைத் தரவந்த இயேசுவும் இதனையே கல்வாரி வரை கடைப்பிடித்தார்.

***எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.***



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: எதற்கும் கலக்கமோ, அதிர்ச்சியோ அடையாத சூழ் நிலைகள் அமையும். எல்லா வகையிலும் நல்ல பயன்கள் உண்டாகும். எதிர்பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**இடபம்**: தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டுக் கிடைக்கும்.

**மிதுனம்**: நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் கௌரவம் கூடும். பெண்களுக்கு இழுபறியாக இருந்த பிரச்சினைகள் சாதகமான முடிவு பெறும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தேவையான உதவி கிடைக்கும்

**கடகம்**: வாழ்க்கையில் முன்னேற தேவையான உதவிகள் கிடைக்கும். எதிலும் மிகவும் கவனமாகச்செயற்படுவது நல்லது. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம். நீங்கள் அடுத்தவருக்கு வலியச்சென்று உதவி செய்வீர்கள்.

**சிங்கம்**: உங்களுக்கு வருமானம் அதிகரிக்கும். உறவினர்களுடன் சுமுக நிலை காணப்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும்.

**கன்னி**: எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த நன்மையை தராவிட்டாலும் இறுதியில் உங்களது எண்ணப்படியே எதையும் செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும்.

**துலாம்**:கௌரவம் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அதற்குத் தேவையான பண உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். சமாளிக்க முயல்வீர்கள்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். ஆன்மிகப் பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**தனுசு**: வெளித் தொடர்புகளில் எச்சரிக்கை தேவை. கௌரவம் உயரும். குடும்பத்தில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது போக்கிக் கொள்வது நல்லது. திட்டமிட்டுச் செயலாற்றுவது முன்னேற்றத்திற்கு உதவும்.

**மகரம்**: சிக்கலான பிரச்சினைகளையும் எளிதாகத் தீர்ப்பீர்கள். சொந்தம், நட்பு வகையில் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. சில நேரத்தில் விபரீதமான எண்ணம் தோன்றலாம் கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான விடயங்களில் சாதகமான பயன் கிடைக்கும்.

**கும்பம்**: வேலைப்பளு, வீண்அலைச்சல் உண்டாகும். மனதில் இருந்த இறுக்கம் நீங்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உங்கள் ஆலோசனை கேட்டு மற்றவர்கள் உங்களை நாடி வருவார்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும்.

**மீனம்**: திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும். பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடும். மாத இறுதியில் ஆன்மிகப் பயணங்கள் ஏற்படலாம். ஆன்மிகப் பணிகளில் நாட்டம் செல்லும்.

## நாளை

**பங்குனி-27 வியாழக்கிழமை | 10.04.2014**

திதி: தசமி மு.ப.08.34 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
பி.ப.04.14 வரை

சுபநேரம்: 07.36-09.06 வரை
இராகுகாலம்:.01.36-03.06 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### சந்தேகமற்ற நிலை

'இரக்கம் கொள் — ஏன் என்றால் சொர்க்க அரசு அருகிலேயே இருக்கிறது.' இரக்கம் என்பதற்குக் கிரேக்க மொழியில் 'மெனாய்ட்' (Metanoeite) என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. [மெட்னாய்ட் என்றால், வெளியில் பின்னால், அப்பால் என்று பொருள்] அதாவது அறிவுக்கு அப்பால் செல் — புலனறிவுக்கு அப்பால் செல் — என்பதாகும். அதாவது 'அறிவுக்கு அப்பால் சென்று உன் உள்ளே பார்; அங்கு சொர்க்க அரசைக் காண்பாய்' என்பது இதன் பொருள்.

சேர் வில்லியம் ஹாமில்டன் (Sir William Hamilton) என்பவர், தத்துவ நூல் ஒன்றின் இறுதியில் , "தத்துவ சாஸ்திரம் இங்கு முடிகிறது; மதம் ஆரம்பமாகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். மதம் அறிவின் எல்லைக்குட்பட்டது அன்று; உட்படுத்தவும் முடியாது. புலன்களால் அறிபவற்றைக் கொண்டே அறிவின் முடிவுகள் அமைகின்றன. ஆனால் மதத்துக்கும் புலன்களுக்கும் தொடர்பே இல்லை. கடவுளை அறிய முடியாது என்று சந்தேகவாதிகள் சொல்கின்றனர். அதுவும் சரிதான். ஏனெனில் தங்கள் புலன்களுக்கு எட்டியவரை அவர்கள் முயன்றும் அவர்களால் கடவுளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஆகையால் மதத்தையும் அதாவது கடவுள் இருக்கிறார் என்பதையும் மரணம் அற்ற வாழ்வையும் மற்றும் இது போன்றவற்றையும் நிரூபிப்பதற்குப் புலனறிவைக் கடந்து செல்ல வேண்டும். பெரிய தீர்க்க தரிசிகளும் மகான்களும் தாங்கள் கடவுளைப் பார்த்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதாவது அவர்களுக்கு ஆன்ம அனுபவம் கிடைத்திருக்கிறது. அனுபவம் இல்லாமல் அறிவு இல்லை. ஆதலால் மனிதன் தனது ஆன்மாவில் தான் கடவுளைக் காணவேண்டும். பிரபஞ்சத்தின் அந்த மகத்தான உண்மையை நேருக்கு நேராக மனிதன் கண்ட பிறகு தான் அவனுடைய சந்தேகங்கள் எல்லாம் நீங்கும்.

## அரசன் முகம் கொண்ட நாணயம்



கி.மு. 3-ம் நூற்றாண்டு நாணயம்

தென் இந்திய நாணயவியல் கழகத்தின் தலைவரான மருத்துவர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, தனக்கு சமீபத்தில் கிடைத்த, கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய நாட்டு நாணயம் குறித்து விவரிக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்னர் நாணயங்கள் விற்பவரிடமிருந்து ஒரு சதுர வடிவ செப்புக்காசை வாங்கினேன். அது அமராவதி ஆற்றுப்படுகையில் எடுக்கப்பட்டது என்று அவர் கூறினாலும், நான் வைகை அல்லது தாமிர பரணிப் பகுதியைச் சேர்ந்தது என்று கருதுகிறேன். அந்த நாணயத்தின் எடை 6.7 கிராம். 1.7 சென்ரி மீற்றர் நீளமும், 1.9 சென்ரி மீற்றர் அகலமும் உடையது.

அந்த நாணயத்தின் மேல் படிந்திருந்த கசடை நீக்கவே பல நாள்கள் ஆனது. அந்த நாணயத்தின் முகப்புப் பகுதியைக் கவனமாகச் சுத்தம் செய்த பின்னர், ஒரு மனிதத் தலை பொறிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. அது நாணயத்தின் வலது பக்கம் கீழ்முனையில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அந்த உருவம் ஓர் அரசனுடையதைப் போல இருந்தது. அந்த உருவம் அணிந்திருக்கும் கிரீடத்தின் பின்புறத்திலிருந்து வேலைப்பாடுகளுடன் கூடியசாிப்பன்கள் வெளித் தெரிகின்றன.

அரசனுக்கு கூர்மையான மூக்கு. உருவம் பொறிக்கப்பட்டிருப்பதற்கு மேலே, செழியன் என்று தமிழ்-பிராமியில் எழுதப்புட்டுள்ளது. இந்த எழுத்து மிகவும் மெல்லியதாக இருப்பதால், எழுத்து வடிவங்களைக் கூர்ந்து கவனித்த பின்னரே படிக்க முடிந்தது.

புறநானூறில் உள்ள ஆறு பாடல்களில் செழியனின் பெயர் பதிவாகியுள்ளது. இந்த நாணயத்தில் உள்ள தமிழ்- பிராமி எழுத்து வடிவம் மாங்குளம் குகைக் கல்வெட்டெழுத்துகளை' ஒத்திருக்கின்றன. மாங்குளம் மதுரை மாவட்டத்தில் உள்ளது. அங்குள்ள கல்வெட்டு கி.மு.2 ஆம் நூற் றாண்டைச் சேர்ந்தது. நாணயத்தின் பின்பகுதியில் உள்ள குளத்தின் சின்னமும், மீன்களும் கி.மு. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வெள்ளி முத்திரை நாணயங்களிலும் உள்ளன.

இந்தச் சாட்சியங்களைக் கொண்டு, இந்த நாணயம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கணிக்க முடிகிறது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 4 | 7 | | | | 3 | |
| 5 | 2 | | | 1 | 3 | | | |
| | | 1 | | | | | | 4 |
| | | | 3 | | | 7 | 5 | |
| 8 | 7 | 9 | | 2 | | 4 | 1 | 3 |
| | 5 | 2 | | | 7 | | | |
| 4 | | | | | | 3 | | |
| | | | 9 | 5 | | | 4 | 7 |
| | 1 | | | | 4 | 5 | 9 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 5 | 4 | 8 | 1 | 7 | 9 | 2 |
| 9 | 1 | 8 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 |
| 4 | 2 | 7 | 6 | 3 | 9 | 8 | 1 | 5 |
| 7 | 5 | 1 | 9 | 2 | 6 | 3 | 4 | 8 |
| 2 | 8 | 9 | 7 | 4 | 3 | 5 | 6 | 1 |
| 3 | 6 | 4 | 1 | 5 | 8 | 2 | 7 | 9 |
| 8 | 4 | 3 | 5 | 9 | 7 | 1 | 2 | 6 |
| 5 | 9 | 6 | 3 | 1 | 2 | 4 | 8 | 7 |
| 1 | 7 | 2 | 8 | 6 | 4 | 9 | 5 | 3 |



## நீண்ட தூரம் ஓடுபவர்களுக்கு குறைந்த வாழ்நாள்


நீண்ட தூரம் ஓடுபவர்களும், உடற் பயிற்சி செய்யாதவர்களும் குறைந்த வாழ்நாளைக் கொண்டிருப்பர் என்று ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மிக விரைவாக ஓடுவது உடலுக்கு நல்லதல்ல. அதே சமயத்தில், மிதமாக ஓடுதலும், விரைவாக நடக்கும் பயிற்சியும் உடல் நலனுக்கு நன்மை பயக்கும் உடற் பயிற்சிகள் ஆகும்.

அமெரிக்க உடற் பயிற்சி வல்லுநர்களின் கருத்துப்படி, மிதமான உடற் பயிற்சி மற்றும் நடைப்பயிற்சி செய்பவர்கள் வெகுநாள் வாழ்வதுடன், நீண்ட ஆயுள் காலத்தை ஆரோக்கியமாகக் கழிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

நியூயோர்க்கிலுள்ள இருதய ஆராய்ச்சிக் கழகம், 3,800 ஓடும் நபர்களை சோதனை முறையில் ஆராய்ச்சி செய்து இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. 44 வயதுள்ள ஆண்களும், பெண்களும் இந்த ஆராய்ச்சியில் தானாகவே வந்து பங்கேற்றுள்ளனர்.


ஆராய்ச்சியாளர்கள் அவர்களது இரத்த அழுத்தம், மற்றும் அவர்களது உயர் இரத்த கொழுப்பு போன்றவற்றை சோதித்தறிந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.



இந்த ஆராய்ச்சியின் விளைவாக, அவர்கள் கண்டுபிடித்த உண்மை என்னவென்றால், மிக வேகமாக ஓடுபவர்களும், மிகுந்த தூரம் ஓடுபவர்களும், தமது உடல் பாகங்களில் அதிக தேய்மானங்கள், எலும்புகளிலும், தசைகளிலும் ஏற்படுவதால் குறைந்த காலம் மட்டுமே வாழ முடியும்.

ஆனால், அதே சமயத்தில், குறைந்தளவு தூரம் ஓடுபவர்களும், நடைப் பயிற்சி செய்பவர்களும் நீண்ட நாள்களுக்கு ஆரோக்கியத்துடன், கூடிய நீண்ட ஆயுள் காலத்தைப் பெறுவர் என்பதை நடத்தப்பட்ட ஆய்வு விளக்குகின்றது.

## பழரசங்க்ளில் அதிகளவு சீனிச்சத்து



மக்களால் அதிகளவில் உட்கொள்ளப்படும் பழ ரசங்களில் சீனிச் சத்து அளவு அதிகமாகக் காணப்படுகிறது என்று ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அளவானது சராசரி மனிதனுக்காக உலக சுகாதார ஸ்தாபனத்தால் வரையறுக்கப்பட்டுள்ள சீனிச் சத்து அளவிலும் பார்க்க அதிகமாகக் காணப்படுகிறது.

அதில் சிலவற்றில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வரையறுக்கப்பட்ட அளவைப் போன்று நான்கு மடங்கு அதிகமாக சீனி காணப்படுகிறது. இந்த ஆய்வுக்காக 50 வரையான உற்பத்திகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குழந்தைகளின் கற்றல் திறனை அதிகரிக்கும் மதிய தூக்கம்

மூன்று வயதுமுதல் ஐந்துவயது வரையிலான மழலைக் குழந்தைகளை மதியம் ஒரு மணி நேரம் தூங்க வைத்தால் அது அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துகிறது என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். மதியச் சாப்பாட்டுக்குப் பின்னர் இப்படியான தூக்கம் குழந்தைகளின் மூளைத் திறனை மேம்படுத்துவதாக ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



மூன்று வயது முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகள் மதியம் ஒரு மணி நேரம் தூங்கி எழுந் தால், அவர்கள் தங்களின் மழலைப்பருவப் பாடங்களை நன்றாக நினைவில் வைத்திருப்பதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இயற்கை விஞ்ஞானத்துக்கான தேசியக் கழகத்தின் விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த ஆய்வின் முடிவுகள் 40 சிறார்களிடம் மேச்சசூசெட்ஸ் ஹம்ஹர்ஸ்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் எட்டப்பட்டிருக்கிறது. மதியம் தூங்கி எழுந்த குழந்தைகளின் மூளைத்திறன் மேம்பாடு மதியம் தூங்கி எழுந்த பின்னா அதிகரிப்பதுடன், மறுநாளும் இது நீடிப்பதாகவும் அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

குழந்தைகளின் நினைவாற்றலை ஸ்திரப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கும், ஆரம்பகால கற்றலுக்கும் இந்த மதிய தூக்கம் அவசியமாகிறது என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

மதிய உணவுக்குப் பிறகு தூங்க அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் தூங்கி எழுந்ததும் காலையில் கண்களால் பார்த்து அதன்மூலம் கற்றவற்றை நினைவுகூர்வதில் சிறப்பாக செயறபட்டதாகவும், மதிய நேரம் தூங்க அனுமதிக்கப்படாத குழந்தைகளை விட இவர்களின் நினைவாற்றல் மேம்பட்டு இருந்ததாகவும் ஆய்வாளர்கள் கூறினர். இதே குழந்தைகளை மதிய நேரம் தூங்க விடாதபோது அவர்களின் கற்றல் திறன் குறைவதையும் தாங்கள் கண்டறிந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர். இந்தப் பரிசோதனையில் பங்கேற்ற 14 குழந்தைகள் தூங்கும்போது அவர்களின் மூளையின் கற்றலுக்கு பொறுப்பான பகுதிகள் வேகமாக செயற்படுவதையும் ஆய்வாளர்கள் பரிசோதனைகள் மூலம் கண்டறிந்தனர். தங்கள் ஆய்வு மூலம் குழந்தைகளுக்கு மதிய நேர தூக்கம் அவசியம் என்பதைத் தாங்கள் மருத்துவ ரீதியில் உறுதி செய்திருப்பதாக இந்த ஆய்வுக்குழுவுக்குத் தலைமை தாங்கிய ஆய்வாளர் ரிபெக்கா ஸ்பென்ஸர் தெரிவித்தார். குழந்தைகளுக்கு வயதாக ஆக, இந்த மதியநேர தூக்கம் என்பது இயற்கையிலேயே இல்லாமற்போகும் என்று கூறும் அவர், குழந்தைகளை மதிய நேரத்தில் பாடசாலைகளில் தூங்க அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

## மாரடைப்பு நோய் வராமல் தடுக்க....



நீரிழிவு நோய் உடையவர்கள் சீனியின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது நல்லது.

அதிக எடை உள்ளவராயின் உடல் எடையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

கொழுப்புச் சத்தின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

புகைப் பிடித்தலை நிறுத்தி விட வேண்டும். புகைப்பதை விடுவதுடன் மற்றவர் வெளிவிடும் புகையை சுவாசிப்பதையும் தவிர்த்தல் வேண்டும். மன அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டும். மன அழுத்தத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும், சிலவற்றை அதாவது யோகா, தியானம், இசை, சிரிப்புப் பயிற்சி ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தினமும் உடற்பயிற்சி மற்றும் நடைப்பயிற்சிகளை மேற்கொள்வது சிறந்தது. இன்றைய குழந்தைகள் கணினி, தொலைக்காட்சிப் பெட்டி முன் அமரும் நேரத்தை விட விளையாடும் நேரம் மிக மிகக் குறைவு. பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்ளை விளையாடச் செய்ய வேண்டும்.

சிறார்கள் குண்டாக இருப்பது நல்லதல்ல. தினமும் குறைந்தது அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை உடற்பயிற்சி மற்றும் வேகமான நடைப்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சமச்சீரான, நல்ல ஆரோக்கியமான உணவு முறைகள் தேவை. உணவை மருந்தை போல் சாப்பிட்டால் பின்னாளில் மருந்தை உணவாக சாப்பிட வேண்டியது இல்லை.

கொழுப்புக் குறைந்த, உப்புக் குறைந்த, எண்ணெய் குறைந்த, பழங்கள் நிறைந்த, பச்சைக் காய்கறிகள் உணவே ஆரோக்கியமானது.

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2014

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 09.04.2014 தொடக்கம் 25.04.2014 பி.ப 4.00 மணி வரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 28.04.2014 மு.ப10.00 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 28.04.2014 மு.ப 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT.NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | பொற்பதி 1ஆம், 2ஆம் ஒழுங்கை கொக்குவில். | 2200.00 | 1000.00 | M10/C10 |
| 02 | நாமகள் பாடசாலை தெற்கு வீதி கொக்குவில் | 2650.00 | 1000.00 | M10/C10 |
| 03 | நேதாஜி இணைப்பு வீதி கொக்குவில் | 3180.00 | 1000.00 | M10/C10 |
| 04 | அம்மன் வீதி 3ஆம் ஒழுங்கை கொக்குவில் | 3060.00 | 1000.00 | M10/C10 |
| 05 | அம்மன் கோயில் வீதி 2ஆம் குறுக்கு ஒழுங்கை கொக்குவில். | 1690.00 | 1000.00 | M10/C10 |
| 06 | வராகி அம்மன் வீதி காளி கோயில் அருகில் ஒழுங்கை கொக்குவில் | 3680.00 | 1000.00 | M10/C10 |
| 07 | வராகி அம்மன் வீதி இடது பக்க ஒழுங்கை கொக்குவில் | 3680.00 | 1000.00 | M10/C10 |
| 08 | நாகலிங்கம் வீதி 2ஆவது கிளை ஒழுங்கை(மைதானத்திற்கு அருகில்) கொக்குவில் | 1200.00 | 1000.00 | M10/C10 |
| 09 | நாகலிங்கம் வீதி 2ஆம், 3ஆம் ஒழுங்கை கொக்குவில் | 2850.00 | 1000.00 | M10/C10 |
| 10 | நாகலிங்கம் வீதி கிழக்கு ஒழுங்கை கொக்குவில். | 1580.00 | 1000.00 | M10/C10 |
| 11 | ஐயனார் கோயில் வீதி கொக்குவில் ( காளி கோயில் அருகாமை) | 2900.00 | 1000.00 | M10/C10 |
| 12 | கொக்குவில் மேற்கு ஐயனார் வீதி கொக்குவில். | 2400.00 | 1000.00 | M10/C10 |
| 13 | வீரபத்திரர் வீதி கல்வியங்காடு | 7400.00 | 1000.00 | M09/C10 |
| 14 | பனிக்கர் வீதி 3ஆம் ஒழுங்கை திருநெல்வேலி | 2470.00 | 1000.00 | M10/C10 |
| 15 | ஞானவைரவர் வீதி வடக்கு 1ஆம் ஒழுங்கை கோண்டாவில். | 5300.00 | 1000.00 | M09/C10 |
| 16 | R.K.N.ஒழுங்கை கோண்டாவில். | 2700.00 | 1000.00 | M10/C10 |
| 17 | குமரகோட்டம் குறுக்கு ஒழுங்கை கோண்டாவில் | 3160.00 | 1000.00 | M10/C10 |
| 18 | ஞானவைரவர் வீதி 2ஆம், 3ஆம், 5ஆம், 6ஆம் ஒழுங்கை கோண்டாவில். | 10900.00 | 1000.00 | M08/C09 |
| 19 | கே.கே.எஸ் வீதி இடது பக்க 1ஆம் ஒழுங்கை கோண்டாவில்.( உப்புமட பிள்ளையார் கோயில் அருகில்) | 3210.00 | 1000.00 | M10/C10 |
| 20 | கோண்டாவில் மேற்கு பாடசாலை 3ஆம் ஒழுங்கை, நெட்டிலிப்பாய் இணைப்பு வீதி கோண்டாவில். | 7090.00 | 1000.00 | M09/C10 |
| 21 | சி.சி.ரி.எம்.எஸ் பாடசாலை மேற்கு ஒழுங்கை கொக்குவில் | 2720.00 | 1000.00 | M10/C10 |
| 22 | சி.சி.ரி.எம்.எஸ் பாடசாலை கிழக்கு ஒழுங்கை கொக்குவில் | 3250.00 | 1000.00 | M10/C10 |
| 23 | அச்சுக்கூட வீதி குறுக்கு ஒழுங்கைகள் கொக்குவில். | 3450.00 | 1000.00 | M10/C10 |
| 24 | சி.சி.ரி.எம்.எஸ் பாடசாலை 1ஆம், 2ஆம், 3ஆம் ஒழுங்கை கோண்டாவில். | 5840.00 | 1000.00 | M09/C10 |
| 25 | காளிகோயில் 3ஆம், 6ஆம் ஒழுங்கை கொக்குவில். | 2770.00 | 1000.00 | M10/C10 |
| 26 | பூதவராஜர் வீதி மறுதாரிடல் கல்வியங்காடு | 4150.00 | 1000.00 | M10/C10 |
| 27 | கலாசாலை வீதி இடது பக்க 4ஆம் ஒழுங்கை திருநெல்வேலி. | 6950.00 | 1000.00 | M09/C10 |
| 28 | பாற்பண்ணை 1ஆம், 2ஆம், 3ஆம் ஒழுங்கை திருநெல்வேலி. | 3080.00 | 1000.00 | M10/C10 |
| 29 | ஸ்ரீ முத்தி விநாயகர் வீதி அரியாலை. | 18500.00 | 1000.00 | M08/C09 |
| 30 | முள்ளி வீதி 1ஆம் குறுக்கு ஒழுங்கை அரியாலை. | 9150.00 | 1000.00 | M09/C10 |
| 31 | அருணகிரிநாதர் வீதி இணுவில். | 6420.00 | 1000.00 | M09/C10 |
| 32 | அலுமினியம் பக்றி வீதி கொக்குவில். | 2250.00 | 1000.00 | M10/C10 |
| 33 | தொழில்நுட்ப கல்லூரி முன் ஒழுங்கை கொக்குவில். | 3140.00 | 1000.00 | M10/C10 |
| 34 | கலட்டி 1ஆம், 2ஆம் ஒழுங்கை கோண்டாவில். | 2620.00 | 1000.00 | M10/C10 |
| 35 | அப்பையா வீதி கொக்குவில் | 5630.00 | 1000.00 | M09/C10 |
| 36 | மணியர்பதி வீதி கொக்குவில். | 12030.00 | 1000.00 | M08/C09 |
| 37 | செருக்கப்புலம் வீதி கொக்குவில். | 25150.00 | 1000.00 | M07/C08 |
| 38 | முருகன் வீதி திருநெல்வேலி | 20610.00 | 1000.00 | M07/C08 |
| 39 | கோகுல வீதி கோண்டாவில். | 31200.00 | 1000.00 | M07/C08 |
| 40 | விளையாட்டு மைதானத்திற்கான மலசலகூடம் அமைத்தல் | 2750.00 | 1000.00 | M10/C10 |
| 41 | திருநெல்வேலி வாழைக் குலைச்சந்தை மதில் அமைத்தல். | 6050.00 | 1000.00 | M09/C10 |
| 42 | உதயபுரம் குழாய் மதகு அமைத்தல் அரியாலை | 12550.00 | 1000.00 | M08/C09 |
| 43 | பூம்புகார் வீதி அரியாலை. | 19900.00 | 1000.00 | M08/C09 |
| 44 | குழாய் மதகு அமைத்தல் அரியாலை | 19500.00 | 1000.00 | M10/C10 |
| 45 | கொக்குவில் நூலகம் முடிவுறுத்தல் வேலைகள் | 50000.00 | 2000.00 | M07/C08 |

**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(சீ/13448)(5.6)

**ப.வசந்தகுமார்**
**தவிசாளர்.**


# சிலை வடிவில் யாழ்ப்பாணத்தில் எழுந்தருளும்




**நாளை 50 ஆவது குருபூசை தினம்**

யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரையில் ஒருவராகத் தோன்றியவர் தான் சிவயோக சுவாமிகள். இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் பலர் இவரது சீடர்களாக இருந்துள்ளார்கள், இன்றும் இருக்கிறார்கள். இவர்களுள் ஒருவர் தான் அமெரிக்கரான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தை ஸ்தாபித்தவரும் இவர் தான்.

இவர் தனது குருநாதரான சிவயோக சுவாமிகளின் 125 ஆவது பிறந்தநாளான 1997 ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதியன்று ஹவாய் சைவ ஆதீனத்தில் சிறப்பு நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தார். இதன்போது அவரால் அமைப்பிக்கப்பட்ட யோகா சுவாமிகளின் சிறிய வெண்கலச் சிலையொன்றுக்கு பூசை வழிபாடு நடத்துவித்து ஆசிவழங்கி உலக யாத்திரைக்காக அனுப்பி வைத்திருந்தார்.

உலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் மக்களின் தரிசனத்துக்காகவும், அதன் மூலம் அவர்கள் இறையுணர்வையும் ஆன்மிக சிந்தனையையும் பெறுவதே சிவயோக சுவாமிகளது உலக யாத்திரையின் நோக்கமாக இருந்தது. இந்த உலக யாத்திரையின் போது கோலாகலமான நிகழ்ச்சிகள் எதுவும் இடம்பெறக் கூடாது என்பதுடன் யாத்திரை செல்லும் பாதைகளில் மக்களது பக்திப் பெருக்கும் ஆன்மிக உணர்வும் மேலோங்கியிருக்க வேண்டும் என்பதும் சுப்பிரமுனிய சுவாமிகளின் விருப்பமாகவும் அறிவுரையாகவும் இருந்தது.

சிவயோக சுவாமிகளின் உலக யாத்திரையானது பதினேழு வருடங்களை நிறைவுக்கு கொண்டு வரும் இவ்வேளையில், அமெரிக்காவின் ஹவாயிலிருந்து ஆரம்பமாகி ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் முதலாக உலகத்தின் பெரும் பகுதியைக் கடந்து விட்ட நிலையில் இப்போது ஆசியாவின் உள்ளேயும் பிரவேசித்து விட்டது.

சிவயோக சுவாமிகள் அவதாரம் செய்து, வாழ்ந்து, அருள் வழங்கி அற்புதங்கள் செய்த புண்ணிய பூமி யாழ்ப்பாணக் குடாநாடு ஆகும். 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதத்து ஆயிலிய நட்சத்திர நாளன்று மகா சமாதியடைந்த சுவாமிகளது ஐம்பதாவது குருபூசை தினம் நாளை 10 ஆம் திகதி வியாழக்கிழமையாகும். சிவயோக சுவாமிகள் தமது குருநாதரான செல்லப்பா சுவாமிகளிடமிருந்து ஞானோபதேசம் பெற்றுக் கொண்ட இடம் நல்லூர் என்பதால் அங்கு ஐம்பதாவது குருபூசை நிகழ்ச்சியை நடத்துவது பொருத்தமானது என்பது சுவாமிகளின் அடியார்களது கருத்தாகும்.

இதன் பிரகாரம் நாளை 10ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிறப்பு பூசை வழிபாடுகள், நற்சிந்தனைப் பாடல் ஓதுதல், சிறப்புரைகள், சிறப்புமலர் வெளியீடு என்பவைகளுடன் குருபூசை வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தின் இன்னொரு சிறப்பு அம்சமாக, பதினேழு வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் ஹவாய் தீவிலிருந்து வெண்கலச் சிலை வடிவில் ஆரம்பமான சிவயோக சுவாமிகளின் உலக யாத்திரையானது சுவாமிகளது ஐம்பதாவது குருபூசை தினத்தன்று யாழ்ப்பாணத்தை வந்தடையவிருக்கிறது.

சிவயோக சுவாமிகள் வாழ்ந்த யாழ்ப்பாணப் பூமியில் நடைபெறும் ஐம்பதாவது குருபூசையின்போது சிலை வடிவில் எழுந்தருளியிருக்க வேண்டும் என்பது சுவாமிகளது ஆத்மார்த்தமான விருப்பம் போலும். சுவாமிகளின் வெண்கலச்சிலை நல்லைக் கந்தன் தேரடியிலிருந்து துர்க்காதேவி மணிமண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டதும், அங்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

உலகளாவிய ரீதியில் சைவத் தமிழ் மக்களால் போற்றித் துதிக்கப்படும் சிவயோக சுவாமிகளது உலக யாத்திரை, சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை ஆண்டில் இலங்கையில்- அதுவும் யாழ்ப்பாணத்தில் நிறைவுக்கு வருவது சுவாமிகளது ஆசிக்குரிய அருட் செயல் என்றுதான் கூறவேண்டும்.



வடமராட்சி, மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்களுடன் கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், நிலையத்தின் தேவைகள், வளர்ச்சிகள் குறித்து அறிந்து கொண்டார். அத்துடன் நிலையத்துக்கு ஒரு தொகுதி நூல்களை நிலையத் தலைவர் எஸ்.சிவசுப் பிரமணியத்திடம் கையளித்தார். (ஓ)

## தெய்வீகப் பேருரை

வவுனியா ஆதி விநாயகர் ஆலயத்தின் இந்த ஆண்டுக்கான மஹோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், 14 ஆம் திகதி திங்கட்கிழமை வருடப் பிறப்புன்று தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். தினமும் மாலை 6 மணி முதல் தமிழருவி த.சிவகுமாரன் நிகழ்த்தும் ஆலய வழிபாடும் ஆதிவிநாயகன் மகத்துவமும் என்னும் பொருளிலான தொடர் தெய்வீகப் பேருரைகள் இடம் பெற்று வருகின்றன. மஹோற்சவக் கிரியைகளை சிவாகம கிரியா ஜோதி சிவஸ்ரீ. சிவகுகநாதக்குருக்கள் நிகழ்த்தி வருகிறார். (ஓ)

## "ஜய" புதுவருடப் பஞ்சாங்கம்

எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிறக்கின்ற 'ஜய' தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கையடக்கப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தப் பஞ்சாங்கத்தில் புதுவருடப் பிறப்புத் தொடர்பான சுபநேரங்கள், புதுவருடப் பலன்கள், மாத ரீதியான சுபநேர விவரங்கள், இந்துக்களின் விரதங்கள் போன்ற பல அம்சங்கள் அடங்கியுள்ளன. இலவசமாக விநியோகிக்கப்படும் இப்புதிய பஞ்சாங்கத்தைப் பெற விரும்புவோர் திணைக்களத்துக்கு நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர், சுயமுகவரி எழுதப்பட்டு முப்பது ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 25 X 17 செ.மீ. அளவான கடித உறையை 'பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 248 1/1 காலி வீதி, கொழும்பு 4' என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சண்முகநாதன் தபோவரன்**



கண்குளிர 20.07.1997
கண்ணீர் சொரிய 15.03.2011

திதி: 09.04.2014 – தசமி

கண் இமைக்கும் கணப்பொழுதில்
மூன்று ஆண்டுகள் ஆனதையா
ஆறவில்லை எம் துயரம்
ஆருயிரே நீ மறைந்த நாள் முதல்
ஆறாத்துயரில் வாடுகின்றோம் - உன்
ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்
என்றுமே உன் நினைவுகளுடன்

குடும்பத்தினர்.
கட்டுக்காணிலேன், சாவகச்சேரி.
(43603)(45.6.5)


## சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஏப்.9

2013 டிசெம்பர் மாதம் நடை பெற்ற ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த வியாழக்கிழமை வெளியாகின.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

என்.நவஜோதி -8ஏபி, பி.பாரதி - 8ஏபி, எஸ்.தர்ஷினி- 8ஏபி, பி.பிரியங்கா- 8ஏஎஸ், கே.யாமினி- 8ஏபி, எம்.மாதுளா - 8ஏபி, என்.நந்தினி- 8ஏசி, ரி.நிவேதினி - 7ஏபிசி.

**வல்வை கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை**

ப.சஜீபா - 5ஏபிசி2எஸ், வே.வேணுசா- 4ஏ3பிசிஎஸ், செ.கீர்த்தனன் - 4ஏபிசி3எஸ், தி.ஜீவிதா - 3ஏ3பிசி2எஸ், அ.டயானி - 2ஏ2பி2சி3எஸ், ஆ.சங்கவி - 2ஏபி4சி2எஸ், கு.சோபிகா - 2ஏபி2சி2எஸ், சி.ஞானகீர்த்தனன் - 2ஏ3சி4எஸ், து.சாருஜன் - ஏபி3சி3எஸ், ஞா.ஞானச்செல்வன்- ஏ3சி3எஸ், க.துசிதன் - ஏ2சி4எஸ், செ.தனுசன் - ஏ2சி3எஸ்.

**மு/ உடையார்கட்டு ம.வி.**

கு.நர்மிகா - 6ஏ2சிஎஸ், ஜெ. சஞ்ஜிகா - 5ஏபி2சிஎஸ், சிவகௌரினி - 4ஏ2பிசி2எஸ், துவர்சனா- 3ஏ4பி2சி, டயானா- 2ஏ2பி5சி.

**வல்வை மகளிர் ம.வி.**

மு.புவித்திரா - 8ஏபி, சி.டிசாந்தி - 7ஏபிசி, சி.நிர்மலா - 5ஏ2பி2சி, இ.லக்சுமி- 5ஏ3பிஎஸ், ப.அருணா- 5ஏ2பிசிஎஸ், பு.தாட்சாயணி - 4ஏபி3சிஎஸ், சு.ரிசானா- 3ஏ4பிசிஎஸ், வி.வனஜா- 2ஏபிசி5எஸ், சோ.திவ்யா- 2ஏ3சி4எஸ், சி.கீர்த்திகா - ஏ5பிசி2எஸ், ந.மாதுமையாள்- ஏ4பி4சி, அ.கீர்த்தனா- ஏ2பி5சிஎஸ், தி.மேகலா-ஏபி3சி4எஸ், வி.வினுஷிகா - ஏபிசி6எஸ்.

**கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்**

நந்தகுமார் பகீரதன்-6ஏ2சிஎஸ், தனபாலசிங்கம் தேவகுமார்-4ஏ4பிஎஸ், ரவி ஜெகதீசன்-2ஏபி4சிஎஸ், நாகரத்தினம் தர்சன்-2ஏபிசி3எஸ்.

**தாவடி இந்து த.க.பாடசாலை**

அ.சிந்துஜா-7ஏ2சி, கி.சிந்துஜா- 3ஏ2பி2சிஎஸ், கி.சாரங்கன்-2ஏ4பிசிஎஸ், ம.விஜிதன்- 2ஏ3பி2சிஎஸ், ம.லுக்ஷிகா-2ஏபி2சி3எஸ், ர.ரெஜிந்தினி- ஏ3பி3சிஎஸ், சி.சிந்துஜா-ஏ2பிசி3எஸ், வ.விதுஷிகா- ஏபி4சி3எஸ், ஜெ.சஜீபனா- ஏபி3சிஎஸ், க.லக்சாயினி- 2ஏ3சி3எஸ், சு.விணோஜினி- ஏ2பி4சிஎஸ், யோ.உமாந்தினி - ஏபி2சி4எஸ், ந.சாளினி-ஏபி3சிஎஸ், பா.பிரதாபன்- ஏ5சி2எஸ், ஜெ.சஞ்சிகா-ஏபி3சி2எஸ், கு.கேனுகா-ஏ2சி3எஸ்.

**கிளி/ உருத்திரபுரம் ம.வி.**

நா.விதுசன் -7ஏ2பி, கி.கிருசாந்தி - 7ஏ2பி, ம.லோஜிகா-3ஏ4பி2சி, தி.சஜிந்தன்-2ஏ2பி4சி, ம.தார்த்திகரன்-2ஏ5பிசி, சி.நிறோபன்- ஏ3பி2சி2எஸ், இ.புருசோத்மன்- ஏ5சி3எஸ், ச.கோபிகா - 2பி3சி 4எஸ், ஆ.தேனுசா-3ஏசி4எஸ், தி.நிறோ ஜன்- ஏ4சி3எஸ், ச.யசிந்தா ஏசி4எஸ்.

**கிளி/ அக்கராயன் ம.வி.**

ச.ரசனா - 7ஏபிஎஸ், ச.வினோதன்- 6ஏ2பிசி, இ.கதிர்செல்வன்- 6ஏ2பிசி, ர.விதுசன்-5ஏ2பிசிஎஸ், இ.எழிலகன்- 5ஏ2பிசி, கி.சுமிந்திரா- 4ஏ2பி2சிஎஸ், யோ.நேசராஸ்- 4ஏ2பிசிஎஸ், யே.சர்மிலா-3ஏ4பி2சி, ந.அனோஜன்- 3ஏ2பிசி2எஸ், க.யசிர்-3ஏ2பி2சி எஸ், சு.வானிலவன்- 2ஏ3பி2சிஎஸ், வி.மயூரன்- 2ஏ3பி2சிஎஸ், சி.துவாரகன்- 2ஏபி2சி2எஸ், பி.டிசாந்தன்- 2ஏபி3சி3எஸ், க.லோயிரன் - ஏ4பி4சி, பே.துவாரகா- ஏ3பி3சி2எஸ், யோ.லக்சன்- ஏ2பி3சி2எஸ், ச.சரணியா- ஏபி3சி3எஸ்.

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

ஜெ.கஜவதனா - 8ஏபி, தி.கிருஷாந்தி- 8ஏசி, பொ.தனுஷியா-8ஏஎஸ், ந.கஜானந்தி- 7ஏபிஎஸ், கா.கேதாரன் - 5ஏ2பி2சி, ம.டிவானா-5ஏ3பிஎஸ், க.லக்சினி-5ஏ4பி, ம.தேவனிகா- 5ஏபி2சிஎஸ், ந.பேபி டிக்ஸனா- 5ஏ3பிஎஸ். (ஒ-9)


# நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



திருமதி புவனேஸ்வரி மாப்பாணபிள்ளை
(வன்னி விளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்)

மலர்வு 14.02.1926
உதிர்வு 10.03.2014

"அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டோ"

எமது அன்பிற்கினிய அன்னையின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு பரிவுடன் ஆறுதல் அளித்த அனைத்து உள்ளங்களிற்கும் ஊடகங்கள் ஊடாக எம் துயரில் பங்கு கொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலி மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும் உடன் வர முடியாமல் பின்னர் அறிந்து வீட்டில் இருந்தே அஞ்சலி செய்தோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (09.04.2014) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரர்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா வன்னி விளாங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மனின் பாதாரவிந்தங்களைச் சென்றடைய பிரார்த்திக்கும்

வன்னி விளாங்குளம், மாங்குளம். (48423)(3.6.4)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



# மரண அறிவித்தல்

## திருமதி தங்கலட்சுமி பரமசிவம்



யாழ்.புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாவும், சாவகச்சேரி கல்வயலை வதிவிடமாகவும், அராலி தெற்கு, கலட்டிமூலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கலட்சுமி பரமசிவம் 05.04.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரமசிவம் அவர்களின் அன்பு மனைவியும், பரமேந்திரன் (சாவகச்சேரி), சாந்தகுமாரி (அராலி), ரவீந்திரன் (யாழ்ப்பாணம்), வதனகுமாரி (லண்டன்), கஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் இராசலட்சுமி (பிரான்ஸ்), திருஞானம் (வட்டக்கச்சி), தனலட்சுமி (பிரான்ஸ்), திருநாவுக்கரசு (பிரான்ஸ்), யோகலட்சுமி (கனடா), பாலசிங்கம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லீலாவதி, மனோகரன், தயாளினி,கேதீஸ்வரன்,கேதாரகௌரி ஆகியோரின் அன்பு மாமியும், கந்தசாமி, சிவகங்கை ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரியும், மயில்வாகனம், தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிறிதரன்(லண்டன்), சந்திரபாலு (லண்டன்), சுபேசினி (லண்டன்), இந்துமதி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும்,

காலஞ்சென்ற நவீனன் மற்றும் தனுசன்,பிரணவன், விஜிதரன், அறிவொளி, மயூரன், சிந்துஜா, மதியூகி(லண்டன்), கர்ஷனா, ஷபீலன், விபூஷன், ஷங்கிகா, திவேந்தன், நிவேதன், தணிகா, சௌமியா, சஞ்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இன்மொழி, கவினொளி,யுவசகி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (10.04.2014) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே.இல. 024 4905762, 077 278 3603
அராலி தெற்கு, அராலி. (2.6.3)(33467) மருமகன் - ச.மனோகரன்.


## அலங்காரப் பெருவிழா

வட்டுக்கோட்டை, ஏப்.9

கலைநகர், சித்தன் கேணி ஆதி வைரவப் பெருமான் தேவஸ்தான அலங்காரப் பெருவிழா நேற்று 8 ஆம் திகதி ஆரம்பமானது. எதிர்வரும் 17 ஆம் திகதி வரை திருவிழா இடம் பெற்று மறுநாள் வைரவப் பெருமானுக்கு சங்காபிஷேகம் இடம் பெறும். (க)

## விபத்தில் உயிரிழந்தவர் ஓட்டுமடம் வாசி

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் கடந்த 6 ஆம் திகதி இ.போ.ச. பஸ் - சைக்கிள் விபத்தில் உயிரிழந்தவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த 78 வயதான எம்.இரத்தினம் என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-101)


# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் அருளானந்தம்

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அருளானந்தம் நேற்று (08.04.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், செல்லம்மாவின் அன்புக்கணவரும், Dr. அன்புச்செல்லி (சிரேஷ்ட விரிவுரையாளர் - சித்த மருத்துவம், யாழ். பல்கலைக்கழகம்), கலையரசி (ஹொலண்ட்), சத்தியசீலன் (லண்டன்), Dr. வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. ஸ்ரீதரன், விஜயகாந்தன் (ஹொலண்ட்), கிஷயந்தன், அரிப்பிரியை(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், நாகரத்தினம், செல்லம், தையல்நாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மாரிமுத்து, காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், வைத்திலிங்கம், ஸ்ரீகாந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹர்சனா, டிலக்ஷன், ஜினோத், பிலோஜன், கவினயன், டன்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2014) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் அராலி பூனாவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
மாலா கிளினிக், அராலி தெற்கு. (33565) (45.3.6)
T.P: 021-321-1444

## சிவயோக சுவாமிகளின் குருபூசை விழா நாளை

சிவயோக சுவாமிகளின் 50 ஆவது குருபூசை விழா நாளை 10 ஆம் திகதி காலை 9 மணியளவில் திருநெல்வேலி சிவயோகர் அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது. சிறப்பு அதிதிகளாக நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி மா.அனந்த லெட்சுமி, திருமதி ர.நகுலா, கிராம சேவை அலுவலர் ஜே.டினேஸ் நிகழ்வில் கலந்துகொள்வார்கள். (க)

**கடை வாடகைக்கு**

பருத்தித்துறை நகரின் மத்தியில் பிரதான வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு. மாடிக்கட்டடத்திலும்.
தொடர்பு : (33475)(5.6.3)
0777 561 341/077 129 8201

**தவறிவிட்டது** கோப்பாய் மத்தி கந்தசாமி கோயில் பின் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியக்குருக்கள் சோமசுந்தரஐயர் என்பவருடைய பின்னல்பை துறப்பு, வாகனப் புத்தகம், இன்சுரன்ஸ்காட்,சிறுதொகைப் பணம் என்பன கோப்பாய் சந்திக்கும், பொஸ்கோ சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (33474)(5.6.3)
தொடர்பு: 077 189 6631/0771581005

**பரிசுத்த ஆவிக்கு ஜெபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர்செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன்.

நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி!
தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும்.

ஞானசோதி குடும்பத்தினர்,
(33452)(3.6.4) ஏழாலை.

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள இரண்டு போட்டோ பிரதி இயந்திரங்கள் விற்பனைக்குண்டு.
(33463) (45.6.3) தொடர்பு: 078 328 2485

**வீடு வாடகைக்கு உண்டு**

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (33466) (45.6.3)
தொடர்பு: 077 869 1635,077 567 1967

**பராமரிப்பாளர் தேவை**

பித்தப்பை சத்திரசிகிச்சை செய்த பெண் ஒருவருக்கு ஒரு மாதம் பராமரிக்க பெண் ஒருவர் தேவை.40 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. (33470) (46.6.3)
தொடர்பு: 077 715 8476, 021 222 7535

**வீடு விற்பனைக்கு**

3 அறைகள், கிணறு, மலசலகூடம், மின் வசதிகளுடன் நாவற்குழி (தென்னந்தோட் டம்) வீட்டுத் திட்டத்தில் நாவற்குழி புகையிரத நிலையம் A9வீதிக்கு அருகில் 1½ பரப்புக் காணியில் வீடு விற்பனைக்குண்டு. ஆரம்ப விலை 25 இலட்சம், பேசித் தீர்க்கலாம்.
(446620) (13.3.6) தொடர்பு: 072 581 5653

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, அத்தியடியில் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (46567) (2.6)
தொடர்பு:
077 959 9527, 021 222 9078

## விவசாயிகளுக்கான மார்ச் ஓய்வூதியத்தைப் பெறலாம்

அச்சுவேலி, ஏப்.9

கமத்தொழில் காப்புறுதிச் சபை மூலம் வழங்கப்படும் விவசாயிகளுக்கான ஓய்வூதியம் மார்ச் மாதத்துக்கான கொடுப்பனவுகள் தபால் அலுவலகங்கள் மூலம் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் வழங்கப்படுகின்றன.

விவசாயிகள் ஓய்வூதியம் பெறும் தபால் அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். கிளிநொச்சி மாவட்டங்களுக்கான கமத்தொழில் காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் து.கிரிதரன் அறி வித்துள்ளார்.

இந்த வருடத்துக்கான கொடுப்பனவில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான கொடுப்பனவுகள் முன்னரே வழங்கப்பட்டு விட்டன. மார்ச் மாதத்துக்கான கொடுப்பனவு கட்டுநிதி தபால் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-11)

## பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

குமுழமுனை மகா வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை பரிசளிப்பு விழாவும், மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளன.

காலை 8.30 மணியளவில் பாடசாலையின் திறந்த வெளியரங்கில் இந்த நிகழ்வுகள் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் ம.கமலகாந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுகளின் போது வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபையின் பிரதித் தவிசாளர் அன்ரனி ஜெயநாதன், முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர்கள் து.ரவிகரன், ஜாசீன் ஜவாஹிர், சி.சிவமோகன், வீ.கனகசுந்தரசுவாமி, க.த.லிங்கநாதன், கு.மேரிகமலா, ஜனாதிபதியின் இணைப்பாளர் ச.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.

(க)

**அரேபிய அதிபர்களின் வருகையில் இம்மாதம் நேர்முகப் பரீட்சை**

கட்டார், நெஸ்லே வோட்டர் கம்பனியில்
**வேலைவாய்ப்புகள்**
சாரதிகள் - **70,000/=** இற்கு மேல் சம்பளம்
சேல்ஸ் விநியோகஸ்தர் - **40,000/=** இற்கு மேல்
இன்னும் பல கம்பனிகளில் வேலை வாய்ப்புகள்

| | | |
|---|---|---|
| AC Technician | - 12 | விசா, டிக்கெட் விமானச்சீட்டு உட்பட சம்பளம் 39,000/= இலிருந்து 69,000/= வரை |
| Electrician | - 40 | |
| Plumber | - 35 | |
| Dutch Fitter | - 30 | |
| Pipe Fitter | - 30 | |
| Hel per | - 15 | |

இன்னும் ஏராளமான வேலை வாய்ப்புகள் எம்மிடம் உள்ளன
அரச அங்கீகாரம் பெற்றவர்கள் PV 72052 LL 2502 (33472)(2.6.3)

| Head Office | Branch Office |
|---|---|
| Rifraa International(Pvt)Ltd. | Rifraa International(Pvt)Ltd. |
| Main Street, Nintavur, | No.95, Muslim College Road, |
| Sri Lanka. | Jaffna. |
| T.P.: 0675677777, | Sri Lanka. |
| 0674929149, | T.P.: 077 843 6475, |
| 0674929159. | 021 221 7085 |
| E.mail.rifraa@gmail.com. | E.mail.rifraajaffna@gmail.com. |
| www.rifraa.com | www.rifraa.com |

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

யா/கச்சாய் அ.த.க.பாடசாலை பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற இருப்பதால் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (சி/13449)(5.6.3)
செயலாளர்.

**FOR LOW VISION SYNDROME**

பார்வைக்குறைபாட்டால் வாசிப்பினை தவிர்த்துவிடுவோருக்கு ஓர் நற்செய்தி



உங்கள் பிரச்சினைக்குத் தீர்வாக எம்மிடம் விதம் விதமான உருப்பெருக்கிகள் (Magnifiers) உண்டு.



பொக்கட்டிலோ அல்லது Purse இலோ எடுத்துச்செல்லக்கூடிய (Pocket Magnifiers- 10" x 8" இலிருந்து பற்பல அளவுகளில் பிளாஸ்ரிக் (Plastic Magnifiers) உருப்பெருக்கிகள் LED Light உடன் கூடிய மற்றும் விரல்களைக் காயப்படுத்தாமல் நகம் கத்தரிக்க உருப்பெருக்கிகளுடன் கூடிய (Nail Cutters) இன்னும் பற்பல... சொல்லி மாழாது. நேரில் பார்த்தால்தான் புரியும். ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

**DIABETIC SANDLES & SOCKS**

நீரிழிவு நோயாளர்களின் நோக்கு கால்களுக்கு இதமான மென்மையான காலணிகளும் காலுறைகளும் எம்மிடம் உண்டு.

உங்களுடன் நாங்கள் இருக்கிறோம்

**VANIKAA SURGICALS**
Wholesale Dealers in Surgical & Healthcare Items, 203 Hospital Road, Jaffna.
T.P.222 0077 Email: Vanisurgi@sltnet.lk
Website: w.w.w.Vanisurgi. Com (46449) (45.6.3)

**அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**

கோண்டாவில் **இராசையா குவேந்திரநாதன்** அவர்களினால் யாழ்/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்துக்கு அன்பளிப்பாகக் கட்டிக்கொடுக்கப்பட்ட ஆரம்ப பிரிவுக்கான கட்டடத் தொகுதி
**06.04.2014** அன்று திறந்துவைக்கப்பட்டபோது அவரின் சமூக சேவையைப் பாராட்டி
**செங்கைப்புரவோன்**
எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை வாழ்த்துவதோடு,இன்று (09.04.2014) புதன்கிழமை பிறந்தநாளைக் கொண்டாடும்




**குவேந்திரநாதன் இரஞ்சினிதேவி**

தம்பதியினர் சகல சௌபாக்கியங்களுடனும் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
உரிமையாளரும், ஊழியர்களும்.
(33473)(19.6.3) **விஷ்ரா விஷன்**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றும் செல்வி
**கந்தையா வசந்தமலர்**
(BA.Hons Dip.in Edu.MEd)
அவர்கள் யாழ் பல்கலைக் கழகத்தில் முதுகல்விமாணிப் பட்டம் பெற்றமையையிட்டு அவரை வாழ்த்துவதோடு, அவர் வாழ்வில் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று சீருஞ்சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச்சமூகம்,
மு/குமுழமுனை மகா வித்தியாலயம்.
(33462) (3.6.4)

Best Wishes

**மணிவிழா வாழ்த்து**




06.04.2014 அன்று சிறந்த கல்விக் கொடைக்காகவும், சமூக சேவைக்காகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர்
**பொ.பாலசுந்தரம்பிள்ளை**
அவர்களினதும் பேராசிரியரும் வணிகத்துறைத் தலைவருமான **க.தேவராசா** அவர்களினதும் கரங்களால்
**'செங்கைப்புரவோன்'**
என்னும் கௌரவப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட கோண்டாவில் மண்ணின் தலைமகன், மணிவிழா நாயகன் **இராசையா குவேந்திரநாதன்** அவர்களின் மணிவிழா இன்று (09.04.2014) புதன்கிழமை சிறப்புறவும் இன்னும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழவும் வாழ்த்துகின்றோம்.

**கோண்டாவில் வாழ் மக்கள்**
**கோண்டாவில்.**
(33469)(5.3.6)

# நிதி முதலீடுகளால் பயனடையும் செயற்றிட்டங்கள் அவசியம்

## நிதி நிறுவனங்களுக்கு வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் வேண்டுகோள்

நிதி நிறுவனாங்கள் தமது இலாபத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது தமது நிதி முதலீடுகள் மக்களை பயனடையச் செய்கிறதா என்பதை அறிந்து செயற்றிட்டங்களை முன்வைக்க வேண்டும். குறிப்பாக கிராமிய மக்களது பொருளாதார முன்னேற்றங்கள் இத்தகைய நிதி நிறுவனாங்களின் கைகளிலேயே தங்கியுள்ளன என்று வலி .மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்தார்.

அராலி கிழக்கு சிக்கன கடனுதவி வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த வாரம் சங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந் தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவிக்கும் போது;

சிறுதுளி பெரு வெள்ளம் என்பார்கள்.

சேமிப்பின் பலா பலனை இது எடுத்துக்காட்டுகிறது. அராலி கிழக்கு சிக்கன கடனுதவி வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடு இந்தப் பிரதேச மக்களுக்கு நன்மையளித்துள்ளது.

இந்தச் சங்கங்களின் ஊடாக உள்ளூரில் சுழற்சி முறையில் வழங்கப்படும் கடன் நிதி சமூகத்துக்கு நன்மையளித் துள்ளது. இன்று பல புதிய நிறுவனாங்களும் இங்கு செயற் படுகின்றன. இந்த நிறு வனாங்களின் ஊடாக மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிதியைப் பெற்று வருகின்றனர். இவ்வாறு பெற்று வருபவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களாகவே உள்ளனர்.

அதிகமான நிதி நிறுவ னாங்கள் பெண்களின் அபிவிருத்தி நோக்கியதாகவே இந்தக் கடன்களை வழாங்கி வருவதும் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். பெண்களின் செயற்பாடுகளிலேயே கிராமிய பொருளாதாரம் தங்கியுள்ளதை இது மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இதே வேளை நிதி நிறுவனாங்கள் குறித்த ஒரு செயற்பாட் டுக்காக கடனை வழங்கும் போது குறித்த அந்தச் செயற் பாடு நிறைவு செய்யப்பட்டுள்ளதாஎன்பதையும்ஆராய்தல் அவசியமான ஒன்றாக உள்ளது. நிதி நிறுவ னாங்கள் வெறுமனே கடனை அறவிடும் செயற்பாடுகளில் மட்டும் ஈடுபடக் கூடாது. உரிய நோக்கம் நிறைவு செய்யப் படுகின்றதாஎன்பதுகுறித்தும்ஆராய வேண்டும்-என்றார். (வ-14-21)

**Wanted**

People with a mind of Socialness
needed to work for the Human Kind
Please Contact : **Thampi-0777-301961**
(C/13324)(2.3.6)

# மரண அறிவித்தல்கள்

## கிருஷ்ணர் சிவபாதசுந்தரம் (சுழிபுரம் மேற்கு)

சிரேஷ்ட மாவட்ட முகாமையாளர், TNB மலேஷியா



சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த கிருஷ்ணர் சிவபாதசுந்தரம் 05.04.2014 சனிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு புதல்வரும், சறோஜினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கி.சிவசுப்பிரமணியம் மற்றும் திருமதி இ.பரமேஸ்வரி, திருமதி.க.மகேஸ்வரி, கி.சிவப்பிரகாசம், கி.சிவசிதம்பரம், திருமதி ம.குகனேஸ்வரி திருமதி.த.ஞானேஸ்வரி, திருமதி மா.இரத்தினேஸ்வரி, கி.பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி R.ஷாமினி, சுரேஷ், திருமதி S.ஷிரீனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(08.04.2014) மலேசியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு.

தகவல்: கி.சிவசிதம்பரம் (சகோதரன்)

(33480)(5.6.3)

## திருமதி பரமேஸ்வரி ஆறுமுகம்



தென்மராட்சி சரசாலையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தி காளி கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஆறுமுகம் நேற்று முன்தினம் (07.04.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சீதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், குமாரசாமி, இராசமணி மற்றும் ஆச்சி முத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்களின் பாசமிகு மனைவியும், புஸ்பராணி (பிரான்ஸ்), சிவநாதன் (ஜேர்மனி), செல்வராசா (ஜேர்மனி), புஸ்பலதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், சோதிலிங்கம் (பிரான்ஸ்), பிறேமலதா (ஜேர்மனி), றஜனி (ஜேர்மனி), ரகுநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், மோகனதாஸ் (ஜேர்மனி), யசோதா (பிரான்ஸ்), கவிதா (கனடா), தனுதாஸ் (பிரான்ஸ்), சர்மிலி (ஜேர்மனி), சாலினி (ஜேர்மனி), சாமினி (ஜேர்மனி), சகானா (ஜேர்மனி), ரித்திகா (ஜேர்மனி), ரிஷா (ஜேர்மனி), றக்ஷனன் (ஜேர்மனி), ரதீஷனன் (ஜேர்மனி), அருஷன் (ஜேர் மனி), அனுஸ்கா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (10.04.2014) வியாழக்கிழமை நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் இளம்காடு இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.

(33478) (45.6.6)

## ஓட்டோவில் சென்று வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்கு

### கெற்பேலிப் பகுதியில் சம்பவம்

கெற்பேலி மேற்குப் பகுதியில் வீடொன்றில் ஓட்டோவில் சென்ற நால்வர் வீட்டிலிருந்தோரைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு அங் கிருந்து பெறுமதியான பொருள் களை அடித்து நொருக்கினர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகலில் இடம்பெற்றது.

பாதிக்கப்பட்டவர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து கொடிகாமம் பொலிஸார் மேற் கொண்ட அதிரடி நடவடிக்கையின் பயனாக சம்பந்தப்பட்ட நால்வரையும் கைது செய்ததுடன் பயணம் செய்த ஓட்டோவையும் கைப்பற்றினர்.

வீட்டினுள் புகுந்து தாக்குதல் நடத்திய வேளையில் அயல் வீட் டுக்காரர்கள் ஓடிவரவே நால்வரும் தப்பியோடிவிட்டனர் என்றும் - ஓட்டோவின் இலக் கம் பொலிஸாருக்குத் தெரிய வந்ததை அடுத்து இரவோடிரவாக அந்த நால்வரையும் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் குறித்த வீட்டாரைத் தாக்கியமைக்கான காரணம் குறித்து தெரியவரவில்லை.

கைது செய்யப்பட்ட நால்வரையும், ஓட்டோவையும் கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

இந்த நால்வரையும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், ஓட்டோவை நான்கு லட்சம் ரூபா பிணை முறியில் எடுத்துச் செல் லவும் அனுமதித்தார். (ஒ-9)

# மரண அறிவித்தல்

## கதிரன் தெய்வேந்திரம் (தேவு)



சங்கானையைப் பிறப்பிடமாகவும், பொன்மலர் ஸ்ரோர் வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் தெய்வேந்திரம் நேற்று (08.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலன்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கமணியின் அன்புக் கணவரும், தேவசங்கரி (சசி-பிரான்ஸ்), சுதேஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற அபிராமி மற்றும் வினிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகரனின் (பிரான்ஸ்) மாமனாரும், இராசேந்திரம், குலேந்திரம், மகேந்திரம், சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும், சயித்தா (பிரான்ஸ்), சம்மியா (பிரான்ஸ்), சங்கீர்த்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல் : குடும்பத்தினர்.
சசிகரன் (பிரான்ஸ்)

(33481) (10.6.3)

## தமிழ்ப் புத்தாண்டு சிறப்பு மலிவு விற்பனை

உங்கள் நெஞ்சங்களை மலர்ம்மகிழ வைக்கும் மிகக் குறைந்த விலைக்கு.... தரமுயர்ந்த புத்தாடைகள்

எங்கும் தேட முடியாத அற்புத தெரிவுகள்

எவராலும் தரமுடியாத குறைந்த விலைகளில்

அலையெனத் திரண்டுவந்து அள்ளிச் செல்ல வாருங்கள்

**கனடா ஜெயசாஜி சுப்பர் சென்ரர்,**

114, நாவலர் றோட், யாழ்ப்பாணம். **T.P: 021 221 9393**

(2500 ரூபாவிற்கு மேற்பட்ட சாறிகள், சல்வார்களுக்கு தெல்லிஸ் மற்றும் காப்பு இலவசம்)

09.04.2014 தொடக்கம் 13.04.2014 வரை மட்டுமே....

காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை (33479) (2.6.3)

## புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்
## புலோலி கிழக்கு பருத்தித்துறை
## சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்கல்

எமது சங்க சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்கு வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விருப்ப முடையோர் மீளளிக்கத்தக்க வைப்புப்பணமாக ரூபா 1000,00 வைப்புச் செய்து இதற்கான விண்ணப்பப்பத்தி ரத்தை தலைமை அலுவலகத்தில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து ஒரு கடித உறையினுள் வைத்து ஒட்டி 25.04.2014 இற்கு முன்னர் **பொது முகாமையாளர், புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை** எனும் முகவரியிட்டு நேரிலோ அல்லது தபால் மூல மாகவோ அனுப்பிவைக்கவும்.

பொதுமுகாமையாளர்
புலோலி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (சி.13451) (45.6.3)

## இந்த வார இதழில்...



‘சாயியே சரணம்’
(பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர்)

# ‘சுடர்ஒளி’

- உங்களுக்குத் தெரியுமா சிதம்பர இரகசியம்
- நிராகரிக்கப்பட்ட தரகர்கள்

### இன்னொரு இணையக் கொலை

....... நிருபனின் சாவுக்கும் வித்தியாவின் சாவுக்கும் இடையே பெரும் வித்தியாசம் உண்டு. வித்தியா முற்றுப்புள்ளியோடு தன் முகப்பு புத்தக வாக்குமூலத்தைச் சுருக்கி இருந்தார். ஆனால் நிரூபன் அப்படியல்ல......

### யமனுக்கே சவாலா?

.... நாரதருக்கு இப்போதுதான் நிலைமை புரிந்தது. யமலோகக் கணக்குவழக்குகள் எல்லாம் கணனிமயப்படுத்தப்பட்டுவிட்டாலும் இறந்தவர்களின் ஆன்மாக்களைக் கண்டுபிடிக்கும் வசதி இருக்கவில்லை. ஏனென்றால் எல்லா ஆன்மாக்களும் இறப்பின் பின் அவரவர் பாவபுண்ணியத்துக்கேற்ற தண்டனையை அனுபவித்துவிட்டு....

(C/13452)






சுதந்திர வேட்கை (தொடர்)

**உடன் தேவை**

உங்கள் வீடுகளில் உள்ள பழைய கொப்பி, புத்தகங்கள், காட்போட், பத்திரிகைகள் ஆகிய வற்றை பணம் தந்து உங்கள் வீடுகளில் வந்து பெற்றுக்கொள்கின்றோம்.

தொடர்பு - 077 8790581

**உடன் தேவை**

அச்சகம் ஒன்றில் கடமையாற்ற கணினி அமைப்பாளரும், புத்தகம் கட்டுபவர்களும் தேவை. இல21, சட்டநாதர் வீதி, நல்லூர்.

தொலைபேசி: 0777165589

## மரண அறிவித்தல்



### திருமதி பூரணம் சுப்பிரமணியம்

யாழ். அராலி வடக்கு செட்டியார் மடத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பூரணம் சுப்பிரமணியம் 06-04-2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கீதா (ஆஸ்திரேலியா), இராசமணி (யாழ்ப்பாணம்), சந்திரகுமார் (லண்டன்), இராசகுமார் (பிரான்ஸ்) ஆகி யோரின் அன்புத் தாயாரும், சிவசோதி (ஆஸ்திரேலியா), வரதராசா (சங்கரத்தை), மங்கள கௌரி (லண்டன்), சசிகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருபாகரன் தமரை செல்வி, சிறீகரன்வாமினி, ஞானரூபன், ஞானரூபி, ஞானசுதன், ஞானதர்சன், ஞானதர்சினி, கஜேந்திரன் றஜீலா, பிரியதர்ஷினி கண்ணன், பிருந் தாபன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஸ்ருதிகா, தீப்திக்கா, நிக்சிகர், அதுர்யா, தியா, திலக்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10-04-2014) வியாழக்கிழமை மு.ப 09:30 மணி முதல் மு.ப 10:30 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி வடக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வீட்டு முகவரி: செட்டியார் மடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

தொடர்புகளுக்கு:

| | | | |
|---|---|---|---|
| கிருபாகரன் | (பிரித்தானியா) | தொ.பே: | +441843592419 |
| சிறீகரன் | (ஆஸ்ரேலியா) | தொ.பே: | +610296362374 |
| இராசகுமார் | (பிரான்ஸ்) | தொ.பே: | +33954388444 |
| சந்திரகுமார் | (பிரித்தானியா) | தொ.பே: | +442036329664 |
| ரூபன் | (இலங்கை) | செல்லிடப்பேசி: | +94771710190 |

(33488) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### பொன்னுத்துரை இராமலிங்கம்

(இளைப்பாறிய வடபிராந்திய போக்குவரத்துச்சபை உத்தியோகத்தர் C.T.B)

96 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஆலங்குழாய் வீதி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராமலிங்கம் (07.04.2014) திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ரேவதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் சிவராணியின் பாசமிகு கணவரும் புவனேஸ்வரி (கனடா), சீதாலட்சுமி, பாலிதராஜா (சுவிஸ்), சந்தானலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மதன்லால் (ஜேர்மனி), மீராலினி, நஜன் (ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி), லக்னா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் டெனி, தர்மரத்தின ராஜா, தர்ஷிகா, தயாளசீலன் ஆகியோரின் அன்புமாமனும் ரஜீன், அஜய், ரவீனா, சரண்ஜன், ஜனோசன், அபினா, ஆரணி, ஹரிணி, இரினா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2014) புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: இ. நஜன் (மகன்)
077 5487486

18 ஆலங்குழாய் வீதி, சண்டிலிப்பாய்.

## நன்றி நவிலலும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**கதிரேசு இராசையா**
(ஓய்வுநிலை தொலைபேசி இயக்குநர் யாழ். போதனா வைத்தியசாலை)

திருமதி
**இராசையா யோகமணி**
(ஓய்வுநிலை எழுதுவினைஞர் ஆதார வைத்தியசாலை- பருத்தித்துறை)





| | | |
|---|---|---|
| 29.03.1940 | தோற்றம் | 07.12.1937 |
| 11.03.2014 | மறைவு | 20.02.2014 |

கடந்த 20.02.2014 இறைபதமடைந்த குடும்பத் தலைவி திருமதி இராசையா யோகமணி, 11.03.2014 இறைபதமடைந்த அமரர் கதிரேசு இராசையா இருவரின் பிரிவுச் செய்தி அறிந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு தொலைபேசி, மின்னஞ்சல், துண்டுப்பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

நாளை 10.04.2014 வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை அந்தியேட்டிக்கிரியை மண்டபத்தில் நடைபெறும் கிரியைகளிலும், தொடர்ந்து அவர்களின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமூகம்தருமாறு அன்பு

துறையாமூலை,
முருகன் கோவில் வீதி,
புலோலி வடமேற்கு, புலோலி

குடும்பத்தினர்.
077 132 6474,
021 226 2463

(33442)(10)

## பாதாள உலகக்குழு தலைவர் கைது

கொழும்பு,ஏப்.9

ஆமி வசந்த என்ற பாதாள உலகக் குழுத் தலைவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். திவுலப்பிட்டிய பிரதேசத்தில் வைத்து குறித்த நபரை போதைப் பொருள் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபரிடமிருந்து ஒரு தொகை ஹெரோயின் மீட்கப்பட்டுள் ளது.

ஆமி வசந்த பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நபரிடமிருந்து வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள் ளது. (ச)

## விசேட பஸ் சேவைகள் இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு,ஏப். 9

சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு இன்று புதன் கிழமை முதல்நாட்டின்பல பாகங்களுக்குமான விசேட ரயில் மற்றும் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழுத் தலைவர் ரொசான் குணவர்த்தன தெரிவித்தார். 24 மணி நேரமும் பயணிகளின் தேவைக்கு ஏற்ப பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர சகல மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகளுக்கும், தலா 100 பஸ்களை தயார் நிலை யில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இதேவேளை. பண்டிகைநெருங்கும்போது கூடுதலான பஸ்களை தூரசேவையில்ஈடுபடுத்த இலங்கைபோக்குவரத்துச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேவேளை இன்று புதன் கிழமை முதல் விசேட ரயில் சேவை ஆரம்பிக் கப்பட உள்ளதோடு கொழும் பிலிருந்து மாத்தறை, காலி, கண்டி, பதுளை உட்பட முக்கிய இடங்களுக்கு மேலதிக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்த இருப்பதாக ரயில்வே திணைக்களம் கூறியுள்ளது. (ச)

**Words OF Peace**

Are You a Prisoner ? what do you think ? your First Prison is the prision of your concepts. It won't let you think properly.
For more details & Get free DVD
0117250001
Bet 3pm - 10pm

## சவூதி அரசால் இலங்கைக்கு அன்பளிப்பாக பேரீச்சம் பழங்கள்

கொழும்பு, ஏப்.9

சவூதி அரேபியா அரசு இலங் கைக்கு 200 மெற்றிக் தொன் பேரீச்சம் பழங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவின் மன்னர் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் இதனை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்தப் பேரீச்சம்பழங்கள் இலங்கையின் 25 மாவட்டங்களில் உள்ள பள்ளிவாசல் களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இலங்கை மற்றும் சவூதிக்கு இடையேயான சிறந்த உற வுக்குச் சான்றாக இந்தப் பேரீச்சம் பழ அன்பளிப்பு அமைந்துள்ளது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினர்களான பாபு, கீதா ஆகியோரின் அன்புத்தாயும் திருமதி தவராணி சிவானந்தனின் சகோதரியும் ச. சிவானந்தனின் மைத்துனியுமாகிய

### திருமதி இந்திராணி வசந்தநாதன்

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் எமது இதய அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்,
வளர்மதி நிறைவாழ்வகம்

## கண்ணீர் அஞ்சலி




எமது சக ஆசிரியர் திரு நஜன் அவர்களின் பாசமிகு தந்தையார்

### பொன்னுத்துரை இராமலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

## மரண அறிவித்தல்



### சிதம்பரம் தங்கவேலாயுதம்

(ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்)

அல்வாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரம் தங்கவேலாயுதம் 08.04.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரம்-பாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வனும், திலகவதியின் பாசமிகு கணவரும், பாலமுரளி (அபிவிருத்தி உத்தியோகத்தர் விவசாய அமைச்சு வடமாகாணம்), விஜிதா (ஆசிரியை கிளி / பிரமந்தனாறு மகா வித்தியாலயம்-முன்னாள் ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, பருத்தித்துறை), அகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுஜா (ஆசிரியை, யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்), Dr.அகிலன் (கால்நடை வைத்தியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.04.2014) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக கருகம்பன் இந்து மயா னத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சதாபொன்ஸ்,
மாலுசந்தி, அல்வாய்.

(சி/13453) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

# கூட்டமைப்பின் எம்.பிக்கள் குழு இன்று தென்னாபிரிக்கா பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு இன்று மாலை தென்னாபிரிக்காவுக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளனர்.

தென்னாபிரிக்க அரசின் அழைப்பை ஏற்று இன்று பயணமாகும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர், எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் அங்கு பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளனர்.

வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களிலும் ஜொஹன்னர்ஸ்பேர்க், பிரிட்டோரியா ஆகிய இடங்க ளில் பேச்சு நடத்தவுள்ளதுடன், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை டேர்பனுக்குச் செல்லும் குழுவினர் அங்கு தென்னாபிரிக்கத் தமிழர்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசிவிட்டு அங்கிருந்து நேரடியாக இலங்கைக்குப் புறப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டமைப்பினர் தென்னாபிரிக்காவில் சர்வதேச உறவுகள் மற்றும் கூட்டுறவு அமைச்சர் மெயிட்டி நெக்கோனா அம்மையார், பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம், முன்னாள் அரசமைப்பு நீதிமன்ற நீதியரசர் அல்பி சக்ஸ், இலங்கை விவகாரத்தைக் கையாள்வதற்காக தென்னாபிரிக்க ஜனாதிபதி சுமாவினால் விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள சிறில் ரமபோசா ஆகியோரை சந்தித்துப் பேசுவதற்குரிய நிகழ்ச்சி நிரல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் இந்திய பூர்வீகக் குடியைச் சேர்ந்தவரும் தென்னாபிரிக்காவில் சிவில் போரின் பின்னர் இணக்கத்தீர்வு ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் அரசியல் சாசன பிரதி அமைச்சராகவும் பின்னர் அமைச்சராகவும் இருந்த மொகமட் வலி மூசாவையும் அவர்கள் சந்தித்துப் பேசுவர் என்று கூறப்படுகின்றது.

கூட்டமைப்புக் குழுவினரின் தென்னாபிரிக்க நிகழ்ச்சி நிரலில் தென்னாபிரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி சுமாவை அவர்கள் சந்திப்பது பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. எனினும் அதற்கான ஏற்பாடுகள் நடப்பதாகவும் இறுதிநேரத்தில் நிகழ்ச்சி நிரலில் அந்தச் சந்திப்பும் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கை

தோற்கடிக்கப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் முதற்கொண்டு உலகம் முழுவதிலும் செயற்படும் வன்முறை சாராத தமிழ் அமைப்புகள் வரையான அமைப்புகளின் சொத்துக்கள், நிதி வளங்கள் அனைத்தையும் முடக்குவதற்கான கட்டளையைப் பிறப்பித்திருந்தார்.

இந்தக் கட்டளையின் பிரகாரம் பட்டியலிடப்பட்ட குழுக்களுடன் தொடர்புகள் வைத்துக் கொள்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என்றும் ராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்திருந் தார். இதன்படி குற்றஞ்சாட்டப் பட்டுள்ள குழுக்களின் உறுப்பினர்கள் அல்லது செயற்பாட்டாளர்கள் இலங்கைக்குத் திரும்புவார்களானால் இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்படாமலே கைது செய்து தடுப்புக் காவலில் வைக்க முடியும்.

இலங்கை அரசானது கொடூரமான இப்போது அழிந்து போயுள்ள தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் புலம் பெயர்ந்த பிரதான தமிழ் அமைப்புக்களை இணைத்து நடவடிக்கை எடுப்பதற்கு தெளிவில்லாத பயங்கரவாத சட்டங்களைப் பயன்படுத்த முயல்கிறது என்று மனித உரிமைகள் கண்காணிப்பு நிறுவனத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிராட் அடம்ஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வித அகன்ற தடை நடவடிக்கைகளை சர்வதேச தொடர்புகள் கொண்டுள்ள செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளை தண்டிப்பதற்கும் பயன்படுத்த முடியும் என்று கூறினார் அடம்ஸ்.

அரசின் கட்டளைகளுக்கு உண்மையான அடிப்படைகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பட்டியலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்கள் பலவும் அவை செயற்படும் நாடுகளில் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளன. தனிப்பட்ட நபர்கள் 424 பேரின் சொத்துக்களை முடக்குவதாகவும் தடைக் கட்டளை உள்ளடக்குவ தாய் உள்ளது.

வெளிநாட்டில் பயங்கரவாதத்துக்கு நிதி வழங்கப்படுவது குறித்து அரசுக்கு நியாயமான கவலை இருக்குமானால் முதலில் அது வெளிநாட்டு அரசுகளுடன் சட்டப்பூர்வ ஒத்துழைப்பை நாடி செயற்பட்டிருக்க வேண்டும். பட்டியலிடுவதற்கான அடிப்படை உண்மைத் தன்மைகளை முன்வைக்க வேண்டும். அத்துடன் அந்த அமைப்புகளும் தனிப்பட்டவர்களும் சுயாதீனமான பக்கம் சாராத நீதிமன்றங்களில் தங்கள் நிலைப்பாட்டை எடுத்து விளக்கி நியாயத்தைக் கோருவதற்கு உறுதியளிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசிய புலனாய்வுத்துறை தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரன வெளியிட்டுள்ள ஒரு கருத்தில் , பட்டியலில் காணப்படும் நபர்கள், அமைப்புகளுடன் தொடர்புகள் வைத்துள்ளவர்கள் இலங்கையின் அரசமைப்புக்கு மாறாக செயற்படாதவிடத்து பயங்கரவாதத்துக்கு பணம் சேர்க்காதவிடத்து தொடர்ந்தும் தொடர்புகள் வைத்துக் கொள்ள முடியும் என்று கூறியுள்ளார். ஆனால் எம்மாதிரி செயற்பாடுகள் தடை செய்யப்பட்டுள்ளன என்பதை அவர் விவரிக்கவில்லை.

பட்டியலில் காணப்படும் குழுக்கள் , நபர்கள் மீது அரசு நேரடியாக தடை விதிக்கும்-சாத்தியக் கூற்றை ஹெந்தவிதாரன மறுக்கவோ ஆமோதிக்கவோ இல்லை. ஆனால் இன்னும் அதிகம் வெளிப்படலாம் என்று மட்டும் கூறினார்.

(ப)

### கூட்டமைப்பின்

உறுப்பினர்களையும் இதில் பிரதிவாதிகளாகச் சேர்த்துக் கொள் ளலாம்.

தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் மாவை. சேனாதிராசா, தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, சட்டமா அதிபர் ஆகியோர் இந்த வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவிற்காக 20-5-1981 அன்று கொடுக்கப்பட்ட கட்சியின் யாப்பில் "சுயநிர்ணயத்துக்கான அடிப்படைகளுடன் கூட்டாட்சி இலங்கையின் ஐக்கியத்துக்குள் தமிழர்களுக்கான சுயாட்சியையும் முஸ்லிம்களுக்கான சுயாட்சியையும் உருவாக்குவதன் மூலம் தமிழ் பேசும் மக்களிடையே அரசியல் பொருளாதார கலாசார சுதந்திரத்தை ஏற்படுத்துதல்" என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தனி அரசு ஒன்றை உருவாக்கும் நோக்கத்தையும் இலக்கையும் கொண்ட அமைப்பு என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் அந்தக் கட்சியின் தலைவர்கள் அரசமைப்பின் 6 ஆவது திருத்தத்தின் 5ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படக்கூடியவர்கள் என்று அறிவிக்கும்படியும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 6ஆவது திருத்தத்தின் 5ஆம் பிரிவின்படி, உயர் நீதிமன்றத்தால் பிரிவினைவாதக் கட்சி என்று பிரகடனப்படுத்தப்படும் கட்சி ஒன்றி தலைவர்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பிடுங்க முடியும். அத்துடன் அத்தகைய தலைவர்களினது குடியியல் உரிமையையும் 7 வருடங்களுக்கு நிறுத்தி வைக்க முடியும். (உ)

### மன்னாரில்

கண்டுபிடிக்கப்பட்டன. அதையடுத்து சுமார் இரு மாத காலம் நடத்தப்பட்ட தோண்டும் பணிகளின் போது 80 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அது தொடர்பான விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்துக்கு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்தநிலையில் நேற்றுச் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்திய தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சேனாரத் திசநாயக்க, கண்டுபிடிக்கப்பட்டது ஓர் இடுகாடுதான் என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார்.

"நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழி 1930 ஆம் ஆண்டுகளில் இருந்து பயன்படுத்தப்பட்ட ஓர் இடுகாடு என்று தெரியவந்துள்ளது. வழக்கமாக இடுகாடுகளில் புதைக்கப்படுவது போல, இங்கு சடலங்கள் வயிற்றின் மீது கைகள் வைத்தும், தலைகள் மேற்குப் புறமாக வைத்தும் ஒரே திசையில் புதைக்கப்பட்டுள்ளன. சாதாரண இடுகாட்டுக்கும் புதைகுழிக்கும் இடையில் பல வேறுபாடுகள் இருக்கும்.

சாதாரண இடுகாட்டில், சடலங்கள் தனித்தனியாக - முறைப்படி புதைக்கப்படுவது போன்றில்லாமல், புதைகுழியில், கண்டபடியும், ஒன்றின் மேல் ஒன்றாக - ஒழுங்கற்றும் புதைக்கப்பட்டிருக்கும்."- என்று அவர் கூறியுள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சர் ஜகத் பாலசூரியவும், தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கருத்துக்கு வலுச்சேர்த்தார்.

அதேவேளை, மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியை, இடுகாடு என்று நிறுவுவதற்கு இலங்கை அரசு முயற்சிக்கின்றது என்று அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் குற்றம்சாட்டியிருந்ததோடு, அந்த இடத்தில் இடுகாடு இருந்தமைக்கான வரலாற்று ஆவணங்களோ, வரைபடங்களோ இல்லை என்றும் கூறியிருந்தார்.(ற-5)

### நெடியவன்

செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஊடகப் பிரிவில் பணியாற்றியவரும், உறுப்பினருமான நந்தகோபால் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. மலேஷியாவில் இருந்து நாடுகடத்தப்பட்ட அவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், தற்போது அவரைக் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்து வருகின்றனர்.

நெடியவன் என்பவரின் கட்டுப்பாட்டில் உள்ள விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு வலையமைப்பின் பிரதி தலைவர்களில் ஒருவராக நந்தகோபன் செயற்பட்டு வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. தென்கிழக்காசிய நாடுகளில் இருந்து இயங்கிய இவர், போலி கடவுச் சீட்டுடன் மலேசியாவில் இருந்து, ஈரானின் தலைநகர் தெஹ்ரான் வழியாக லண்டனுக்கு செல்லத் திட்டமிட்டிருந்தார். எனினும் நந்தகோபன் தெஹ்ரானில் இருப்பதை தென்கிழக்காசிய புலனாய்வு அமைப்பினர் இலங்கைக்கு தெரியப்படுத்தியதையடுத்து, இலங்கை விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், ஈரானிய அதிகாரிகள் அவரை தெஹ்ரான் விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தினர். அதனால் பயணத்தைத் தொடர முடியாத அவர் கோலாலம்பூர் விமான நிலையத்துக்குத் திரும்பியபோது மலேசிய அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர். அதன்பின்னர் ஆறு மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த நந்தகோபால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார் என்றும் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

தற்போது போர்க் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டில் தங்கியிருந்த காலப்பகுதியில் இலங்கையில் கொண்டிருந்த தொடர்புகள் தொடர்பில் நந்தகோபாலிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

(ற-5)

### வடக்கில்

றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறைப் பகுதியில் வைத்து கடலுக்கு தொழிலுக்குச் சென்று கரை திரும்பியவர்களை காத்திருந்து கைது செய்தனர் பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸார். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாகவே வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் அவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களில் ஒருவரின் சகோதரனான பத்திநாதன் அலன் மரடோல் (வயது -29) நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சிக்கு தொழில் நடவடிக்கைகளுக்காகச் சென்றிருந்த சமயமே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே போன்று ஊர்காவற்றுறையில் அந்தோனிசாமி வசந்தரூபன் (வயது -29) என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினராலேயே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ற-5)

### கோபி

நேற்றிரவு திட்டவட்டமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயகுமாரியின் வீட்டில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸார் ஒருவரைக் காலில் சுட்டுவிட்டு கோபி தப்பி ஓடினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதனை அடுத்து ஜெயகுமாரி மற்றும் அவரது மகள் விபூசிகா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

தாயார் ஜெயகுமாரி பூஸா சிறையில் தடுத்து வைக்கப்பட, சிறுமி விபூசிகா கிளிநொச்சியில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கோபியைத் தேடி வன்னியில் பெரும் தேடுதல் வேட்டைகளைப் படையினர் நடத்தினர். இந்த நிலையில் நேற்று கோபி எனப்படும் கஜீபன் என்கிற நபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிகிறது. எனினும் இந்தக் கைது தொடர்பான உத்தியோபூர்வ நிலைப்பாட்டை அறிய பொலிஸ் பேச்சாளருக்கு நேற்றிரவு அழைப்பு எடுத்தபோதும் அவர் பதிலளிக்கவில்லை. (உ-5)

### அந்நியோன்னி

ஆகவே, இங்கு புதிதாக ஐக்கியத்தை உருவாக்க வேண்டிய அவசியமில்லை. வாசுவின் கருத்தானது தமிழர்களுக்கு பயனற்ற 13 ஆவது திருத்தத்தை எப்படியாவது பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றே சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறான கருத்துகள் நாட்டில் மீண்டும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் அபாயம் வாய்ந்தவை. அதுமட்டுமல்லாது, தனி ஈழத்திற்கும் வழி வகுக்கக்கூடும். ஐ.நாவில் இந்தியா எமக்கெதிராக வாக்களிக்காதமையும் ஒரு இராஜதந்திர வித்தையாகும். இதை நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் தெளிவாக எழுதியுள்ளேன்.

தற்போது, அப்படிப்பட்ட இந்தியாவின் ஒரு முகவர் நிலையம் போன்றே நாட்டில் வாசுதேவ நாணயக்கார செயற்படுகிறார். அவருக்கு உண்மையிலும் தமிழர்கள் மீது அக்கரையிருப்பின் வடக்கு, கிழக்கில் வீதிகளை அமைக்கும் முன் அங்குள்ளவர்களின் பிரச்சினைகளை இணங்கண்டு சரிசெய்திருக்க வேண்டும். அதை விடுத்து அர்த்தமற்ற பேச்சுக்களை அவர் பேசக் கூடாது"- என்று தெரிவித்தார்.

(ற-சி)

### வவுனியாவில்

களை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, குறித்த பெண் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றமைக்கு பேஸ்புக் விவகாரம் ஒன்றே காரணம் என்று கூறப்படுகின்றது. குறித்த பெண்ணின் புகைப்படம் ஆண் ஒருவருடன், இணைக்கப்பட்டு ஆபாசமாக பேஸ்புக்கில் தரவேற்றப்பட்டதை அடுத்தே அவர் தற்கொலை முயற்சியை மேற்கொண்டிருந்தார் என்றும், அந்தப் புகைப்படம் குறித்த பெண்ணின் முகம் வேறொரு புகைப்படத்துடன் பொருத்தப்பட்டு உருவாக்கப்பட்டது என்றும் மேலும் கூறப்படுகின்றது. (ற-421)

### பளையில்

கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பரந்தன் ரயில் நிலையத்திற்கு அருகில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

குறித்த சடலத்தின் தலைப் பகுதி அடையாளம் காணமுடியாதவாறு சிதைவடைந்திருந்தது.

இந்த நிலையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் குறித்த சடலத்தின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதன் போது குறித்த சடலத்தின் ஜீன்ஸின் பின்பக்க பொக்கட்டினுள் இருந்து சிம் அட்டை மீட்கப்பட்டிருந்தது. குறித்த சிம் அட்டையை வைத்துக் கொண்டு உரியவரை அடையாளம் காணும் முயற்சிகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த சிம் அட்டைக்குரியவர் கண்டியைச் சேர்ந்தவர் என்று கண்டறியப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (ற-5)

# யாழ். பல்கலை வீரர்கள் 14 பேருக்கு கௌரவிப்பு

## இன்று கொழும்பில் நிகழ்வு



கே.ஐங்கரன் | இ.ஜெயரூபன் | ரி.டிரோன் கொடுதோர் | எஸ்.ஞானரூபன் | பி.பி.சிறின் டெசிலன்



வி.நிசாந் | பி.கிருஸ்ணகுமார் | என்.மினோசினி | டி.எம்.டி.கே.திச நாயக்கா | கே.கிருஸ்ணபிரியா



சி.மயூரன் | என்.ஜனார்த்தனன் | எஸ்.ஜயதி | எஸ்.பிரதாப்

யாழ்ப்பாணம்,ஏப். 9
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டுத் துறையின் வீரர்கள், வீராங்கனைகள் 14 பேர் இன்று புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள சிறந்த வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

2012-2013 ஆம் ஆண்டுக்காக நடைபெறும் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவும் சிறப்பு விருந்தினராக உயர் கல்வி அமைச்சின் பிரதி அமைச்சர் நந்தமித்ர ஏக்க நாயக்காவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கே.ஐங்கரன் (கூடைப்பந்தாட்டம்,தடகளம்), இ.ஜெயரூபன் (ஹொக்கி, எல்லே), ரி.டிரோன் கொடுதோர் (உதைபந்தாட்டம்), எஸ்.ஞானரூபன் (உதைபந்தாட்டம்), பி.பி.சிறியன் டெசிலன் (உதைபந்தாட்டம்) வி.நிசாந் (தடகளம்) பி.கிருஸ்ணகுமார் (பளு தூக்கல்) ஆகியவற்றில் ஏழு பேரும்-2013ஆம் ஆண்டுக்காக எஸ்.ஞானரூபன் (உதைபந்தாட்டம்), பி.பி.சிறின்டெசிலன் (உதைபந்தாட்டம்), சி.மயூரன் (உதைபந் தாட்டம்), இ.ஜெயரூபன் (ஹொக்கி, தடகளம்) என்.மினோசினி (கூடைப்பந்தாட்டம்) டி.கே.திச நாயக்கா (எல்லே), கே.கிருஸ்ண பிரியா (எல்லே) என்.ஜனார்த்தனன் (ஹொக்கி), எஸ்.ஜயதி (ஹொக்கி), எஸ்.பிரதாப் (ஹொக்கி) ஆகியவற்றில் 10 பேரும் கௌரவிக்கப்படவுள்ளனர். (த-86-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 9
யாழ். உதைபந்தாட்டலீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றன.
இதில் இன்று புதன்கிழமை பி.ப 3.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 9
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றன.
இதில் இன்று புதன் கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் 'ஏ' அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் 'ஏ' விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அல்வாய் பாரதி விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 9
வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர் சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் 3ஆவது காலிறுதி ஆட்டத்தில் அல்கிஜ்ரா விளையாடுக் கழக அணியை எதிர்த்து சண் சையின் விளையாடுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## 786 வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 9
வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற 2ஆவது காலிறுதியாட்டத்தில் 786 விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் 786 விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (த-23)

## வென்றது குறிஞ்சிக்குமரன்

யாழ்பாணம், ஏப். 9
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றன.
இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## கண்டாவளை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி நாளை

யாழ்ப்பாணம், ஏப். 9
கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.
கல்மடுநகர் சென். அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் பி.ப ஒரு மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குக் கண்டாவளைப் பிரதேசசெயலர்பி.முகுந்தன் தலைமை வகிக்கவுள்ளார்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கே. ரூபவதி கேதீஸ்வரன்கலந்துகொள்ளவுள்ளார்.
நிகழ்வில் வெற்றி பெற்ற கழகங்களுக்குப் பரிசுகளும் கேடயங்களும் வழங்கப்படவுள்ளதாகக் கண்டாவளை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சிவநேசன் தெரிவித்தார். (த-10)

## கபடியில் வென்றது தோமஸ்



சென். தோமஸ் விளை யாட்டுக்கழக அணி.

யாழ்ப்பாணம், ஏப். 9
வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கபடிச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சென். தோமஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா 25 புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரு அணியினருக்கும் மேலதிகமாக 5நிமிடங்கள் வழங்கப்பட்டன.
இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி தமக்கு வழங்கப்பட்ட 5நிமிடங்களில் எதுவித புள்ளிகளையும் பெறவில்லை. சென். தோமஸ் விளையாட்டுக்கழக அணி தமக்கு வழங்கப்பட்ட 5நிமிடங்களில் ஒரு புள்ளியைப் பெற்றது.
ஆட்ட நேர முடிவில் சென். தோமஸ் விளையாட்டுக்கழக அணி 26:25 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)

# அமெரிக்கத் தூதர் கிண்ணத்தை வென்றது யாழ். மாவட்ட அணி




கிரிக்கெட் அணிகளுடன் அமெரிக்கத் தூதுவர்

கொழும்பு,ஏப் 9
அமெரிக்கத் தூதுவர் மிச்சல் சிசனினால் முதன்முறையாக அனுசரணையளிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த வாரம் கண்டியில் இடம்பெற்றது. இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கண்டி மற்றும் யாழ்ப்பாண அமெரிக்கத் தகவல் கூடங்களின் இளைஞர் கழகங்கள் பங்கு பற்றின.
அணிக்கு ஆறு பேர் கொண்ட இச் சுற்றுப்போட்டியானது கண்டி மற்றும் யாழ்ப்பாண அமெரிக்கத் தகவல் கூடங்களின் முறையே இரண்டு கழகங்களுக்கு வாய்ப்பளித்ததுடன், இலங்கையின் இளைய சமூகத்தினரிடையே சிறந்த விளையாட்டுப் பண்பு மற்றும் ஒற்றுமை ஆகியனவற்றை மேம்படுத்தவும் ஒரு அடித்தளமாக அமைந்தது.
கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இந்தத் தூதுவர் கிண்ண சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாண 'ஏ' அணி வெற்றி பெற்றதுடன் கண்டி 'ஏ' அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.மேலும் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் இளைஞர்களை உள்ளடக்கியதாக இளைஞர் விளையாட்டுக் கழகமொன்றை ஸ்தாபிப்பதன் மூலம் இந்த நல்லெண்ணப் போட்டிகளை ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலயம் மேலும் விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளது.
இந்த நிகழ்வானது கண்டி மாநகரசபையின் ஒத்துழைப்புடன் கொழும்பிலுள்ள அமெரிக்க நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
கண்டி மாநகர முதல்வர் மகேந்திர ரத்வத்தையும் கலந்து கொண்ட இந்நிகழ்வில், தூதுவர் சிசன் தனது ஆரம்ப உரையில், இலங்கையின் இளைய சமுதாயத்தினரிடையே உயர்ந்த மனப்பாங்கு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு என்பனவற்றை ஏற்படுத்தும் இந்த நிகழ்வுக்கு அனுசரணை வழங்குவதில் ஐக்கிய அமெரிக்க தூதரகம் பெருமையடைவதுடன், இவ் விளையாட்டு வீரர்கள் இளைஞர் ஊக்குவிப்பு மூலமாக இலங்கை நாட்டுக்குப் பலமான எதிர் காலத்தை ஏற்படுத்துவதில் விளையாட்டு இராஜதந்திரத்துக்கான சிறந்த உதாரண மாகவும்திகழ்கின்றனர் எனக் குறிப்பிட்டார்.
(த)

## நடால், செரீனா முதலிடத்தில்



உலக ரென்னிஸ் வீரர்களின் தரப்பட்டியலில் ஆடவர் பிரிவில் ரபேல் நடாலும், மகளிர் பிரிவில் செரீனா வில்லியம்ஸும் முதலிடம் பிடித்துள்ளனர்.

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் நேற்று வெளியிட்டுள்ள பட்டியலில் ஸ்பெயினின் ரபேல் நடால் 13,730 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

அவருக்கு அடுத்த இடத்தில் சேர்பியாவின் நோவாக் யாக்கோவிச் உள்ளார். இருவரிடையேயும் 2050 புள்ளிகள் வித்தியாசம் உள்ளது. மூன்றாவது இடத்தில் சுவிற்ஸர்லாந்தின் ஸ்ரானிஸ்லாஸ் வாவ்ரிங்கா உள்ளார்.

அடுத்தடுத்து ஏற்பட்ட சில தோல்விகள் காரணமாகப் பல வாரங்களாக முதல் நான்கு பேரில் இடம்பிடித்திருந்த பிரிட்டனின் அன்டி முரே இப்போது வெளியாகியுள்ள பட்டியலில் எட்டாவது இடத்திலேயே உள்ளார்.

மகளிர் பிரிவைப் பொறுத்தவரையில், செரீனா வில்லியம்ஸின் ஆளுமை தொடருகிறது. கடந்த வாரம் சார்லஸ்டோனில் நடைபெற்ற ஒரு ரென்னிஸ் போட்டியின் தகுதி சுற்றுகளிலேயே வெளியேறியிருந்தாலும் அவர் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

அவர் 12,375 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் இருந்தாலும் அவருக்கும் அடுத்த இடத்தில் இருக்கும் சீனாவின் லீ நா வுக்கும் இடையே 5000 புள்ளிகளுக்கும் அதிகமான வித்தியாசம் உள்ளது.

அண்மையில் ஆஸ்திரேலி யன் ஓபன் ரென்னிஸ் போட்டியை லீ நா வென்றிருந்தாலும் அவரால் முதலிடத் துக்கு முன்னேற வேண்டிய அளவுக்கு புள்ளிகளைப் பெறமுடிய வில்லை. மகளிர் பிரிவில்போலந்தின்அக்னிஸ்காரட் வன்ஸ்கா மூன்றாவது இடத்திலுள்ளார். (த)

## மீண்டும் முதலிடம் பிடித்தது இலங்கை



உலக 20/20 கிரிக்கெட் போட்டிகளின் தரப்படுத்தலில் இலங்கை அணி மீண்டும் முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளது.

இலங்கை அணி 133 புள்ளிகளுடன் முதலிடத்திலும் இந்திய அணி 130 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும் பாகிஸ்தான் அணி மூன்றாம் இடத்திலும் உள்ளன.

தென்னாபிரிக்கா அணி நான்காம் இடத்திலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஐந்தாம் இடத்திலும் காணப்படுகின்றன.

2014ஆம் ஆண்டுக்கான 20/20 உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்ததன் மூலம் இலங்கை அணி தரப்படுத்தலில் முன்னிலை பெற்றுள்ளது.

இதேவேளை, உலகத் தரப்படுத்தல் வரிசையில் துடுப்பாட்டத்தில் ஐந்தாவது இடத்தில் இருந்த குசல் பெரேரா, உலக தரத்தில் முதல் 10 இடத்துக்குள் முன்னேறிய இலங்கை வீரர் என்ற நிலையை எட்டியுள்ளார்.

20/20 கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விடைபெறும் மஹேல ஜெயவர்த்தன 12ஆவது இடத்திலும், குமார் சங்கக்கார 17ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர். (த)



## டேனியலின் காதல் தூதுக்கு [illegible]கோஹ்லியின் தாயார் பதில்


இந்தியக் கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லிக்கு வந்த காதல் தூது பற்றி அவரது தாயார் சரோஜ் பதிலளித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் வீராங்கனை டேனியலி நிகோல் யாட் தனது ருவிட்டர் பக்கத்தில் விராட் கோஹ்லிக்குக் காதல் தூது அனுப்பியிருந்தார்.

இது குறித்து கோஹ்லியின் தாயார் சரோஜ் கூறுகையில்; விராட் கோஹ்லிக்கு இப்போது திருமணம் செய்து கொள்வதற்குச் சரியான வயது கிடையாது. இன்னும் 45 ஆண்டுகளுக்கு அவரது திருமணத்தைப் பற்றி நினைக்கமாட்டோம். அவர் இப்போது தான் தனது கிரிக்கெட் வாழ்க்கையைச் சிறப்பாக தொடங்கியுள்ளார். கிரிக்கெட் பயணத்தில் அதிக முன்னேற்றம் காண அவர் துடுப்பாட்டத்தில் தொடர்ந்து கவனம் செலுத்துவதே எங்களுக்கு முக்கியம் என்று மறைமுகமாக டேனியலின் விருப்பத்தை நிராகரித்துள்ளார்.

மேலும் விராட் கோஹ்லிக்காக அந்த வெளிநாட்டு மங்கை காத்திருக்கத் தயாராக இருந்தால் ஏற்றுக்கொள்வீர்களா? என்ற ஊடகங்களின் கேள்விகளுக்கு, உங்களது யூகங்களுக்குப் பதில் சொல்ல முடியாது. உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதைஎழுதிக்கொள்ளுங்கள்என்று கோபமாகப் பதில் அளித்துள்ளார். (த)

## இம்ரான்கான் வழியில் இப்போது அப்ரிடியும்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் ஷஹீட் அப்ரிடி தனது கிராமத்தில் ஏழைகளுக்கு இலவச மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக வைத்தியசாலை ஒன்றை திறந்து வைக்கவுள்ளார்.

இந்தத் தகவலை ஷஹீட் அப்ரிடியின் மாமாவான ஸப்ஷதா பஷ்ல் காலிக் தெரிவித்துள்ளார். ஏழைகளுக்கு இலவச மருத்துவம் மற்றும் சிகிச்சைகள் வழங்கவுள்ள வைத்தியசாலை ஒன்றை அவரது சொந்த ஊரான கொஹட்டில் திறந்து வைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் செய்யப் பட்டுவிட்டது.

மருந்துகள் மற்றும் இயந்திரங்கள் அனைத்தும் கொள்வனவு செய்திருந்தபோதே வைத்தியாசலைக்குரிய வைத்தியர்களையும் ஒப்பந்தம் செய்யப்பட்டுவிட்டது எனவும் அவர் தெரிவித்தார். 2001ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்திக்கும் 10 மில்லியன் பாகிஸ்தான் ரூபாவை அப்ரிடி வழங்கியதாக அவர் நினைவு கூர்ந்தார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கான் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை பல வருடங்களுக்கு முன்னர் நிர்மாணித்தமை குறிப்பிடத்தக்கது. (த)



## கலங்கினார் யுவராஜ் ஆறுதலளித்த சச்சின்

20/20 உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் மோசமான ஆட்டத்தால் அனைவரின் விமர்சனங்களுக்கும் உள்ளான யுவராஜுக்கு முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆதரவளித்துள்ளார்.

சச்சின் தனது பேஸ்புக் பக்கத்தில் யுவராஜுக்கு வெளிப்படையாக ஆறுதல் தெரிவித்துள்ளார். அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் கூறியதாவது:

யுவி... நீங்கள் ஒரு நாள் ஒளிராமல் போய்இருக்கலாம். இன்றுஉங்களது ஆட்டத்தில் தொய்வு ஏற்பட்டிருக்கலாம். இந்த தொய்வு நிரந்தரமானது அல்ல. அதற்காகக் கடந்த சில ஆண்டுகளாக அணிக்கு நீங்கள் அளித்த மிகப்பெரிய பங்களிப்புகள், பல மறக்க முடியாத இனிமையான நினைவுகளை அழித்து விட முடியாது. நேற்று முன்தினம் மாலை உங்களுக்குக் கடுமையான நாள். உங்களை எல்லோரும் விமர்சித்து இருக்கலாம். அதற்காக உங்களுடைய கிரிக்கெட் சாதனைகள் முடிந்து விட்டதாக அர்த்தமல்ல.

2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை இந்தியா தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சியில் நீங்கள் ஈடுபடவேண்டும்' என்று நான் மட்டுல்ல, உலகில் உள்ள இந்திய ரசிகர்கள் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள் என்று தெரிவித்திருந்தார்.

மேலும் யுவராஜ் சிங்கின் முழுமையான திறமைகளைக் கண்டு மெச்சுபவர்களில் நானும் ஒருவன். அவர் பல்வேறு சவால்களைக் களத்திலும், வெளியிலும் கடந்து வந்துள்ளார். அவரது மனஉறுதியும், போராட்ட குணமும் அவரை இன்னும் வலிமையான மனிதராக வெளிக்கொண்டு வரும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. தன் மீதான விமர்சனங்கள் தவறு என்பதை மீண்டும் அவர் நிரூபித்துக் காட்டுவார் என்று கூறியுள்ளார். (த)



# உலகச் சம்பியனான அணியில் இருந்தது இதுவே முதல் முறை

## சங்ககார பெருமிதம்

இந்த விளையாட்டு எங்களுக்கோ அல்லது தனிப்பட்ட ஒரு வீரருக்கோ சொந்தமானது என நான் கருதவில்லை. எங்களால் முடிந்தவரை சிறப்பாக விளையாடி முயற்சியை முன்னெடுப்பதே எமது கடமை. என இந்தியாவுக்கு எதிரான உலக 20/20 இறுதி ஆட்டத்தில் நட்சத்திரமாக மின்னிய குமார் சங்ககார தெரிவித்தார்.

இந்த விளையாட்டானது வாய்ப்புகளைக் கொடுக்கும். அவற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளவேண்டும். இதற்கு முன்னர் நான்கு சந்தர்ப்பங்கள் நழுவிப் போயின. இன்று கிடைத்த சந்தர்ப்பத்தை நாங்கள் பற்றிப் பிடித்துக்கொண்டோம். அதற்கு ஆற்றல், சிறிய அதிர்ஷ்டம், திட்டமிடல், நிறைவேற்றுதல் என்பன அவசியம். அத்துடன் உரிய இடம், உரிய நேரம், உரிய போட்டி என்பனவும் அமையவேண்டும்' எனவும் அவர் கூறினார்.

பொதுவாக கிரிக்கெட் வீரர்கள் பிரியாவிடை பெறும்போது கிரிக்கெட் போட்டி முடிவுகள் அவர்களுக்குச் சாதகமாக அமைவது மிகவும் அபூர்வம். ஆனால் ஞாயிறன்று இரவு இலங்கையின் இரண்டு உன்னதம் வாய்ந்த கிரிக்கெட் வீரர்களான குமார் சங்ககாரவுக்கும் மஹேல ஜயவர்த்தனவுக்கும் 20/20 உலக சம்பியன் பட்டத்துடன் பிரியாவிடை வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

தனது துடுப்பாட்ட ஆற்றலையிட்டும் இலங்கையின் மகத்தான வெற்றியையிட்டும் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக குமார் சங்கார காணப்பட்டார்.

இது மிக மிக மகத்தானது. அதனை என்னால் விளக்க முடியவில்லை. உலக சம்பியன் பட்டம் ஒன்றை வென்ற அணியில் நான் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். இதற்கு முன்னர் நான்கு தடவைகள் நாங்கள் ஏமாற்றம் அடைந்தோம். இம்முறை சாதித்துவிட்டோம். இப்போது எமது உள்ளுணர்வை துல்லியமாக விபரிக்க முடியாது. இதன் மூலம் தாழ்மையை உணர்கின்றோம்' எனச் செய்தியாளர்கள் மத்தியில் உணர்ச்சிவசப்பட்டுச் சங்ககார குறிப்பிட்டார்.

எமது அணி எங்களுக்காக (மஹேல, குமார்) வெற்றி பெறுவதற்காக எடுத்த முயற்சி மகத்தானது. ஆனால் 20 மில்லியன் மக்கள் வெற்றிக்காகக் காத்திருந்தனர். அது மஹேலவுக்காகவும் எனக்காகவும் அல்ல. முழு அணிக்கும் எம்மோடு இருக்கும், எமக்கு ஆதரவளிக்கும் சகலருக்குமான வெற்றி. இது எமது கடைசிப் போட்டி என்பதால் எல்லோரும் எங்களைக் கூர்ந்து கவனிக்கின்றனர். ஆனால் இறுதியில்; ஒவ்வொருவரும் தங்களது பங்களிப்பை வழங்கியுள்ளனர்' என்றார் சங்ககார. (கு)

# கிண்ணம் வென்ற இலங்கை அணிக்கு நாடாளுமன்றத்தில் இன்று வரவேற்பு

20/20 உலகக் கிண்ணத்தை வென்று நேற்று நாடு திரும்பிய இலங்கை அணிக்கு இன்று புதன் கிழமை நாடாளுமன்றத்தில் பெரும் வரவேற்பளிக்கப்படவுள்ளது.

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண 20/20 போட்டியின் இறுதியாட்டத்தில் இந்திய அணியைத் தோற்கடித்து முதன்முறையாக கிண்ணம் கைப் பற்றிய இலங்கை அணியினர் நேற்று நாடு திரும்பினர். விமான நிலையத் தில் இருந்து காலி முகத்திடல் வரை ஒன்று கூடிய இரசிகர்கள் வீரர்களைப் பாராட்டி ஆரவாரம் செய்து வரவேற் பளித்தனர். விமான நிலையத்திலி ருந்து வீரர்கள் திறந்த வாகனத்தில் காலி முகத்திடலுக்கு அழைத்து வரப்பட்டனர்.

வீதிகளில் ரசிகர்கள் வெடிகள் கொளுத்தி மாலைகள் அணிவித்து பெரும் வரவேற்பளித்தனர்.

சுமார் 3 மணி நேரம் இந்த வரவேற்பு நடைபெற்றது. அதன் பின்னர் காலி முகத்திடலிலும் பெரும் வரவேற்புக் கொண்டாட்டம் நடைபெற்றது.

இதில் வீரர்களுக்கு பரிசுப் பொருள்க ளும் வழங்கப்பட்டன.

இன்று நாடாளுமன்றத்தில் வைத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் இலங்கை அணி வீரர்களைப் பாரா ட்டிக் கௌரவிக் கவுள்ளனர் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை 20/20 உலகக் கிண ணப் போட்டியில் கிண்ணம் வென் றால் இலங்கை அணிக்கு 20 கோடி ரூபா பரிசுத் தொகை வழங்கப் படும் என அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு-400)



விமான நிலையத்தில் கிண்ணத்துடன் அணித் தலைவர் மலிங்க மற் றும் சங்ககார


**றோயல் அக்கடமி**
**சங்கானை**

A/L 2016
கலை வர்த்தக பிரிவுகள்

- பொருளியல் S.ஜெயக்குமார்
- கணக்கீடு R.வின்சன்
- வணிகக்கல்வி S.பிரதீபன்
- தமிழ் B.பத்மநாதன்
- அரசியல் K.S.இளங்கோ
- இந்துநாகரீகம் T.ஸ்ரீஸ்
- புவியியல் N.S.சங்கர்
- வரலாறு R.S சந்திரன்
- அளவையியல் E.S.பவன்
- நாட. அரங்கியலும் S.சிவா

ஆரம்பம்: 10.04.2014 வியாழன் பி.ப. 4 மணி

குறிப்பு :
1. 2014 A/L Paper Class நடைபெறுகிறது.
2. 2015 A/L வகுப்புக்கள் நடைபெறுகிறது.
3. நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறலாம்

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்**
**சவுதி அரேபியாவில் உடனடி வேலைவாய்ப்பு**
**பயணம் முற்றிலும் இலவசம்**

சவூதி இராச்சியத்தின் U(B) லதியா Driver 20 பேர் உடன் தேவை. தங்குமிடம், மருத்துவம் இலவசம்

தகைமை: Srilanka License Light Vehicles சம்பளம் 1000 +OT மிக விரைவில் உங்கள் விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் Green grass hotel ல் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு : LANKA VOICE
077 0584658

**சாரதி தேவை**

யாழ். நகரில் இயங்கும் மொத்த விற்பனை நிலையம் ஒன்றிற்கு யாழ். குடாநாட்டிலும், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங் களி லும் விற்பனை வாகனம் ஓடுவதற்கு சாரதி தேவை.விண்ணப்பிக்க விரும்புவோர் பின் வரும் முகவரிக்கு 15.04.2014 ற்கு முன்னர் விண்ணப் பங்களை அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல - 4498
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சித்திரை புத்தாண்டை முன்னிட்டு**
**ST.ANTONY'S**
**மாபெரும் கணினி மலிவுவிலையில்**

Hpகணினி, Hp மடிக்கணினி, Hpபிறின்டர் மற்றும் கணினி உதிரிப் பாகங்கள் மலிவு விலையில்

HP CORE 2 DUO FULL SET COMPU[illegible]
29, 750/=
19" LED MON.
250GB HDD
2GB RAM
FREE-H-PHONE/W-CAM/PENDRIVE
187 K.K.S. ROAD JAFFNA TOWN
T.P: 021 2224865, 075 0698608
(16 ஆவது வருட சேவையில்)

**றோயல் அக்கடமி**
**அரசடி றோட், யாழ்ப்பாணம்**

A/L 2016 வர்த்தகபிரிவுகள்
பொருளியல் : S.ஜெயகுமார்
கணக்கீடு : S. நித்தி, T.விஸ்வராஜ்
வணிகக்கல்வி: S.சிவராஜா
ஆரம்பம்: 10.04.2014 வியாழன் பி.ப. 3 மணி

**40 வது வருட கல்விச்சேவையில்**

**விக்னா**
கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்.

O/L DAY CLASS (8.30 - 2.30)

மீண்டும் ஒரு புதிய பிரிவு
இன்று ஆரம்பம 09.04.2014 காலை 8 மணி
யாழ்.நகரில் DAY CLASS இங்கு மட்டுமே

**N.C.A. கல்வி நிறுவனம்**
**1ஆம் கட்டை, பருத்தித்துறை**

A/L 2016
கலை வர்த்தகம்
தொழில்நுட்பக்கல்வி
புதிய பிரிவு ஆரம்பம்
12.04.2014 சனி 3 மணி

**நியூ சயன்ஸ் அக்கடமி**
**வதிரி நெல்லியடி**

தொழில் நுட்பப் பிரிவுகள் ஆரம்பம்
12.04. 2014, மு.ப. 8.30.
எமது வழமையான ஆசிரியர் குழாமுடன்
1. செல்வச்சந்திரன் ( பொறியியல் தொழில்)
2. சாந்தகுமார் (கணக்கீடு)
3. செந்தூரன்
தனித்தனி பாடங்களும் எடுக்கலாம். வதிரி கரவெட்டி

Rotary RI District 3220 - ROTARY CLUB OF JAFFNA

அமெரிக்காவில் அதியுயர் விருது பெற்ற தமிழ் விஞ்ஞானி - பௌதிகவியல் பேராசிரியர்

**சிவலிங்கம் சிவானந்தன்**

அவர்களின் யாழ்.வருகையை முன்னிட்டு

**யாழ்.றோட்டறிக் கழகம் நடாத்தும்**

**சாதனையாளர் சிறப்புரை நிகழ்வு**



காலம் : 15.04.2014, செவ்வாய்க்கிழமை, பி.ப 3.00 மணி
இடம் : யாழ்.இந்துக்கல்லூரி, குமாரசுவாமி மண்டபம்.

அறிவியலில் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றிப் பயன்பெறுவதற்கான அரிய சந்தர்ப்பம் !

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் பயன்பெறுவதற்கான வழிகாட்டல்களைக் காணத்தவறாதீர்கள்!!

மேலதிக விவரங்களுக்கு : 0787 0718 692 692

அனுசரணை: உதயன்

'புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு'
**'ஞானோதய அக்கடமி'**

A/L 2016
கலை, வர்த்தக, தொழில்நுட்பப் பிரிவுகள்
- ஆரம்பம்: 10.04.2014 (வியாழக்கிழமை) காலை 08.00 மணி
- திறமையும், அனுபவமும் வாய்ந்த பிரபல ஆசிரியர் குழாம்
- தொழில்நுட்ப பாடங்கள் தொடர்பில் கணினி மற்றும் பல்லூடகம் (Multimedia) பயன்படுத்தும் வசதி.
- செயன்முறையூடான கற்பித்தல்.

அனுமதிகளை தினமும் 08.00 - 06.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
நிர்வாகம் (46591)(12.6)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புதன் பொய்கை

A

உதயன் ஏப்ரல் 09 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு


> நீயும் உடன்பட்டா
> விடில் நீ தாழ்ந்தவன்
> என்ற உணர்வை
> உன்மேல், எவராலும்
> எங்கும் எப்படியும்
> சுமத்த முடியாது
>
> -எலினார் ரூஸ்வெல்ட்



இன்று மனித சமுதாயத்தை விதம் விதமான நோய்கள் மட்டுமல்லாது ஊழல், மோசடி என்பனவும் அரித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் தனி மனிதனும் அவன் சார்ந்த சமூகமும், முழு நாடும் மிகப் பெரிய பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

# ஊழல் இல்லாத உலகம்

ராஜராஜன்

ஊழல் என்பது இன்று உலக சமுதாயத்தை அச்சுறுத்தும் மிகப் பெரிய கெடுதலாக உருவெடுத்துக் காணப்படுகின்றது. அரசியல், பொது வாழ்வு, வர்த்தகம், ஆன்மிகம் எனப் பல துறைகளும் ஊழல் வசப்பட்டுக் கறை படிந்த நிலையில் காணப்படுகின்றன. பொதுவாகவே அரசியல்வாதிகள் ஊழல் மிகுந்தவர்கள் எனக் கூறப்படுவது உண்டு. நாட்டின் அதிகாரத்தை நிர்ணயிக்கும் சக்திகளாக இவர்கள் உள்ளதால் ஊழல் புரிவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே இவர்களிடம் உள்ளது. முதல் நாள்வரை ஆண்டியாக இருந்த ஒருவர் அரசியலில் நுழைந்து அதிகாரத்துக்கு வந்ததும் செல்வச் செழிப்பில் மிதக்கும் அதிசயமும் இங்குதான் நிகழ்கின்றது.

மேலும் இத்தகைய அரசியல்வாதிகள் ஆளும் தரப்பில் இருந்தால் எவருக்குமே அஞ்சாத நிலையில் தமது மனம்போனவாறு செயற்படுகின்றனர்.

ஆட்சி அதிகாரங்கள் இவர்களின் கைகளில் சிக்குண்டு கிடப்பதால், இவர்கள் புரிகின்ற ஊழல்கள் தொடர்பாகக் குரல் எழுப்புவதற்கு எவரும் துணிவதில்லை.

மேலை நாடுகளைப் பொறுத்தளவில் ஊழல் எங்கு இடம்பெற்றாலும் அது தொடர்பாகக் குரல் எழுப்பக்கூடிய துணிவை மக்கள் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அந்த நாடுகளில் ஜனநாயகத்துக்கு ஓரளவு மதிப்புக் கொடுப்பதன் காரணமாக மக்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆனால் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பெயரளவில் மட்டுமே ஜனநாயகம் இருப்பதால் மக்கள் வாய்களுக்குப் பூட்டுப்போடப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர். இதனால் அவர்கள் கிளர்ந்தெழுந்து குரல் கொடுக்கக் கூடிய நிலைமை மிகக் குறைவாகவே உள்ளது. ஆனாலும் ஊழலுக்கு எதிராக அவ்வப்போது மக்கள் குரல் எழுப்புகின்ற போதிலும், ஆட்சியாளர்கள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அதை ஒடுக்கி விடுகின்றனர்.

அலுவலகமொன்றில் ஏதாவது காரியம் ஆக வேண்டுமென்றால், எதையாவது கொடுக்கவேண்டுமென்றே மக்கள் நினைக்கின்றனர். இதற்கு ஏற்றாற்போன்று அந்த அலுவலகத்திலும் சில எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றன. இதுவே ஊழலுக்கு அத்திபாரம் இடுகின்றது.

இதேவேளை தமது வாழ்க்கையைக்கொண்டு செல்வதற்குத் தேவையான வருமானம் கிடைக்காத போது எவருமே குறுக்கு வழியில் அதனைத் தேடுவதற்கு முயல்வார்கள். ஏனென்றால் இது அவர்களின் உயிர் வாழ்வதற்குரிய பிரச்சினையாகும். இன்று எமது நாட்டை எடுத்துக் கொண்டால், வருமானத்துக்கும் செலவுக்கும் இடையில் நீண்டதொரு இடைவெளி காணப்படுகின்றது. இதனால் பெரும்பான்மையான மக்கள் தமது நாளாந்த உணவைப் பெறுவதற்குக் கூட கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். பசியால் வாடும் ஒருவன் தனது பசியைப் போக்குவதற்கு எதனையும் செய்யத் துணிவான். கொலை செய்வதற்குக் கூட அவன் துணியும் நிலையில் ஊழல் செய்வதென்பது மிகக் குறைந்ததொரு குற்றச் செயலாகவே அப்போது கருத முடியுமென்றாலும் இதுவே ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் கேடு விளைவிப்பதாக மாறிவிடுகின்றது. ஆனால் பெரும் செல்வந்தர்களாக உள்ளவர்கள் ஊழலில் ஈடுபட்டு மேலும், மேலும் செல்வம் குவிப்பதை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்களால் நாட்டின் பொருளாதாரமே மோசமாகப் பாதிக்கப்படுகின்றது. இந்தியாவில் தனியார் நிறுவனங்களுக்கு அலைக் கற்றைகளை ஒதுக்கியதில் லட்சக் கணக்கான கோடி ரூபாய்களுக்கு ஊழல் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டது. அந்த விவகாரம் இன்னமும் நீதிமன்றத்தின் விசாரணையின் கீழ் உள்ளது. இந்த ஊழல் விவகாரத்தால் இந்தியப் பொருளாதாரத்துக்குப் பெருத்த அடி விழுந்துள்ளதாகப் பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். வெளியில் வந்த இந்த விவகாரம் இப்படியென்றால் இன்னமும் வெளிவராது மர்மமாக உள்ளவை எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப் பார்க்கவே அச்சமாக உள்ளது.

லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் ஊழல் பிறப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன. லஞ்சத்தை வாங்கிப் பழகிக் கொண்டவனின் கரம் சதா அரித்துக் கொண்டே இருக்கும். மேலும் லஞ்சத்தினால் சுகம் கண்ட எவனும் அதிலிருந்து விலகியிருக்க மாட்டான். எமது நாட்டைப் பொறுத்தளவில் லஞ்சத்தையும், ஊழலையும் ஒழிக்க வேண்டியவர்களே இவற்றில் அதிகளவில் ஈடுபடுவதாகச் செய்திகள் கூறுகின்றன. மேலும் அதிகாரத்தில் இருப்பவர்களின் ஆசீர்வாதமும் இவர்களுக்கு உள்ளதால் எந்தவிதமான பயமோ, பதற்றமோ இல்லாது இவர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

ஆன்மிகம் என்பது மக்களின் உணர்வுடன் தொடர்புடையதொரு விடயமாகும். வெவ்வேறு மதப் பிரிவினர் காணப்பட்டாலும் ஆன்மிகம் என்ற பதம் இவர்கள் அனைவருக்கும் பொதுவானது. ஆனால் புனிதமான இந்தத் துறையினுள்ளும் ஊழலும் மோசடியும் புகுந்து விளையாடுவதைக் காண்கின்றோம். சில ஆன்மிகவாதிகள் மக்களுக்கு அருள்வாக்குகளை அள்ளி வீசி விட்டுத் தம்மீது சேற்றைப் பூசிக்கொள்வதைக் காண்கின்றோம்.



அண்மைக் காலமாக இந்த இழிநிலை அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆன்மிக அடிப்படையில் இழிவான செயல்களில் ஈடுபடுவதையும் ஊழல் என்றுதான் கூறவேண்டும். ஏனென்றால் தம்மை மலை போன்று நம்பியிருந்த மக்களை ஏமாற்றுவதும் நம்பிக்கைத் துரோகம் புரிவதும் ஊழல் என்ற வரையறைக்குள்தான் அடங்குகின்றது.

இன்று பெரிய பெரிய நிறுவனங்கள் தமது வருவாயைப் பெருக்கிக்கொள்ளும் முகமாக மக்களைப் பற்றி சிந்திக்காது தவறான செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. அண்மையில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பால்மா வகைகள் தொடர்பான பிரச்சினை இந்த நாட்டையே உலுக்கிப்போட்டு விட்டது. பால்மா கெட்டுப் போகாமல் இருப்பதற்காக மக்களுக்குத் தீமை விளைவிக்கக் கூடிய இரசாயனத்தை அதனுடன் கலந்து நிறுவனமொன்று பால்மாவைச் சந்தைக்கு விட்டமையானது மிகப் பெரிய ஊழல் மோசடியாகும். இதனால் கடந்த காலங்களில் பலர் பாதிக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ஆனால் சில வாரங்கள் அத்தகைய பால்மாக்களுக்குத் தடை விதிக்கப்பட்டதுடன் அந்த விடயம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. திரை மறைவில் என்னென்ன காரியங்கள் அரங்கேறி இருக்குமோ என்பது அந்த ஆண்டவனுக்கும் தெரியுமா என்பது சந்தேகமே.

எனவே இன்று மனித சமுதாயத்தை விதம் விதமான நோய்கள் மட்டுமல்லாது ஊழல், மோசடி என்பனவும் அரித்துக்கொண்டிருக்கின்றன. இதனால் தனி மனிதனும் அவன் சார்ந்த சமூகமும், முழு நாடும் மிகப் பெரிய பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே ஊழலுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இதைக் களைவதற்கு ஆட்சியாளர்கள் முழு அளவில் செயற்பட வேண்டும். மேலும் இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கடும் தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும். மேலும் ஊழல் புரிவோர் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கும் போதுதான் இதனை ஓர் அளவிலாவது கட்டுப்படுத்த முடியும். ஊழல் மற்றும் மோசடி இல்லாத உலகு மலரும். அந்த நாளே இவ்வுலகின் பொற்காலத்தின் ஆரம்பம் எனக் கூறலாம்.

CMYK

# குழந்தையைத் தத்தெடுப்போர் கவனத்துக்கு

பி.சுபீகா

குழந்தைப் பாக்கியம் கிடைக்காத தம்பதியர் குழந்தைகளைத் தத்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் வழக்கத்துக்கு மாறாக ஒரு குழந்தையைத் தத்தெடுப்பதற்கு சில மறுக்க முடியாத காரணங்கள் இதோ!

பொதுவாக குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களும், திருமணமாகி நீண்ட நாள் குழந்தை இல்லாதவர்களும் இத்தகைய தத்தெடுப்பு முறையைப் பின்பற்றி ஒரு பிள்ளையை வீட்டுக்கு அழைத்து வருவார்கள். சமூக சேவை நிறுவனங்கள் அல்லது ஆச்சிரமங்கள் ஆகிய இடங்களில் உள்ள குழந்தைகளை அவர்கள் தத்தெடுப்பார்கள். ஆனால் தற்போதைய காலத்தில் இது முற்றிலும் மாறுபட்ட காரியமாக உள்ளது.

அதாவது மக்களின் பார்வை முற்றிலும் மாறியுள்ளது. இப்பொழுதெல்லாம் தத்தெடுக்கும் தம்பதியர்கள் அனைவரும் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் அல்லர். அனாதை குழந்தைகளுக்கு வாழ்க்கை கொடுக்கும் வண்ணம் சமூகத்துக்கு நன்மை செய்வதும், தாம் பெற்றெடுத்த குழந்தைக்கு ஒரு நல்ல சகோதரர் அல்லது சகோதரியைத் தேடுவதும் அல்லது குடும்பத்தில் மற்றொரு நபரைச் சேர்த்துக் கொள்வதும் போன்ற காரணங்களால் அவர்கள் தத்தெடுத்துக் கொள்கின்றனர்.

## குழந்தைகளிடம் உள்ள உண்மையான அன்பு

வழக்கமாக நடைமுறையில் இல்லாவிட்டாலும், சில தம்பதியர்கள் குழந்தைகளின் மேல் உள்ள அளவில்லாத அன்பின் காரணமாக அவர்களை தத்தெடுக்க விரும்புகின்றனர். அது அவர்களின் தலைமுறையாக அல்லது உறவுமுறையாக இல்லாவிட்டாலும் அவர்களுக்கு இதில் வருத்தம் இருப்பதில்லை.

## ஒரே மாதிரி குழந்தைகளை அதிகம் கொண்டவர்கள்

தம்பதியர்கள் தங்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தால் அடுத்த குழந்தையாவது பெண்ணாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அதேபோல, இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளவர்கள் அடுத்தது ஆணாக இருக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். இயற்கையாக பிள்ளை பிறக்கும் போது நாம் விரும்பிய பாலினம் எமக்குக் கிடைக்காமல் போகலாம். அப்படி இருக்கும் போது தத்தெடுப்பதால் இந்தக் குறையை சுலபமாக மாற்றி விடலாம். இதன் மூலம் தம்பதியர்கள் அவர்களுக்குத் தேவையான பாலினத்தில் குழந்தைகளைத் தேர்ந்தெடுக்க முடிகின்றது. சில நேரங்களில் தம்பதியர் பாலினத்தை கருத்தில் கொள்ளாமல் எந்தக் குழந்தையாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்கின்றனர். மற்றும் சிலர் ஒரே பாலினத்தில் இரு குழந்தைகளைக் கூடத் தத்தெடுத்துக்கொண்டு திருப்திப்பட்டுக்கொள்கின்றனர்.

## ஒரு குழந்தை கொண்ட பெற்றோர்கள்

ஒரே குழந்தை தனித்த குழந்தையாம்! இது உண்மைதான். சில தாய்மார்களால் கர்ப்ப காலத்தை மீண்டும் சந்திக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட சமயத்தில் தங்களின் ஒரே குழந்தை தனித்து இருப்பது நல்லதல்ல என்று உணரும் பெற்றோர்கள் மற்றொரு குழந்தையைத் தத்தெடுக்க முடிவு செய்கின்றனர். ஒரு குழந்தையைத் தத்தெடுத்து அதை வளர்த்து தங்கள் குடும்பத்தை எளிய முறையில் முழுமை அடையச் செய்கின்றனர்.

## தனி நபராக பெற்றவரின் அனுபவத்தை அடைவது

மிஸ் யூனிவர்ஸாக திகழ்ந்த சுஸ்மிதா சென், ஒரு குழந்தையை தத்தெடுத்துள்ளார். அவர் தனி நபராக இருந்து இதைச் செய்துள்ளார். அவர் இது குறித்து கூறியபடி 'இந்தப் பெண் குழந்தைக்கு ஒரு தாய் தேவை மற்றும் எனக்கு ஒரு பிள்ளை தேவை'. இதை விட எளிதான மற்றும் மிகவும் அழகான உறவு எதுவும் இருக்க முடியாது. இப்படி பிரபலமானவர்கள் மட்டுமல்ல, பெற்றோராகும் இன்பத்தை அனுபவிக்க விரும்பும் எவரும் இப்படி தனித்திருந்தே ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்க்க முடியும்.

## மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துதல்

உலகில் மேலும் குழந்தைகள் தேவைப்பட மாட்டார்கள் என்ற கண்ணோட்டம் சிலருக்கு உண்டு. அப்படிப்பட்டவர்கள் வீடு மற்றும் குடும்பமில்லாத குழந்தைகளை பெருகி வரும் மக்கள் தொகை உள்ள உலகத்திலிருந்தே எடுத்துக் கொள்ள முடியும் என்று நம்புகின்றவர்கள். ஆகையால் தத்தெடுக்க முனைகின்றனர். இது ஒரு மிகச் சிறந்த முடிவாகும். இதை போல் சமுதாயத்துக்கு எவராலும் நன்மை செய்ய முடியாது.

## மரபணு மற்றும் தாலிசீமியா கோளாறுகள்

மரபணுக் கோளாறு மற்றும் தாலிசீமியா நோய் போன்றவற்றால் அவஸ்தைப்படும் தம்பதியர்கள் இப்படிப்பட்ட குணப்படுத்த முடியாத நோய்கள் இருந்தால் கவலைப்பட வேண்டாம். குழந்தையைத் தத்தெடுக்க முயற்சிக்கலாம்.

## பிரசவ வலி இல்லாமல் குழந்தை பெறும் பாக்கியம்

மிகுந்த சோம்பலின் காரணமாக குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்வதும் நடக்கிறது. இதைக் கேட்பதற்கு வேடிக்கையாகத்தான் இருக்கும். பிள்ளைகளைப் பெறும் அளவுக்கு உடல் ஆரோக்கியம் இருக்கும் போது நாம் ஏன் தத்தெடுக்க வேண்டும்? இது பொதுவான கேள்விதான். ஆனால் சில பெண்கள் இந்த வலி, வேதனை ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காகத் தத்தெடுக்கின்றனர். இதனால் குழந்தை பிறந்த பின் உடல் எடை கூடுவது, அழகு குறைவது ஆகிய பிரச்சினைகளும் ஏற்படுவதில்லை என்பது அவர்களுக்கு வசதியாகி விடுகிறது. ஆகையால் வலியே இல்லாமல் குழந்தையைச் சொந்தமாக்கிக் கொண்டு விட முடியும்.



இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளவர்கள் அடுத்தது ஆணாக இருக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். இயற்கையாக பிள்ளை பிறக்கும் போது நாம் விரும்பிய பாலினம் எமக்குக் கிடைக்காமல் போகலாம். அப்படி இருக்கும் போது தத்தெடுப்பதால் இந்தக் குறையைச் சுலபமாக மாற்றி விடலாம்.

## வேலையின் நிமித்தம் குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் தத்தெடுத்தல்


சில தம்பதியர்களால் குழந்தையைப் பெற்றுக் கொள்வதற்கான நேரம், சக்தி மற்றும் அதற்கான காலத்தை இதற்கென்று செலவிட முடிவதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு தத்தெடுத்தல் ஒரு வரப்பிரசாதம் ஆகும். அவர்கள் முக்கியமாக பெண்கள் வேலை நிமித்தம் கர்ப்ப காலத்தை அதற்கேற்ப சந்திக்க முடிவதில்லை. அப்படிப்பட்டவர்கள் வேறு வழியின்றி தத்தெடுக்கின்றனர்.

## நண்பர் அல்லது உறவினருக்கு உதவுவது

ஒவ்வொருவருக்கும் தத்தெடுப்பதற்கு ஒரு காரணம் இருக்கும். சிலர் தங்கள் நண்பர் அல்லது உறவினருக்கு உதவி செய்ய இவ்வாறு செய்கின்றனர். அவர்களின் பொருளாதார சூழ்நிலையின் காரணமாக அல்லது பொருளாதார நிலையின் நிமித்தம் அவர்களுடன் இருப்பவர்கள் நண்பர்களின் குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்கின்றனர். சில தம்பதியருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. அப்படி இருக்கும்போது இரு குழந்தைகளையும் பார்த்துக் கொள்ள முடியாதவர்கள் ஒரு குழந்தையைத் தத்துக் கொடுக்க முடிவு செய்கின்றனர். குழந்தை இல்லாதவர்களும் இரட்டை குழந்தைகளின் ஒரு குழந்தையை சந்தோஷமாக ஏற்றுக் கொள்கின்றனர்.

## ஓரளவு வளர்ந்த குழந்தையைத் தத்தெடுப்பது

சிலர் மிகச் சிறிய குழந்தையைத் தத்தெடுத்தால் அதற்கு நீண்ட நேரம் செலவு செய்வது, இரவு கண் விழிப்பது மற்றும் சராசரி குழந்தைகளுக்கு செய்ய வேண்டிய காரியங்களை மேற்கொள்ள விரும்பாதவர்கள் அல்லது அதற்கென்று நேரம் செலவு செய்ய முடியாதவர்கள் ஓரளவு வளர்ந்த பிள்ளையைத் தேர்ந்தெடுத்து தங்கள் குழந்தையாக வளர்க்கின்றனர்.



# முதல் சூரியசக்தி கழிவறை இந்தியாவில் அறிமுகம்

உலகின் முதல் சூரிய சக்தி கழிவறையை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இக்கழிவறை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை, கழிவறை சவால்களுக்கு மறுஉருவாக்கம்' என்ற தலைப்பில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் ஆய்வில் ஈடுபட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் ஈடுபட்ட லிண்டன் குழுவினர் சூரிய சக்தியில் செயற்படும் கழிவறையைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக்கழிவறையில் பொருத்தப்பட்டுள்ள எட்டு சூரிய சக்தித் தகடுகள் மூலம் சூரிய ஒளி, மின்சாரமாக மாற்றப்படுகிறது. இக்கழிவறையில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடி இழை வடங்கள் 600 டிகிரி பரன்ஹீட்டுக்கும் அதிகமான வெப்பத்தை வெளிப்படுத்தி மனிதக் கழிவுகளை உயிரிக் கரிமமாக (பயோகார்) மாற்றுகின்றன.

இந்த உயிரிக் கரிமத்தை வேளாண்துறையில் மண் வளத்தை அதிகரிக்கப் பயன்படுத்தலாம். காபன் வெளியேற்றப்படாமல் மண்ணிலேயே தக்கவைக்கப்படுவதன் மூலம் பசுமையில்லா வாயுவான கரியமில வாயு (காபனீர் ஒக்சைட்) காற்றுமண்டலத்தில் கலப்பது தடுக்கப்படுகிறது. மண் வளத்தைப் பெருக்கும் உயிரிக் கரிமம், மண்ணுடன் 10 சதவீதம் சேர்க்கப்பட்டால் அது வழக்கமான மண்ணை விட 50 சத வீதம் அதிக அளவு நீரைத் தக்கவைக்கும் திறனைப் பெறுகிறது. இதனால், பயிர்களுக்குத் தேவையான நீரும், ஊட்டச் சத்துக்களும் போதிய அளவு கிடைக்கும். இந்த உயிரிக் கரிமத்தை உயிரி நிலக்கரியாக எரிக்கவும் செய்யலாம். வர்த்தக ரீதியாக எரிக்கும் உயிரி நிலக்கரியை விட இந்த உயிரிக் கரிமம் அதிக வெப்பத்தைத் தர வல்லது. தற்போது பயன்பாட்டில் உள்ள ஒரு கழிவறை ஒரு நாளில் 4 அல்லது 6 நபர்கள் பயன்படுத்தும் வகையிலானது. இப்புதிய கழிவறையை குறிப்பிட்ட வகையில் இணைப்பதன் மூலம் பல குடும்பத்தினர் பயன்படுத்த முடியும்.

பாதுகாப்பற்ற கழிவறைகளால் சேமிக்கப்படும் மனிதக் கழிவுகள், பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைகின்றன. இவற்றால் உணவு மற்றும் நீர் மாசுபடுவதுடன், ஆண்டு தோறும் உலகம் முழுவதும் 7 லட்சம் குழந்தைகள் இறக்க நேரிடுகிறது.

சோதனை முறையில் உருவாக்கப்பட்ட இக்கழிவறைகள் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை டெல்லியில் வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை இந்திய விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் பார்வைக்கு வைக்கப்பட உள்ளன.

# நைல் நதி நாகரீகத்தின் மகத்துவாரம்



ஹப்பியை உங்களுக்குத் தெரியுமா? இவர் தான் நைல் நதியின் கடவுளாகக் கருதப்படுபவர். ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் பெருகும்போது, மக்கள் ஒன்று கூடி ஹப்பி கடவுளுக்கு தங்கள் நாட்டின் வளத்தை அதிகரித்ததற்கு நன்றி கூறி மகிழ்வர்.

உலகிலேயே மிகவும் நீளமான நதி என்ற பெருமைக்குரிய நைல் நதியின் நீளம் 6,670 கிலோ மீற்றராகும். நைல் என்ற பெயர் நிலியோஸ் என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து உருவாக்கப்பட்டது.

இந்த சொல்லுக்கு, நதிப் பள்ளத்தாக்கு என்று பொருளாகும். இந்த நைல் நதியின் பயணம், ஆபிரிக்காவின் பிரமாண்டமான விக்டோரியா ஏரியில் இருந்து தொடங்குகிறது.

எதியோப்பிய மலையில் இயற்கையிலேயே பாயும் ஏராளமான ஓடைகள் உள்ளன. இந்த ஓடையின் நீர் அனைத்தும், அடிவாரத்தில் இருக்கும் விக்டோரியா ஏரியில் வந்து கலக்குகின்றன. இதன் காரணமாக ஏரி நிரம்பி, அதன் வடக்கு விளிம்பில் ரிப்பன் நீர் வீழ்ச்சி என்னும் ஒரு குறுகிய அருவி வீழ்ந்து நதியாகப் பாய்கிறது. இதுவே நைல் நதி என்ற பெயருடன், தனது நெடுந்தூரப் பயணத்தை தொடங்குகிறது. நைல்நதி எகிப்து, எதியோப்பியா, சூடான் ஆகிய நாடுகளில் பாய்ந்து, இறுதியில் மத்திய தரைக் கடலில் கலக்கிறது.

நைல் நதி உருவானவுடன், ஏராளமான மீன்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவை நதியையும், நதிக்கரையையும் தங்களின் வசிப்பிடங்களாகக் கொண்டன.

அப்போது அந்தப் பகுதியில் இருந்த எகிப்தியர்கள், ஈட்டிகளையும், வலைகளையும் கொண்டு நதியில் மீன் பிடித்து உணவாகக் கொண்டனர். கரையோரம் வாழ்ந்த பறவைகளையும், விலங்குகளையும் வேட்டையாடினர்.

விலங்குகளையும், மீன்களையும், பறவைகளையும் அள்ளித்தந்த நைல்நதிக் கரையோரத்திலேயே தங்களது வாழ்க்கையைத் தொடர்ந்தனர்.

எதியோப்பிய மலைகளில் படர்ந்திருக்கும் பனி உருகுவதாலும், கோடை காலங்களில் மலைகளில் கடும் மழை பெய்வதாலும், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்திலிருந்து, செப்ரெம்பர் மாதம் வரை நைல் நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது வழக்கம்.

வெள்ளமானது, நதியின் கரைகளை மீறி வெளிப்பாய்ந்து எகிப்தின் பாலைவனப் பகுதியை ஈரமாக்கும். வெள்ளப் பெருக்கு வடிந்தபின், நீர் பரவிய இடங்களில் கறுப்பு நிறத்தில் வண்டல் மண் படியும். இந்த மண், பயிர் செய்வதற்கு மிகவும் உகந்தது.

இந்த வண்டல் மண்ணில் எகிப்தியர்கள், பாபிரஸ் என்ற நாணல் செடிகளை வளர்த்தனர். இதிலிருந்து காகிதம் மற்றும் வாசனைத் திரவியங்களைச் செய்தனர்.

விளைந்த பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மிக எளிதாக எடுத்துச் செல்ல தக்கதொரு போக்குவரத்து சாதனமாகவும், நைல் நதி எகிப்தியர்களுக்கு உபயோகமாக இருந்தது.

இப்படித்தான், உலகின் பழைமையான எகிப்திய நாகரிகமானது, நைல்நதிக் கரையோரத்தில் உதித்தது. நைல் நதியின் குறுக்கில் கி.பி., 1960இல் இஸ்வான் அணைக்கட்டு கட்டப்பட்ட பிறகு, அதில் பருவ காலங்களில் பெருகி வரும் வெள்ள நீர் வீணாக்காமல் தடுக்கப்பட்டது.

நைல் நதியின் கடவுளாகக் கருதப்படுபவர் ஹப்பி. ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் பெருகும்போது, மக்கள் ஒன்று கூடி ஹப்பி கடவுளுக்கு தங்கள் நாட்டின் வளத்தை அதிகரித்ததற்கு நன்றி கூறுகின்றனர்.

## அன்பு

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா.

புழுதி துடைத்து நீராட்டி
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா.

அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா.

பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்த
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கி
தோளிற் போடும் அம்மா.

பாப்பா மலர்ப் பாட்டை நானும்
பாடி ஆடும் போது
வாப்பா இங்கே வாடா என்று
வாரித் தூக்கும் அம்மா.



# அழிந்து வரும் கடல் வாழ் பறவை

மனிதனின் செயற்பாடுகள் மற்றும் பேராசையினால் பல உயிரினங்கள் அழிந்து வருகின்றன. இந்த வரிசையில் கடற்கரைகளில் வாழும் பறவைகளும் சேர்ந்துள்ளன.

கடற்கரையை அண்டி வாழும் பறவையினங்கள் அவற்றின் எண்ணிக்கையில் அரைவாசியளவாக குறைந்து வருவதாக புதிய ஆய்வொன்று கண்டறிந்துள்ளது.

மோசமாக அழிவடைந்துவரும் விலங்கினங்களின் பட்டியலின் உச்சத்தில் இந்தப் பறவையினங்களில் 28 வீதமானவை இருப்பதாக பறவைகள் பற்றிய சஞ்சிகையொன்றில் வெளியான ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆல்பட்ரோஸ் குடும்பத்தைச் சேர்ந்த பறவையினங்களே வேகமாக அழிந்துவருவதாக பறவைகள் பாதுகாப்பு ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பெரும் வர்த்தக ரீதியான நவீன மீன்பிடி முறைகளாலும், பெருச்சாளிகள், காட்டுப் பூனைகள் போன்ற உயிரினங்களலும் இப்பறவைகளின் இனப் பெருக்கத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகளுமே இந்த அழிவுக்கு காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடல் மற்றும் கடல் சார்ந்த பகுதிகளின் ஆரோக்கியத்தை உறுதி செய்யவும், அவற்றுக்கு ஏற்படும் பாதிப்புக்களை எச்சரிப்பதற்கும் இந்த கடல்சார் பறவைகள் மிகவும் அவசியமானவை. ஆனால், உலகின் மொத்தப் பறவையினங்களில் இவை வெறும் 3.5 வீதமானவைதான்.

அடையாளம் காணப்பட்டுள்ள 346 வகையான கடல்சார் பறவையினங்களில் 4 வீதமான வற்றில் இந்த அழிவைக் காண முடிவதாகவும் கூறப்படுகிறது.

தரையில் இனப்பெருக்கம் செய்து, கடலுக்குச் சென்று உணவு தேடும் இந்தப் பறவை யினங்களிடம் அவதானிக்கப்பட வேண்டிய பல முக்கிய அம்சங்கள் இருப்பதாக கடல்சார் பறவைகள் பற்றி ஆய்வு நடத்தும் பேராசிரியர் ஜோன் க்ரொக்ஷல் கூறுகிறார்.

அல்பாட்ரோஸ் குடும்பத்தைச் சேர்ந்த 22 பறவையினங்களில் 17 இனங்கள் அருகிவிடும் அபாயம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பெரும் வர்த்தக ரீதியான மீன்பிடி நடவடிக்கைகளின்போது பெருமளவிலான பறவைகள் வலைகளிலும் கண்ணிகளிலும் சிக்கி உயிரிழந்து விடுகின்றனவாம்.

## பொது அறிவு

1. ஸ்பெயின் தேசிய சின்னம் எது?
கழுகு
2. துருக்கியின் தேசிய சின்னம் எது?
பிறையும் நட்சத்திரமும்
3. பிரான்ஸின் தேசிய சின்னம் எது?
அல்லி
4. ஆஸ்திரேலியாவின் தேசிய சின்னம் எது?
கங்காரு
5. டென்மார்க்கின் தேசிய சின்னம் எது?
கடற்கரை
6. ஹாங்காங்கின் தேசிய சின்னம் எது?
பொகினியா
7. இஸ்ரேலின் தேசிய சின்னம் எது?
மெழுகுவர்த்தி வாங்கி
8. கயானாவின் தேசிய சின்னம் எது?
காஞ்சே வால்குருவி
9. சூடானின் தேசிய சின்னம் எது?
செயலாளர்ப் பறவை
10. அயர்லாந்தின் தேசிய சின்னம் எது?
இலவங்கமும் மூன்று இலைகளும்

இ. புஷ்பராஜ்
யாழ் மத்திய கல்லூரி


Hero
கேளிக்கை உலகின் புதிய பரிணாமம்
அறிமுகப்படுத்துகின்றோம் கண்களை கவரும் விதத்தில் அமையப்பெற்ற புதிய ஹீரோ ப்லஷர். நவீன வசதிகளுடன்
ஓட்டிச்செல்லுங்கள் புதிய புத்துணர்ச்சியுடன்
புதிய ஹீரோ ப்லஷர் உங்கள் மனதை கொள்ளை கொள்ளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
புதிய மாற்றங்களின்றி வாழ்வின் புத்துணர்ச்சி ஏது?
புதிய
Pleasure
The light 'n' zippy scooter
2014
அறிமுக விலை
ரூ. 178,563 + vat
Hero
5
WARRANTY
கைப் பேசிகளை ச்சார்ஜ் செய்ய ஏற்ற வசதிகள்
ரியூப் லெஸ் ரயர்கள் மற்றும் தரமான ப்ரேக் முறை
லக்கேஜ் பெட்டியில் லைட் வசதி
அழகிய மீற்றர் தொகுதி
(C/13321)
*நிபந்தனைகளுக்குட்பட்டது
☎: 011 5777000
நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.
Abans


Softlove®
பேபிடயபர்
இலங்கை தாய்மார்களின் முதற்தர தெரிவு,
தற்போது உங்கள் செல்லக் குழந்தைகளுக்கும்
S Mini
M Medi
L Maxi
XL Junior
Softlove®
Baby Diaper
A முன்பக்கம் ஒட்டக்கூடியதும் திரும்ப ஒட்டக்கூடியது Frontal Tape & Resealable Tape
B மென்மையான மேலுறை Ultra Soft Cover
C Extra Absorbent
D கசிவுத்தடுப்பு துவாய் Leak Guard
E காற்றோட்டமான துணி போன்ற பின்னுறை Cloth Like, Breathable Back Sheet
Softlove
MAXI
36
160/= இலிருந்து
Softlove Smart Pants
softlove is your baby's love
1 அதி உறிஞ்சும் தன்மை Extra Absorbancy
2 கச்சிதமாகப் பொருந்தும் Super Fit Pant
3 மென்மையான காயக்கூடிய மேலுறை Soft & Dry Cover
4 பக்க கசிவுத்தடுப்பு துவாய் Side Leak Guard
Smart Pants
72/= இலிருந்து
HEALTH DEPARTMENT APPROVED SRI LANKA
(C/13184)
Marketed By
GRO UNIVERSAL MARKETING


LG
Life's Good
INVERTER V கொம்ப்ரசர்
60% வரை மின் சேமிப்பு
18 மாதம் வட்டி இல்லை
வெப்பத்தை தணியுங்கள்
LG INVERTER V வளிச்சீராக்கி
BLDC கொம்ப்ரசர்
BLDC பேன் மோட்டர்
ப்ளாஸ்மாஸ்டர் பில்ரர்
LG யின் புதிய ப்ளாஸ்மா வளிச்சீராக்கியானது வளியிலுள்ள நோய்க்கிருமிகளை அழித்து ஆரோக்கியமான வளியை வெளிவிடுகின்றது.
99.9%
அழிக்கிறது
114,900
நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் காட்சியறைகளில் பெறலாம்
Abans.com
• சங்கானை 021 4920660., 021 2250106. • சுன்னாகம் 024 2240440. • சாவகச்சேரி 021 2270005. • யாழ்ப்பாணம் A 021 2220981. • யாழ்ப்பாணம் B 021 3202421.
• கனகராயன் குளம் 077 2095070. கிளிநொச்சி 021 2285411. கொடிகாமம் 077 1093730. மல்லாவி 077 3565774. மானிப்பாய் 021 2255259. முல்லைத்தீவு 021 2290046.
நெல்லியடி 021 2264934. பருத்தித்துறை 021 2262456. திருநெல்வேலி 077 3599000. வவுனியா 077 3590692. பாளை 021 3202209.
Abans

# 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் காட்சி நாளை வியாழன் முதல் 4 நாள்களுக்கு



யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி நாளை வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு 238, பிரதான வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும் திருப்பாடுகளின் காட்சி, வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடனும் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களுடனும் மேடையேற்றப்படவுள்ள வேள்வித் திருமகன் ஆற்றுகைக்கான ஏற்பாடுகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் முதன் முதலாக கடந்த 2012 ஆம் ஆண்டு மேடையேற்றம் கண்ட வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி மேலும் புதிய மாற்றங்களுடன் இம்முறை இரண்டாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது என்பதுடன் இம்முறை இதற்கான நெறியாள்கையை திரு மதி வைதேகி செல்மர் எமில் மேற்கொண்டுள்ளார். திருப்பாடுகளின் காட்சி வரலாற்றில் பெண் ஒருவர் அதனை நெறியாள்கை செய்கின்றமையும் இம் முறையே என்பதும் குறிப்பிடத்தக்கது.

நீ.மரியசேவியர் அடிகளாரால் இதுவரை எழுதப்பட்ட திருப்பாடுகளின் காட்சி பிரதிகளில் இருந்து மொழி நடையிலும், பொருள் அளிக் கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்டுள்ள இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படும் திருப்பாடுகளின் காட்சியைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிடுகின்றமையும், இலங்கையிலே இடம்பெறுகின்ற மிகப் பெரிய அரங்க ஆற்றுகையாக இது அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.






# உங்கள் இலக்கு வெற்றியை நோக்கிச் செல்ல..



உங்கள் வாழ்க்கையில் எந்தச் செயலைச் செய்வதாக இருந்தாலும், குறிக்கோளோடு செயற்படுங்கள். எம்மால் முடியவில்லையே என்று துவண்டு போகமால், தொடர்ந்து உழையுங்கள். அதுவே ஒருநாள் மிகப்பெரிய சாதனையாக மாறும்.

வெற்றியை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்றால் குறிக்கோளைப் பட்டியலிடுங்கள்.

குறுகிய கால குறிக்கோள், நீண்ட கால குறிக்கோள் என்று பட்டியலிட்டு, சாதனை படைக்கும் திறமையுள்ளவர்களாக உங்களை மாற்றுங்கள். அதுவே பிற்காலத்தில் உங்களைச் சாதனை செய்யத் தூண்டும் கருவியாக மாறும்.

**உங்கள் குறிக்கோளை சாதனையாக மாற்ற நீங்கள் செய்ய வேண்டியவை:**

முதலில் உங்கள் மனதில் உள்ள குறிக்கோளை, ஒன்றன் பின் ஒன்றாக பட்டியலிட்டு எழுதுங்கள். உங்கள் குறிக்கோளைச் சாதனையாக மாற்ற இதுவே முதல் படியாகும். பிற்காலத்தில் அது நிறைவேறும் போது, நீங்கள் குறித்து வைத்தவற்றை எடுத்துப் பார்க்கும் போது குறிக்கோளை எய்தி முடித்து விட்டோம் என்ற மகிழ்ச்சி தோன்றும்.

குறித்தவற்றில் எது உங்கள் வாழ்க்கைக்கு முதலில் முக்கியமானது என்று தேர்ந்தெடுங்கள். உங்களது குறிக்கோளை ஒன்றன் பின் ஒன்றாக முடிக்க வேண்டும் என்று நினைக்க வேண்டுமே தவிர, அனைத்தையும் ஒரே சமயத்தில் செய்து முடிக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாது. அதனால் முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் அரைகுறையாக அல்லது குறுக்கு வழியில் முடிக்க நேரிடும்.

எனவே சரியான இலக்கை அடையும் வரை தொடர்ந்து உழைக்க வேண்டும்.

உங்களது குறிக்கோளை எவ்வளவு நாள்களுக்குள் அடைய வேண்டும் என்ற கால அளவை நிர்ணயிங்கள். குறுகிய கால குறிக்கோள் என்றால் 1 - 2 வாரங்கள் ஒதுக்குங்கள்.

நடுத்தர குறிக்கோள் என்றால் 2 முதல் 6 வாரங்கள் ஒதுக்குங்கள். நீண்ட கால குறிக்கோள் என்றால் 6 முதல் 12 மாதங்கள் ஒதுக்குங்கள். ஒதுக்குவது பெரிதல்ல, அந்த நேரத்துக்குள் முடிப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

குறித்த நேரத்துக்குள் உங்களது குறிக்கோளைச் சாதனையாக மாற்றினால், அதை மகிழ்ச்சியாகக் கொண்டாடுங்கள்.

அவ்வாறு கொண்டாடும்போது சாதித்து விட்டோம். நிறைய சாதிக்க வேண்டும் என்று தோன்றும்.

எந்தச் செயலைச் செய்வதற்கு முன்பும் குறிக்கோளோடு செயற்பட வேண்டும். அது நிறைவேறும் வரை தொடர்ந்து உழைத்தல் வேண்டும். என்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணத்துடன், செயல்பட்டால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.


> " எந்தச் செயலை செய்வதற்கு முன்பும் குறிக்கோளோடு செயற்பட வேண்டும். அது நிறைவேறும் வரை தொடர்ந்து உழைத்தல் வேண் டும். என்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணத்துடன், செயல்பட்டால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.



# வெற்றியாளராக மாற நாவன்மை அவசியம்

ஒரு மனிதன் வெற்றியாளராக மாறுவதற்கு நிறையப் பண்புகள் தேவைப்படுகின்றன. மனிதனுடைய நற்பண்புகளே அவனை வெற்றியாளராக உருவாக்குகிறது.

நாம் வெற்றியாளராக உருமாற, நல்ல பேச்சுத் திறமை இருக்க வேண்டும். சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பது முதுமொழியாகும். பேச்சு என்பது ஒரு கலை. ஒரு வாசகம் ஆயினும் திருவாசகமாகப் பேச வேண்டும். எதைக் கொட்டினாலும் அள்ளி விடலாம். ஆனால்வார்த்தையைக் கொட்டினால் அள்ள முடியாது என்பது ஆன்றோர் வாக்கு.



உலகிலேயே பயங்கரமான ஆயுதம் நாக்குத் தான். அதனால் தான் நம்முடைய நாக்கை முப்பத்திரண்டு பற்கள் காவல் காக்கின்றன. எனவே நம்முடைய பேச்சு சுருக்கமாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும். இன்னும் சொல்வதானால், எத்தனையோ பிரச்சினைகள் பேச்சு மூலமே சமரசம் செய்யப்படுகின்றன. ஒருவருடைய இதமான பேச்சு பகைவரைக் கூட நட்புப் பாராட்ட வைக்கும். பேச்சுத் திறமை யினாலே சிகரத்தைத் தொட்ட சாதனையாளர்கள் பலபேர் உள்ளனர்.

# குழந்தையின் மூளையை பலப்படுத்தும் இசைப் பயிற்சி

குழந்தைகளுக்கு இசைப் பயிற்சி அளிப்பதால் மூளை பலம் பெறும் என்று சமீபத்தில் நிகழ்த்திய ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.



குழந்தைகளின் இளம் பருவத்திலேயே பாடத்தைத் தவிர, இசையைத் தனிப் பயிற்சியாக அளிக்க வேண்டும். அது, நாளடைவில் குழந்தைகளின் மூளை பல மடங்காக பலம் பெற உதவுகிறது.

குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டுவதற்கும், மூளைக்குச் செல்லும் நரம்புகள் புத்துணர்ச்சி அடைவதற்கும் உதவியாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிலும், ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பது, அவர்களின் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நல்ல அனுபவத்தை ஏற்படுத்துவதோடு, அவர்களது கற்பனைத் திறனை விரிவடையச் செய்கிறது என்று ஆய்வு கூறுகிறது.

குறைந்தபட்சம் ஒரு வருடமாவது இசைப் பயிற்சி அளிப்பதன் மூலம் மூளை பலப்படும், நினைவாற்றல் அதிகரிக்கும் என்று ஆய்வு தெரிவித்துள்ளது.

# நிமிர்ந்து உட்கார்ந்தால் அதிக நேரம் படிக்கலாம்

மாணவர்கள் நிமிர்ந்து உட்கார்ந்து படித்தால் அதிகளவு நேரம் படிக்க முடியும். குனிந்து வளைந்து உட்காரும் போது எமது நுரையீரல் சுருங்குவதால் நாம் சுவாசிக்கும் ஒட்சிசன் அளவும் அதன் மூலம் நம்மூளைக்குச் செல்லும் ஒட்சிசன் அளவும் குறையும்.

அதனால் படிக்க உட்கார்ந்த சிறிது நேரத்திலேயே கொட்டாவி விட ஆரம்பித்துவிடுவோம். பிறகு நமக்குப் படிப்பில் ஆர்வம் இல்லை என்று முடிவுக் கும் வந்துவிடுவோம். கொட்டாவி ஒட்சிசன் குறைபாடுதானே தவிர ஆர்வக்குறைபாடு இல்லை.

எனவே நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து மாணவர்கள் படித்தால் சுவாசமும் சீராக இருக்கும். சோர்வும் ஏற்படாது.



# உலகப் பொதுமையில் மனிதர்களுக்கிடையிலான துன்பியல் 'தவல பீஷண' நாடக ஆற்றுகை

எஸ்.ரி.குமரன்



இலங்கையின் சிங்கள நாடக உலகின் புகழ்பூத்த முன்னணி நாடக நெறியாளர் தர்மசிறி பண்டார நாயக்காவின் 'தவல பீஷண' நாடக ஆற்றுகை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நாடகமானது ஷோன் போல் சாத்ரேவின் 'மென் வித்தவுட் சடோவ்ஸ்' என்ற நாடகத்தின் சிங்கள வடிவமாகும். இந்தியாவின் புதுடில்லியின் பாரத் மஹோத்சவ் சர்வதேச நாடக விழாவில் 2013 ஆம் ஆண்டில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இந்த நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது டன் 1988 ஆம் ஆண்டு அரச நாடக விழாவில் தேசிய விருதுகளையும் பெற்றுக்கொண்ட படைப்பாகும். ஷோன் போல் சாத்ரேவின் 'மென் வித்தவுட் சடோவ்ஸ்' நாடக வடிவத்தைச் சிங்கள மொழியில் சிறில் சி.பெரேரா மொழி பெயர்ப்புச் செய்துள்ளார். இந்த நாடகத்துக்கான இசையை பிரேமசிறி கொம தாச வழங்கியுள்ளார்.

பல்வேறு பகுதிகளில் ஆற்றுகை செய்யப்பட்ட இந்த நாடக ஆற்றுகை வடிவமானது, யாழ்ப்பாணத்து நாடக ரசிகர்களுக்கு விருந்தளிப்பதற்காக வீரசிங்கம் மண்டபத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது. இந்த ஆற்றுகையின் உள்ளடக்கம் அரங்கமூலகங்களின் இணைவு, ஆற்றுகைச் சிறப்பு என்பவற்றின் அடிப்படையில் இப்படைப்பை நோக்குதல் பொருத்தப்பாடுடையதாக விளங்குகின்றது.

இரண்டாம் உலகப்போரில் பிரான்ஸ் தோல்வியடைந்ததன் பின்னர் ஹிட்லருடைய ஜேர்மன் ஆட்சிக்கு கீழ்பட்டதாக இருந்த பிரான்ஸில் மார்ஷல் பிரேயின் ஆட்சியைப் பின்னணியாகக் கொண்டு 1947 இல் இந்நாடகம் எழுதப்பட்டது. பிரான்ஸ் நாட்டை சுதந்திரமடையச் செய்யும் குறிக்கோளுடன் பிரான்ஸ் நாட்டுப்பற்றாளர்கள் குழுவொன்று பேரேயினுக்கும் ஜேர்மன்களுக்கும் எதிரான ஒரு கொரில்லாப் போராட்டத்தை மேற்கொண்டார்கள். ஷோன்போல் சாத்றே இரண்டாம் உலகப்போர் கால கட்டத்து பிரான்ஸ் நாட்டின் சம்பவங்களையும், நிலைமைகளையும் பயன்படுத்திக் கொண்டே இந்த நாடகத்தை எழுதினார். இந்த நாடகமானது அவருடைய இருப்பியல் வாத தத்துவத்தை வலியுறுத்தியுள்ளது. அவருடைய நாடகபாணியில் மிகவும் ஆழமான மனிதநேயத் தன்மையுடைய நாடகப்படைப்பாகும். இப்படைப்பின் சிங்கள மொழி பெயர்ப்பைத் தர்மசிறி பண்டார நாயக்கா தனக்கேயுரிய பாணியில் நவீன நாடகங்களின் உத்திப்போக்குகளை உங்வாங்கிய வகையில் படைப்பாக்கம் செய்துள்ளார். இதன் அடிப்படையில் இந்நாடகம் பற்றி நோக்குதல் சிறப்பிற்குரியது.

இந்த நாடகம் நான்கு காட்சிகளைக் கொண்டு தத்ரூபமாக ஆக்கப்பட்டுள்ளது. முதலாம் அங்கத்தில் ஹென்றா கனோறிஸ் ஷோர்வியர் லூஸி மற்றும் லூஸியின் இளம் சகோதரன் பிறாங்கொயிஸ் ஒரு கொரில்லா இயக்கத்தின் அங்கத்தவர் என்று கைது செய்யப்படுகின்றார்கள். ஒவ்வொருவரும் குற்ற ஒப்புதல் செய்யப்படுகின்றார்கள். இராணுவ வீரர்களால் விசாரணை செய்யப்படுகின்றார்கள். விசாரணைகள் சித்திரவதைகள் இந்த இயக்கத்தின் தலைவனை கைது செய்ததற்காகவே இடம்பெறுகின்றன. இறுதியில் தலைவர் ஜோன் கைது செய்யப்படுகின்றான். இவன் விவசாயி போன்ற போர்வையில் உள்ளதன் காரணத்தினால் இராணுவத்தினர் குறைவாகவே சந்தேகம் கொள்கின்றார்கள்.

பிறாங்கொயிஸ் தன்னுடைய அச்சத்தை வெளிப்படுத்திக்கொண்டு இருக்கிறார். அவருடைய சகோதரியான லூஸி தன்னுடைய குழுவின் தலைவரான ஜோன் இன்னும் உயிரோடு இருக்கின்றார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றார். கனோரியஸ் தான் எவ்வாறு சித்திரவதைகளுக்கு உட்பட்டு தப்பினார் என்பதைக் கூறும் போது லூஸி சித்திரவதையைப் பற்றி பேசவேண்டாம் என்றும் தலைவரைப்பற்றிய நம்பிக்கையுடன் இருக்கும்படியும் கூறுகின்றார். சித்திரவதைக்கு உள்ளாகும்போது தான் அதனை எதிர்கொள்வதை விட ஒரு துரோகியாகக் கூடும் என்ற அச்சத்தை பிறாங்கொயிஸ் வெளிப்படுத்துகின்றான்.

நித்திரையில் இருந்து எழும்புகின்ற ஹென்றி தன்னைக் கைது செய்தமைக்கான காரணத்தை ஏனைய கைதிகளிடம் வினாவுகின்றார். தான் அப்பாவிகளைக் கொன்றதாக அவர் கூறுகின்றார். விசாரணைக்கு ஷோபியரைக்கூட்டிக் கொண்டு போகின்றார்கள். ஹென்றி தன்னோடு நடனமாடுவதற்கு லூஸியை அழைக்கின்றார். ஷோபியரைச் சித்திரவதைக்குட்படுத்துவதை அவர்கள் புரிந்து கொள்கின்றார்கள். லூஸி தன்னுடைய அச்சத்தைப் போக்கிக் கொண்டு தலைவரைப் பற்றிப்பேசுகின்றாள். புதிய கைதியாக அவர்களுடைய தலைவன் ஜோன் கொண்டு வரப்படுகின்றான். எல்லோரும் கொல்லப்பட்டு விட்டனர் என்று ஜோன் கூறுகின்றான். கனோலிஸை விசாரணைக்குக் கொண்டு செல்கின்றார்கள். தன்னால் மற்ற எல்லோரும் துன்புறுத்தப்படுகின்றமை பற்றி ஜோன் கவலைப்படுகின்றார். சித்திரவதைக்கு உட்படுத்தும் போதுதான்; ஜோனை எவ்வளவு தூரம் நேசிக்கின்றார்கள் என்பதனைப் புரிந்து கொள்ளலாம் என்று லூஸி கூறுகின்றார். ஒரு சுருட்டைப் புகைத்துக்கொண்டு ஹென்றி தன்னுடைய மரணத்திற்கு ஒரு சாட்சியாக இருக்கின்றமை பற்றிய சந்தோஷமடைவதாகக் கூறுகின்றார். தன்னால் பார்க்கக் கிடைக்கும் இறுதி நபராக ஜோன் உள்ளமையைப் பற்றி பெருமையை லூஸி வெளிப்படுத்துகின்றார். ஹென்றியை விசாரணைக்குக் கொண்டு செல்கின்றார்கள்.

இரண்டாம் அங்கத்தில் சிறைக் கைதிகளின் செயற்பாடுகள் ஒவ்வொருவருக்கொருவர் வேறு பாடானதாகக் காணப்படுகின்றது. சித்திரவதை தாங்க முடியாமல் ஷோபியர் யன்னலால் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கின்றார். அவர்களுடைய குறிக்கோள் ஒன்றாக இருந்தாலும் தங்களுடைய கடந்த கால செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுகின்றார்கள். கிளர்ச்சியாளர்களுடைய செயற்பாடுகள் பற்றிய வானொலிச் செய்திகளை செவிமடுத்துக்கொண்டு கைதிகள் தங்களுடைய மிகுதிக்காலம் பற்றிக் கலந்துரையாடுகின்றார்கள்.

மூன்றாம் அங்கத்தில் சித்திரவதைக்குட்படுத்தும் போது எவராவது ஒருவர் தலைவரை யார் என்று வெளிப்படுத்துவார் என்ற அச்சம் கைதிகளிடம் நிலவுகின்றது. சித்திரவதையின்போது லூயிஸ் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றாள். ஆயினும் அவள் ஒன்றும் வெளிப்படுத்தவில்லை. தங்களுக்குள் மிகவும் பலவீனமானவரான பிரான்ஸிஸ் சித்திரவதையின் போது காட்டிக்கொடுக்கக்கூடும் என்ற பயத்தில் கைதிகளால் கொல்லப்படுகிறார். தான் எங்கு இருக்கிறார் என்ற கேள்விக்கு தவறான தகவல்களை வழங்கும்படி ஜோன் கூறுகின்றார்.

தன்னுடைய அடையாளத்தை மறைத்துக்கொண்ட காரணத்தால் ஜோன் தப்பியுள்ளார். தான் திருமணமானவன் எனவும் ஓர் இரவு பிள்ளைப்பிரசவத்தின்போது தன்னுடைய மனைவி இறந்து விட்டாள் என்பதையும் ஜோன் கூறுகின்றான். சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட ஷோபியரின் சடலத்தைப்பற்றி ஜோன் கூறுகின்றான். லூஸியை சித்திரவதைக்குட்படுத்தும் போது ஜோன் பதற்றமடைகின்றான்.

நவீன நாடகத் துறையின் போக்குக்கு கேற்ப அனைத்து நுட்ப முறைகளையும் உள்வாங்கிய வகையில் சிறந்ததொரு நாடகப் படைப்பாக ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது. நவீன நாடகத் துறையில் பெரு வளர்ச்சியடைந்த நிலைமையினை அரங்க மூலகங்களின் கையாள்கை இவ் ஆற்றுகைக்கு ஊடாக எடுத்துக்காட்டி நிற்கின்றது. வாழ்வியல் யதார்த்த துன்பியலினை அரங்க மூலகங்களின் பொருத்தப்பாடான இணைப்பின் மூலம் நாடக ஆர்வலர்கள் நிறைந்த அவையிலே நல்லதொரு பொழுதாகவும் கற்றலுக்குரிய வாய்ப்பாகவும் இந்த நாடக ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது.

இவ்வகையில் யாழ்ப்பாணத்து நாடக ஆர்வலர்களுக்கு சிறந்ததொரு நாடக ஆற்றுகையை நெறியாளர் தர்மசிறி பண்டார நாயக்கா அவர்களின் நாடக அணியினர் வழங்கியிருந்தமை சிறப்பிற்குரிய விடயமாகின்றது.

மனிதர்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியின் விளைவால் ஏற்படும் துன்பியல் யதார்த்தை அரங்க மூலகங்களின் பொருத்தமான இணைப்பின் மூலம் ஆற்றுகை வெளியில் வாழ்வியல் யதார்த்தமாக படைப்பாக்கம் செய்யப்பட்ட வகையில் சிறப்புக்குரிய ஆற்றுகை வடிவமாக தவல பீஷண ஆற்றுகை விளங்கு கின்றது.

# புத்தகசாலை

## நூல்: எழுச்சிப் பாதை

### வெளியீடு:சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

எழுச்சிப் பாதை என்று தலைப்பிட்டு எழுச்சித் தந்தை எனப் புகழ் நிலைத்த ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் புகைப்பட அட்டையைத் தாங்கி இந்த நூல் வெளிவந்திருக்கிறது.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம். புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் வெளியீடான இந்த நூலில் கழகங்களின் பணி செய்யும் வலிமையைப் பயன்படுத்திச் செயலாற்றிய சமூக சேவையாளரின் எழுச்சிப் பயணத்தின் தொகுப்புரைக்கும் பாதையே இது.

நூலுருப் பெற்றுள்ள எழுச்சிப் பாதை நுகர்வோரைச் சேவையின்பால் ஈர்த்துச் சமூக முன்னேற்றத்துக்காக உழைக்கத் தூண்டும் எழுச்சி பெற்றதாகும்.

ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் வாழ்வும் பணியும் நூலின் பக்கங்களை நிரப்பினும் அவரது சேவையின் வீரியத்தை விளக்கி அவர் வாழ்ந்த வாழ்வின் வழி எம்மைச் சமூக சேவைக்கு முன்நடத்தும் சிறப்பான கட்டுரைகளாக அவை ஒளிருகின்றன.

பேராசிரியர்களான சோ.சந்திரசேகரன், சு.மோகனதாஸ் ஆகியோரின் கட்டுரைகளும் கல்வியியலாளர்கள் பலரின் எழுத்தாக்கங்களும் இந்த நூலை வளப்படுத்துகின்றன. பேராசிரியர் சபா. ஜெயராஜா கலாநிதி சோ.பிரபோதயன் ஆகியோரின் ஆங்கில ஆக்கங்களும் நூலை அலங்கரிக்கின்றன.




சமூக சேவையாளராக வாழ்ந்த ஆர்.எம்.நாகலிங்கம் நினைவாக வெளிவந்துள்ள "எழுச்சிப் பாதை" சமூக சேவையின் சிறப்பை விளக்கும் விரிவான அறிவுரைக் கட்டுரைகளைக் கொண்டுள்ளது. நூலின் அமைப்பும் உள்ளடக்கமும் நூலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்துகின்றன.

நல்லதோர் சமூகத்தை நோக்கிய எழுச்சிப் பயணத்துக்கு இந்த நூலின் மூலம் விதைகள் தூவப்பட்டுள்ளன எனலாம்.

## நூல்:புகழ் பூத்த நீர்வேலி

*புன்னை மாதுளை புங்கொதி மா புளி*
*தென்னை கூவிளந் தேனுகர் வண்டினம்*
*துன்னுபூக வனந்தொறும் வாழையோ*
*டன்ன தாழை யடர்ந்தது சோலையோ*

எனப் பாவலர் அறிஞர், சிற்சபேசன் அவர்கள் நீர்வேலியின் புகழ் பூத்த வளம்குறித்துப் பாடியுள்ளார்.

"நீரகம் பொருந்தி ஊரகத்திரு" எனும் ஔவையாரின் வாக்கியத்தை மெய்ப்பிக்கும் வண்ணம் நீர்வேலிக் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து வருபவர் சமூக சோதி நீர்வைக் குரிசில் த.பரராசசிங்கம் அவர்கள். அவரின் பெரு முயற்சியால் எழுதி வெளியிடப்பட்ட "புகழ் பூத்த நீர்வேலி" எனும் நூல் எமது கைவரப் பெற்றோம். சமய குரவர்களின் ஆசிகளும் அறிஞர், கல்விமான்கள் பலரின் வாழ்த்துக்களும் நூலை வாசிக்கத் தொடங்குவோரை வரவேற்கின்றன.

உள்ளீடு நீர்வேலியின் அமைவிடம் அங்குள்ள நிர்வாகச் சிறப்பு ஆகியவற்றையும் மற்றும் கல்வி, தொழில், கலை, சமூகம் பற்றியெல்லாம் விரித்துரைத்து வாசிக்கத் தூண்டும் வகை தேர்ந்து எழுதப்பட்டுள்ளமையும் நூலுக்கு வலிமை சேர்க்கின்றன. விளையாட்டுச் சிறப்பும் விருந்தோம்பும் பண்பும் பெரியார், எழுத்தாளர் பற்றிய சிறப்புரைக் கும், பட்டியலும், நூலுக்குப் பெருமை சேர்க்கின்றன.



ஆய்வும் ஆழ்ந்த அறிவும் நிரம்ப ஆக்கப்பட்ட இந்த நூல் நீர்வேலி எனும் கிராமத்தின் மகிமையையும் அதனை நூலகங்கள், பாதுகாக்கப் பயன் பெறும் வகையில் தொகுக்கப்பட்டுள்ள முறைமையையும் வாசகர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்திடல் உறுதியாகும். "புகழ் பூத்த நீர்வேலி" இது நூலின் இரண்டாம் பதிப்பு என்பதைப் பார்க்கையில் நூலின் அவசியமும் சிறப் பும் பலராலும் உணரப்படுத்தல் கண்ட றியப்பட்டுள்ளது. இந்த நூலை ஆக்கிய எழுத்தாளரின் வெற்றியாகும்.

*மகேஸ்.*